# செந்தணல்

SENTHANAL

தணல் 1 கனல் 8 2003 ஒக்டோபர் 25-நவம்பர் 07 16/=




## புலிகள் முன்வைக்கவிருக்கும் திருத்தங்கள் எவ்வாறாக இருந்தாலும் பேச்சுக்களை நடத்துவோம் என்கிறார்

- பிரதமர்





## அருளாளராக்கப்பட்ட அன்னைதெரேசா

செம்மையைச் செப்பிடும் செந்தணல்

சைவ நற்சிந்தனை

## நன்னெறி

வாழ்க்கைக்கு ஒரு ஒழுங்கு இருக்கிறது இந்த ஒழுங்கே மனிதனை ஏனைய உயிரினங்களிலிருந்து வேறுபடுத்துகிறது. நல்ல ஒழுங்கினை நன்னெறி என்றார்கள். இதற்கு மாறானதை புன்னெறிஅல்லது தீநெறி என்றனர். புன்னெறியிற் செல்லும் போக்கு விலக்கப்படவேண்டியது. புன்மையான எண்ணங்களின் வயப்பட்டு வாழ்வின் செயற்பாடுகளை இழிவானவையாக ஆக்குவதனால் மனிதன் பலவகையாலும் துன்பப்படுகின்றான் துயரப்படுகின்றான். இதனாற்றான் ''புன்னெறியதனிற் செல்லும் போக்கினை விலக்கி மேலாம் நன்னெறி ஒழுகச் செய்ய வேண்டும் என முருகப்பெருமானிடம் வேண்டுகிறார் புலவனர். தீய வழியிலே வாழ்ந்தமையாற்றான் பெருந்தவங்கள் செய்தவனாக இருந்தும் சூரபத்மன் பெரும் துன்பப்பட்டான். இறைவனாகிய சுத்தபரம்பொருளிற்கு ஆட்பட்டுப் பிற உயிர்களுக்குத் துன்பம் செய்யாமல் வாழ்வோமானால் அதுவே நன்னெறிப்பட்ட வாழ்வாகும் மறந்தும் பிறர்க்கு இன்னா செய்யாமல் வாழ்வதற்கு முயல்வோமாக.

சைவப்புலவர்
செ.குணபாலசிங்கம் (B.A)




கிறிஸ்தவ நற்சிந்தனை

## நற்பெயர்

உன் பெயரைப் பற்றி அக்கறை கொள் ஆயிரம் பெரிய பொற் புதையல்களை விட உனக்கு அது நிலைத்து நிற்கும் நல் வாழ்க்கை சில நாட்களே நீடிக்கும், நற் பெயர் என்றென்றும் நிலைக்கும்! என்கிறார் ஆண்டவர் அதாவது நாம் உலகிலே வாழுகின்ற போது பல தடைகளும் துன்பங்களும் இன்பங்களும் மகிழ்ச்சியும் மாறி மாறி வந்து போகின்றன உயர்ச்சியும் தாழ்ச்சியும் மலர்ச்சியும் ஏழ்மையும் என மாறிமாறித் தள்ளாடும் வாழ்க்கை நிலையானது அல்ல அதே போன்றே வாழ்வோடு தொடர்பு பட்டவையும் வெறும் புகழ்ச்சிக்காகவும் பெரும் பணமுடைய வசதிக்காகவும் மயங்கி நாம் நல்லவற்றை மறக்கக் கூடாது ஏனெனில் சில நாட்களே இவ்வுலகில் வாழமுடியும் ஆனால் நாம் செய்கின்ற நற்காரியங்களிலாலான நற்பெயர் என்றென்றும் நிலைத்திருக்கும்.

சீராக் 41 (41:20)
மரீனா

இஸ்லாமிய நற்சிந்தனை

## வாழ்க்கை இன்பமுற

வாழ்க்கை என்பது ஒரு முறை தான் வரக் கூடியது. இது இன்பமாக அமைவ தெல்லாம் நன்னடத்தை, நற்குணங்கள். நற்சிந்தனை என்பவைகள் போன்ற மனிதப்பண்புகளைக் கொண்டு தான், இவைகள் பொரும்பாலான மக்களால் பேணப்பட்டால் அனைவருமே நிம்மதியாக வாழலாம். இவைகள் தொடர்பாக இஸ்லாமிய சரித்திரத்தின் நான்காவது ஜனாதிபதியும் முகமது நபியின் மருமகனுமான அலி(றலி) என்பவர் 1400 ஆண்டுகளுக்கு முன் கூறியவைகள் எவ்வளவு அவசியமான வையாகும்.

உனக்கு தெரியாதவைகள் பற்றிப் பேசாதே தெரிந்த யாவற்றையும் பேசியும் விடாதே உனது உறுப்புகள் பற்றி மறுமையில் இறைவனுக்கு பதில் சொல்ல வேண்டும் உன் எதிரியை நீ தண்டிப்பதற்கு சக்திபெற்றிருக்கையில் அவனை நீ மன்னித்துவிடு ஏன் தெரியுமா இது உனக்குக் கிடைத்திருக்கும் அதிகாரத்திற்கு நீ செலுத்தும் நன்றியறிதலாகும்.

உனக்கு அதிஸ்டகாலம் இருக்கும் வரைதான் உன்குறைகள் மறைத்து வைக்கப்பட்டிருக்கும் உங்களிடம் இல்லாத நற்குணங்கள் உங்களிடம் இருப்பதாக கூறிப் புகழும் ஒருவன் அடுத்த மூச்சில் உங்களிடம் இல்லாத குறைகளைக் கூறியும் உங்களைத் தூற்றுவான், உயர்ந்த கல்வியானது தாழ்ந்த பிறப்பை மறைத்துவிடும்

மேற்குறிப்பிட்ட விடயங்களை நாமும் கவனத்திற் கொண்டு செயற்படுவோமாக

மௌலவி.
எஸ். அப்துல்சமட்




அன்பான செந்தணலிற்கு

தணல் 1ஐ முதன் முதலாகப் பார்த்தேன் நிச்சயமாக புதிதாக வெளிவந்த பத்திரிகையைப் போல் அல்லாமல் ஆரம்பமே அமர்க்களமாக அமைந்து விட்டது நடுநிலையான செய்திகள் நாட்டு நடப்புகளுடன் ஜனரஞ்சகமான தொரு பத்திரிகையாகத் திகழும் செந்தணல் இங்கே மலையகச் செய்திகள் ஆக்கங்களையும் இனி வரும் காலங்களில் சேர்த்துக் கொண்டால் இன்னும் சிறப்பாக இருக்கும் வாழ்க! வளர்க!!

பாலா சங்குப் பிள்ளை
ஹட்டன்

அன்புள்ளம் பெருந்திய எனது செந்தணலுக்கு கோடி வந்தனம்.

செந்தணலே உனது புதிய வெளியீடு மிகவும் சூப்பர். வாசிக்கும் தமிழ் நெஞ்சங்களை உன் வசமாக்கி, இலை மறை காய்களாக இருக்கும் விடயங்களை தமிழ் பேசும் மக்களுக்கும், உண்மை சம்பவங்களை உடனுக்குடனும், எடுத்து வைக்கிறாய். எனவே உனது சேவை பல கோடி ஆண்டுகள் வளர எனது இனிய வாழ்த்துக்கள்.

நன்றி

S.தேவகுரர்,
செட்டிக்குளம்

செந்தணலின் ஆரம்பமே சிறப்பாக உள்ளது தமிழ் மக்களின் உள்ளத் தணலை செந்தணலில் காண கூடியதாக உள்ளது நாட்டின் எல்லா பகுதிகளிலிருந்தும் பல்வேறு செய்திகளை காணக் கூடியதாக உள்ளது மேலும் பல அம்சங்கள் செந்தணலில் சேகரித்துக் கொண்டால் மேலும் சிறப்பாய் இருக்கும்

மாரி முத்து சிவகுமார்
இல 86 சைட் வீதி,
ஹட்டன்

# அகிலத்தை அதிசயிக்கவைத்த அன்னைதெரேசா

1997ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 5ம் திகதி ஒரு பெண்மணியின் பலவீனமான சீரற்ற இதயத்துடிப்பு உலகெங்கும் கேட்கிறது. உலகத்து மூலையில் எல்லாம் இலட்சக்கணக்கான மக்கள் அவர் பற்றி ஒரு விநாடியாவது கவலைப்படுகிறார்கள்.


போப்பாண்டவர் விசாரிக்கிறார். இளவரசி டயானா விசாரிக்கிறார். அன்றைய இந்திய பிரதமர் தேவகௌடாவோ இரண்டு பேரை மலர்கொத்துடன் அனுப்புகிறார் ''உங்களிற்கு என்ன வேண்டுமோ செய்யத்தயாராக இருக்கின்றோம்'' என்ற தகவலுடன். அன்னையின் இல்லத்தில் தொடர் பிராத்தனை நடைபெறுகிறது. தொலைபேசி ஒலித்தபடி இருக்கிறது. இந்துக்கள் முஸ்லிம்கள், சீக்கியர்கள் என்று பலர் ஓயாமல் நலம்விசாரித்தபடி இருக்கிறார்கள்.

இவர்களையெல்லாம் கவலைப்பட வைத்தபடி கண்மூடித் தூங்கிக் கொண்டிருக்கும் அந்தப் பெண்மணி யார்?

அவர்தான் அன்னை தெரேசா ''அறக்கொடைகளின் சமயப்பணி'' என்ற அமைப்பின் தலைவியாக 5 தசாப்தங்கள் சமூகப்பணிக்காக தன்னை அர்ப்பணித்தவர் வறுமையில் வாடும் ஏழைகள், இருக்க இல்லிடமின்றி பாதைகளில் உயிரோடு ஊசலாடும் நோயாளிகள் இவர்களை அரவணைத்து காப்பாற்றுவதே அவரது உயிர்மூச்சாக இருந்தது. அவரது இதயத்துடிப்பு என்றோ ஒருநாள் நின்றுதான் போகப்போகிறது. அவரது இதயத்துடிப்பை நாம் எங்கே கேட்ட முடியும்.

அன்னை இல்லத்திற்கு அல்லது நிர்மல் ஹ்ருதய்க்கு அல்லது சிசுபவனிற்கு அதுவுமில்லாவிட்டால் • இந்தியாவில் இருக்கும் 190. அறக்கொடைகளின் சமயப்பணியகத்திற்கு அல்லது உலகெங்கும் இருக்கும் 369 அறக்கொடைகளின் சமயப் பணியகதத்திற்குப்போய்ப்பாருங்கள். தொழுநோயாளிகள் இல்லத்தில் தயாரிக்கப்பட்ட நீலநிற போடர் போட்ட புடவையணிந்த பெண்கள் இருப்பார்கள். அமைதியான அவர்கள் முகத்தை, உழைத்து ஓடாகிப்போன கைகளிலைப் பாருங்கள். மரணத்தை தளுவிக் கொண்டிருப்பவரின் கைகளைப் பிடித்துக்கொண்டு மரண பயணத்தில். துணைபோல்நின்று கொண்டிருப்பார்கள். இவர்கள்மூலமாக அன்னைதெரேசாவின் இதையத்துடிப்பு கேட்பதை உணர்வீர்கள்.

அந்த விசாலமான இதயம்தான் மூச்சுவிட முடியாமல் திணறுகிறது. 1997ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 5ம் திகதி



அந்த இதயம் நின்றுபோகிறது. உலகமே கவலையில் ஆழ்ந்துபோகிறது.

இத்தகையதொரு அதிசயத்தை உருவாக்கிய பெண்மணியார்? 1910ம் ஆண்டு ஒகஸ்ட் 26ம் திகதி அல்பேனியத்தம்பதிகளிற்கு ஒரு பெண் குழந்தை பிறக்கிறது. அந்தப் பெண்குழந்தை 2003ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 19ம் திகதி கத்தோலிக்கமதத்தின் புனிதராக திருநிலைப்படுத்தப்படுவார் என்று எவரும் எண்ணியிருந்தார்களா?

இந்த விசித்திரத்தை விளைவித்தது எது? இதனை அறிந்துகொள்ளவதானால் நாம் 57 வருடங்கள் பின்நோக்கிச் செல்லவேண்டும்.

1946ம் ஆண்டு செப்டெம்பர்மாதம் 10ம் திகதி

பம்பாயில் இருந்து கல்கத்தாவிற்கு செல்லும் ரயில் ஒன்றின் ஜன்னல் ஓரமாக ஒரு பெண்மணி உட்கார்ந்திருக்கின்றார். ரயிலைக்கடந்து செல்லும் மரங்களை இரசித்தபடி பயணம்செய்யும் அந்தப் பெண் கண்களில் இருந்து சேரிகள் கடந்து போகின்றன. நிர்வாணமான குழந்தைகள் கடந்துபோகின்றனர். அழகிய தென்னந்தோப்புகள் கடந்து போகின்றன. பல மாடிக்கட்டிடங்கள் கடந்து போகின்றன.

ஆனால் அந்த சேரிகளும் அந்த சேரியில் நிர்வாணமாக நடந்த குழந்தைகளும் அந்தப்பெண்மணியின் கண்களில் அப்படியே நிலைத்து நிற்கின்றன அந்தப்பெண்ணின் உள்ளத்தில் ஒரு அசரீதி ஒலிக்கின்றது. ''இந்தக்குழந்தைகளிற்காக உன்னை நீ ஏன் அர்ப்பணிக்கக் கூடாது'' அந்தக்கேள்விகளிற்கு அன்னைதெரேசா அளித்தவிடையின் எதிரொலிதான் புனிதராக அவரை புடம்போட்டிருக்கிறது.

வறுமையில் உழன்றுகொண்டிருக்கும் கோடிக்கணக்கான ஏழைகளின் கண்ணீரை உலரவைக்க கடந்த அரை நூற்றாண்டாக •செயற்பட்டு வந்த அந்த மூச்சுக்காற்று சட்டென்று அன்று நின்றுபோனது. அந்த அதிர்ச்சியில் உலகமே குலுங்கிப்போனது.

''அன்னையின் பிரிவால் அனாதைகளான இந்தியர்களில் நானும் ஒருவன்'' என்கிறார் முன்னாள் இந்தியப்பிரதமராக இருந்த குஜ்ரால் இரக்கம் என்ற வார்த்தைகூட அனாதையாகிறது என்றது உலகம். 70 வருடங்களிற்கு முன்னர் ஒரு இளம் கன்னியாஸ்திரியாக தன்னை ஈடுபடுத்திக்கொண்டபோது ''ஒரு மெழுகுவர்த்தியைக்கூட ஏற்றிவைக்க முடியும் என்று நாம் நம்ப முடியாத பெண்மணி'' என்று வாணிக்கப்பட்டவர் அன்னை தெரேசா அன்னை தனது இறுதிமூச்சிற்கு சிலமணி நேரங்களிற்கு முன் சொன்ன வார்த்தைகள்.

தொடர்ச்சி 9ம் பக்கத்தில்...






வத்திக்கானில் 19ம்திகதி ஞாயிற்றுக்கிழமை அன்னைதெரேசா அருளாளராக பரிசுத்த பாப்பரசரால் திருநிலைப்படுத்தப்பட்டுள்ளார் அருகில் அன்னையின் உருவப்படத்தை சிறுமி ஒருத்தி ஆவலுடன் பார்ப்பதையும் காணலாம்.

# மகத்தான இலவச மருத்துவ சேவை

தொடர்ந்தும் பல சமூக சேவைகளை நடாத்தி வரும் ரன் மலு தனியார் ஆடை தொழிற்சாலையானது தனது நான்காவது ஆண்டு நிறைவை முன்னிட்டு அந் நிறுவனத்தின் ரன்மலு விளையாட்டு கழகத்தின் ஏற்பாட்டில் கடந்த செப்டெம்பர் மாதம் 20ம் திகதி அலுவக மருத்துவ சேவையை நடாத்தியது இதன் மூலம் அப்பிரதேசத்தில் வாழும் சுமார் மூவாயிரம் மக்கள் பெரும் பயனடைந்தார்கள் மேலும் கண், காது, போன்றவற்றில் நோய் உள்ளவர்களுக்கும் கர்ப்பிணித் தாய் மார்களுக்கும் விசேட வைத்தியர்கள் மூலமாக சிகிச்சை அளிக்கப்பட்டன இரத்ததானமும் இடம் பெற்ற இந் நிகழ்விற்கு பிரதான இணை அனுசரனையை நெஸ்டமோல்ட் நிறுவனமும், டயலோக் ஜி.எஸ்.எம் நிறுவனமும் சுதேசி நிறுவனமும் வழங்கியது இதன்போது நுவரெலிய மாவட்ட வைத்தியர்களும் தமது இலவச சேவையையும் வழங்கினார்கள்

நுவரெலிய நிருபர்

# பாதை - சீர்திருத்தம் பற்றாக்குறையாகவே உள்ளது

மத்திய மாகாணத்தில் நுவரெலியாவை அண்மித்த பகுதியான ஹய்பேரஸ்ட் செல்லும் வீதியானது தொடர்ந்தும் சீர்திருத்த வேலைகளை மேற்கொண்ட போதும் ஒரு புறம் வேலைகள் செய்து முடிக்க மறுபுறம் வெடித்தும் இடிந்தும் மக்களை சிரமத்திற்குள்ளாக்குகின்றது. இன்நிலையில் மேலோட்டமான வேலைகள் மட்டுமே இங்கே இடம் பெறுகின்றது இதனால் இப்பிரதேசத்தில் வாழும் மக்கள் பெரும் சிரமங்களை எதிர் நோக்குகின்றனர். எனவே உரியவர்கள் இதற்கான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என மக்கள் அவாவுகின்றனர்.

நுவரெலியா நிருபர்

## தொழிலாளியின் கோபத்தினால் தோட்ட உத்தியோகத்தர் தாக்கம்

கந்தபளை நோனா தோட்டத்தில் கடந்தவாரம் தோட்ட தொழிலாளிக்கும் உத்தியோகஸ்தருக்கும் இடையில் ஏற்பட்ட வாக்குவாதம் முற்றி தொழிலாளியால் உத்தியோகஸ்தர்கள் தாக்கப்பட்டுள்ளனர். குறிப்பாக கையில் வெட்டுக்காயங்கள் ஏற்படக் கூடியளவு தாக்கப்பட்டுள்ளனர்

நுவரெலியா நிரபர்

## சமாதான முயற்சிகள் பற்றி பிரதமர் சோனியாவிற்கு விளக்கம்



இந்திய விஜயத்தை மேற்கொண்டிருந்த இலங்கைப்பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இந்திய எதிர்கட்சி தலைவியும் காங்கிரஸ் கட்சித் தலைவியுமான சோனியாகாந்தியை நேற்று சந்தித்து பேச்சுவார்த்தை நடாத்தினார் 1987ம் ஆண்டு இலங்கை இந்திய ஒப்பந்தத்தை அடிப்படையாக வைத்து இரு நாடுகளிற்கும் இடையே இன்றுவரை உறவுகள் வளர்ந்துவந்த விதம் குறித்து எதிர்காலத்தில் அந்த உறவுகளை மேலும் வளர்ப்பது குறித்தும் இச்சந்திப்பில் இரு தலைவர்களும் ஆராய்ந்தனர்.

இந்திய சிவில்விமான சேவை அமைச்சர் ரஜீவ் பிரகாஸ்ரூபியுடனும் இலங்கை பிரதமர் பேச்சு நடாத்தினார் இரு நாடுகளிற்கும் இடையிலான விமான சேவையையும் உல்லாச பிரயாண துறையையும் அபிவிருத்தி செய்தல் சம்பந்தமான அதிகாரிகள் மட்டத்தில் ஆரம்பப்பேச்சுகள் நடத்தபட வேண்டுமெனவும் இப்பேச்சில் தீர்மானிக்கப்பட்டது. ஸ்ரீ லங்கன் விமான சேவை புதுடில்லிக்கு மற்றொரு சேவையை மேற்கொள்ள சந்தர்ப்பம் வழங்க நடவடிக்கை எடுப்பதென இந்தியா இணக்கம் தெரிவித்திருக்கின்றது. இந்திய விமானங்களிற்கு இலங்கையூடாக வேறு சேவைகளை நடத்த சந்தர்ப்பம் வழங்கவும் இணக்கம் காணப்பட்டது. பொருளாதார மறுசீரமைப்பு அமைச்சர் மிலிந்த மொறகொட, பிரதமரின் செயலாளர் பிரெட்மன் வீரக்கோன், வெளிவிவகார செயலாளர் போனாட் குணதிலக்க ஆகியோரும் இப்பேச்சுகளில் கலந்து கொண்டனர்.

# நகர அபிவிருத்தி வேலைகள்

ஊவா மாகாணத்தில் அமைந்துள்ள வெலிமடை, அனுவத்தை ஆகிய நகரங்களில் அமைக்கப்பட்டிருந்த வீதியோர சிறு கடை தொகுதிகள் யாவும் அகற்றப்பட்டு விட்டன. இவ் வியாபாரிகளுக்காக புதிய கடை தொகுதிகளை அமைப்பதற்கான நடவடிக்கைகள் உயர் அதிகாரிகளினால் விரைவாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன எனக் கூறப்பட்டுள்ளது. வீதியோரக்கடைகள் அகற்றப்பட்டமையால் வீதியில் நெரிசல்களினால் அன்றாடம் அவதி நிலைக்குதள்ளப்படும் பெரும்பாலான மாணவர்களும் பொது மக்களும் பெரும் நன்மை அடைகின்றனர்.

நுவரெலிய நிருபர்

## ஆசிரியர் இடமாற்றக் கூட்டம்.

*ஒக்டோபர் 22*

2004ம் ஆண்டு மாகாண, மாவட்டங்களிற்கிடையிலான ஆசிரியர் இடமாற்றங்கள் தொடர்பான தீர்மானங்களை மேற்கொள்வதற்கான சம்மந்தப்பட்ட உத்தியோகத்தர்களிற்கு அழைப்பு வழங்கப்பட்டிருக்கின்றது.

இதுதொடர்பான கூட்டம் எதிர்வரும் 29ம் திகதி மாகாண கல்வித்திணைக்களத்தில் நடைபெறும் இடமாற்றங்கள் கோரி விண்ணப்பித்தவர்களிற்கு அவர்களின் கோரிக்கைக்கால எல்லையை கருத்தில்கொண்டு இடமாற்றத்திற்கான முடிவு செய்யப்படும் என்று மாஹாண கல்விப்பணிப்பாளர் எஸ்.மஹாலிங்கம் தெரிவித்துள்ளார்.

## மாத்தளையில் பஸ் பள்ளத்தில் வீழ்ந்ததில் பெண் பயணிமரணம் 7 பேர் காயம்

மாத்தளையில் பஸ் ஒன்று பாதையை விட்டு விலகி பள்ளத்தில் வீழ்ந்ததில் பயணிகளில் ஒருவர் அந்த இடத்திலேயே மரணமானார் 7 பேர் படுகாயமுற்ற நிலையில் மாத்தளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் இவ்விபத்து நேற்றுக்காலை 7.30 மணி அளவில் இடம்பெற்றுள்ளது. கந்தே நுவர என்ற இடத்திலிருந்த மாத்தளை தனியார் பஸ் ஒன்றே பாதையைவிட்டு விலகி பள்ளத்தில் வீழ்ந்துள்ளது. மாத்தளை கொடபொல பகுதியைச்சேர்ந்த பத்மகுமாரி (30) என்ற பெண்ணே இறந்தவராவார்.

இதேவேளை கலேவல பகுதியில் வாகனம் ஒன்று மோதுண்டு மரணமான நபரொருவரின் சடலம் வீதியில் கிடக்கக்கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. எம்.ஜி கருணா ரத்ன (52வயத) என்பவரின் சடலமே அது என்று பொலிசாரால் அடையாளம் காணப்பட்டுள்ளது.

## 500 பேரிற்கு விரைவில் நிரந்தர நியமனம்

*திருகோணமலை ஒக்டோபர் 22*

தமிழ்மொழி மூல பயிலுனர் ஆசியர்கள் 500 பேரிற்கு விரைவில் நிரந்தர நியமனம்.

இலங்கையின் சகல கல்வியற் கல்லூரியினது பயிற்சி நெறிகளை முடித்துக்கொண்டு அண்மையில் வெளியேறியுள்ள தமிழ் மொழிமூல பயிலுனர் ஆசிரியர்கள் 500 பேரிற்கு அடுத்தவருட முற்பகுதியில் நிரந்தர ஆசிரியர் நியமனம் வழங்கப்படவுள்ளதாக தெரியவருகிறது. மேற்படி நியமனங்கள் வழங்கப்படும் ஆசிரியர்கள் கஷ்ரப்பிரதேசம் அதிகஷ்ரப்பிரதேசம் ஆகிய பிரதேசங்களில் கடமையின் நிமித்தம் நியமிக்கப்படுவர் எனவும் கூறப்படுகிறது. அதேவேளை க.பொ.த உயர்தர பரீட்சையில் வெட்டுப்புள்ளியின் அடிப்படையில் ஆயிரம் ஆசிரியர்களை புதிதாக இணைத்துக்கொள்ள வர்த்தமானி அறிவித்தல் விரைவில் வெளியிடவுள்ளதாகவும் இத்தகவலின்படி ஆங்கில ஆசிரியர்களிற்கான சுமார் 460 நியமனங்களும் கணித, விஞ்ஞான ஆசிரியர்களிற்கான 360 நியமனங்களும் ஏனைய பாடங்களிற்கான எஞ்சிய நியமனங்களும் வழங்கப்படவுள்ளதாக அறியப்படவுள்ளது.

# கலதாரி வழக்கு இழுபறி

## சட்டத்தரணி எதிர்ப்பு

வழக்கை முடிவிற்குக் கொண்டுவரவேண்டுமானால் 11 சாட்சிகளும் நீதிபதிக்குக்கொடுத்த வாக்குமூலங்களையும், சாட்சியங்களையும் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க எதிர்த்தரப்பு சட்டத்தரணி ஆட்சேபனை தெரிவிக்கக்கூடாது என்ற அரசதரப்பின் வேண்டுகோளிற்கு எதிர்த்தரப்பு சட்டத்தரணி கே.வி.தவராசா கடும் எதிர்ப்பு தெரிவித்ததுடன் இது ஒரு முறையற்ற செயல் எனவும் தெரிவித்தார்.

கலதாரி குண்டுவெடிப்பு விசாரணையின்போதே இந்த எதிர்ப்பினை சட்டத்தரணி தவராசா தெரிவித்தார். கடந்த 1997ம் ஆண்டு நவம்பர் மாதம் 28ம் திகதி இடம்பெற்ற குண்டுவெடிப்பு சம்பந்தமாக சந்தேகத்தின்பெயரில் க.பற்குணராஜா என்பவர் கைதானார். சட்டமாஅதிபர் திணைக்களத்தாரால் 1998ம் ஆண்டு யூன்மாதம் 6ம் திகதி பற்குணராஜாவிற்கு எதிராக குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டிருந்தது. இவருக்கு எதிரான விசாரணை 1998ம் ஆண்டு யூலை மாதம் 3ம் திகதி வெலிக்கடை விசேட மேல்நீதிமன்றத்தில் நடைபெற்றபோது சாட்சிகள் பலர் சாட்சியமளித்தனர்.

1999ம் ஆண்டு நவம்பர் மாதம் 15ம் திகதி நடைபெற்ற விசாரணையின்போது மேலும் மூவருக்கு எதிராக குற்றப்பத்திரிகைகள் தாக்கல் செய்யப்பட வேண்டும் என அரசதரப்பில் கேட்கப்பட்டது.

அதற்கு அனுமதி அளிக்கப்பட்டு தம்பிராஜா யோகராஜன் என்கின்ற கண்ணன், சின்னத்துரை செல்வராசா, பூபாலப்பிள்ளை கோணேஸ்வரன் ஆகியோர் சேர்க்கப்பட்டு அவர்களிற்கு எதிராக குற்றப்பத்திரிகைகள் தாக்கல் செய்யப்பட்டது. ஆனால் இன்றுவரை மூவரும் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்படவில்லை அவர்கள் தலைமறைவாகவே உள்ளனர். இவர்களிற்கு அழைப்பாணை பலதடவைகளிற்மேல் அனுப்பப்பட்டும் நீதிமன்றத்தில் இவர்கள் ஆஜராகவில்லை இவர்கள் யாழ்ப்பாணத்தில் இல்லை என பொலிசார் நீதிமன்றத்தில் தெரிவித்ததை அடுத்து பலர் சாட்சியமளிக்க அழைக்கப்பட்டனர். 11 சாட்சிகள் யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பிற்கு விமானமூலம் கொண்டு வரப்பட்டு வழக்கை முன்பு விசாரணை செய்த நீதிபதி மேவின் விஜயதுங்க 11 பேரும் வாக்குமூலம் அளித்தனர். சாட்சியமளித்த பின்பு இதுவரை 11 பேரும் நீதிமன்றத்திற்கு சமூகமளிக்கவில்லை.

இவர்களிற்கு பிடி ஆணை ஐந்து தடவைகள் அனுப்பியும் இவர்கள் நீதிமன்றத்திற்கு சமூகமளிக்கவில்லை நீதிபதிக்கும் அழைப்பாணை விடுக்கப்பட்டு எவரும் நீதிமன்றத்தில் சமூகமளிக்கவில்லை.

இந்நிலையில் கடந்த ஒக்டோபர் மாதம் 18ம் திகதி வெலிக்கடை விசேட நீதிமன்றத்தில் நீதிபதி சுனில் ராஜபக்ச முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே அரசதரப்பினர் வாக்குமூலங்களை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க அனுமதி கேட்டனர். இதற்கு கடும் ஆட்சேபனை தெரிவித்த சட்டத்தரணி தவராசா பயங்கரவாத தடைச்சட்டத்தின் 18ம் பிரிவின் நீதிபதி ஒருவரிற்கு அளிக்கப்படும் வாக்குமூலம் செல்லுபடி ஆகுமெனவும் வாதிட்டார். அவர் தனது வாதத்தின்போது மேலும் தெரிவித்ததாவது,

சந்தேகத்தின்பேரில் 1997ம் 'ஆண்டு நவம்பர்மாதம் 28ம் திகதி கைதுசெய்யப்பட்ட பற்குணராஜா கடந்த ஆறுவருடங்களாக தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளார். குற்றவாளியாக காணப்பட்ட இவர் தண்டிக்கப்படலாம், குற்றவாளியல்லவென்றால் விடுதலை செய்யப்படலாம். ஆனால் கடந்த 6 வருடங்களாக வழக்குகள் ஒரு முடிவிற்கு வராமலே இழுத்தடிக்கப்பட்டு வருகிறது. சட்டத்தரணி இவ்வாறு தெரிவித்தார்.

சாட்சிகளின் வாக்குமூலங்களை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க சட்டத்தரணி தவராசா ஆட்சேபனை தெரிவித்ததை அடுத்து, இந்தவழக்கில் மேலும் ரம் ஒருவரை இணைத்து அவருக்கு எதிராக குற்றப்பத்திரம் தாக்கல் செய்ய அரசதரப்பு நீதிமன்றத்தில் அனுமதி கோரியது.

சட்டத்தரணி தவராசா இதற்கும் கடும் எதிர்ப்பு தெரிவித்தார்.

எதிரியை மேலும் பலவருடங்களுக்கு தடுப்புக்காவலில் வைத்திருக்கும் நோக்கத்துடனேயே அரசதரப்பு மீண்டும் இன்னொருவரை புகுத்தும் நாடகத்தை ஆரம்பித்திருக்கிறது. ஏற்கனவே புகுத்தியவர்களே இன்னும் தலைமறைவாகி உள்ளனர் மேலும் மேலும் பலரை இந்தவழக்கில் சம்பந்தப்படுத்த முயல்வது சட்டத்திற்கு முறனானது, அநீதியானது எனவும் சட்டத்தரணி தெரிவித்தார்.

வழக்கொன்றில் இன்னொருவரை சம்பந்தப்படுத்தும் அதிகாரம் குற்றவியல் சட்டக்கோவையின் 180ம் பிரிவின் கீழ் நீதிபதிக்கு மட்டுமே உண்டு எனவும் தவராசா சுட்டிக்காட்டினார். அரசதரப்பின் வேண்டுகோள் நிராகரிக்கப்பட்டது.

11 சாட்சிகளிற்கும் மீண்டும் அழைப்பாணை அனுப்புவதற்கு அரசதரப்பு அனுமதியும் அவகாசமும் கேட்டதைத் தொடர்ந்து இம்மாதம் 28ம் திகதிக்கு வழக்கு ஒத்திவைக்கப்பட்டது.

*நமது நிருபர்*

## தமிழ் உயிரோட்டமுள்ள கலையம்சம் தமிழ் இலக்கிய விழாவில்

**வவுனியா அரச அதிபர்**

தமிழ் உயிரோட்டமுள்ள கலையம்சங்களைக் கொண்ட வரலாற்றுப் பண்பாட்டு கலாச்சாரத்தைக் கொண்டது என்று கூறினார். வடக்குக் கிழக்கு தமிழ் இலக்கிய விழாவில் வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் 17ம் திகதி வெள்ளிக் கிழமை வவுனியா இறம்பைக்குளம் மகளிர் வித்தியாலய கேட்போர் கூடத்தில் இவ்விழா இடம் பெற்றது எங்களுடைய இலக்கியங்கள் பேணிப் போற்றப்பட வேண்டியவை. அதே வேளை அதை உருவாக்கியவர்களையும் கௌரவிக்க வேண்டும் என்பதற்காகவே இவ்விழா வருடா வருடம் நடாத்தப்படுகிறது என்றார்.

கடந்த காலங்களில் நாட்டு நிலைமை காரணமாக கூடுதலான பேராளர்கள் நடைபெற்ற ஆய்வரங்குகளில் கலந்து கொள்ளவில்லை. ஆனால் இம்முறை நடைபெற்ற ஆய்வரங்கில் நாட்டின் பல பாகங்களையும் சார்ந்தவர்கள் கலந்து கொண்டமை ஒரு வெற்றியாகவே அமைந்துள்ளது.

ஒயிலாட்டம், மயிலாட்டம், கோலாட்டம், கரகாட்டம், கும்மி, பொய்க்கால் குதிரையாட்டம் சகிதம் நடைபெற்ற அலங்கார இலக்கிய ஊர்திப்பவனியில் பெருமளவு மக்களும் கலந்து கொண்டனர். இவ் ஊர்வலம் தமிழ் மத்திய மகாவித்தியாலயத்தில் ஆரம்பித்து நகரூடாக மண்டபத்தை சென்றடைந்தது. மாகாண ஆளுனரின் செயலாளர் எஸ்.அமிர்தலிங்கம், மாகாணக்கல்வி அமைச்சின் செயலாளர் ஆர்.தியாகலிங்கம், வவுனியா மாவட்ட மேலதிக அரச அதிபர் சி.இரகுநாதப்பிள்ளை, பிரதேச செயலாளர் கே.எஸ்.செல்வராஜா, சுத்தானந்த இந்து இளைஞர் சங்கத் தலைவர், இறம்பைக்குளம் மகாவித்தியாலய அதிபர் போன்றோர் கலந்து கொண்டனர்.

அலுவலக நிருபர்.

செந்தணல்
"செம்மையைச் செப்புவோம்"
சூரியன் வெளியீட்டகம்
61, கற்குழி,
வவுனியா
தொலைபேசி : 024-23891
தொலை நகல் : 024-23891

அன்புடன்
வாசக உள்ளங்களுக்கு,
வணக்கம்

1956இல் இருந்து இன்றுவரை நாட்டில் நடந்தேறிய வன்முறைச்சம்பவங்களின் எதிரொலியாக ஏறத்தாள 70ஆயிரம் தமிழ் மக்களின் கொலைகளும் 6ஆயிரத்திற்கு மேற்பட்ட பெண்கள் சிறுவர்கள் மீதான பாலியல் வன்முறைகள் துஸ்பிரயோகங்கள் என்பன இன்றும் சான்றுபகர்கின்றன.

பேரினவாதமானது உயரத்தில் உட்கார்ந்துகொண்டு தன்மானத்தை தலைகொள்ள தடம்போடுகிறது. தமிழா சுயகௌரவத்தை காப்பாற்றிக்கொள்ளவும் தங்கள் உரிமைகளை வென்றெடுக்கவும் மேற்கொண்ட அரசிற்கு எதிரான அகிம்சைப் போராட்டங்களில் நியாயம் பெறவில்லை. ஆயுதத்தை ஏந்தி ஆண்டுகள் பல போராடியதன் பயன்தான் பல வெற்றிகள்-அவர்கள் கையில் இன்று. இவர்கள் வீரத்தையும் விவேகத்தையும் புரிந்துகொண்டு இவர்களை பேச்சுமேடைகளிற்கு அழைத்தது.

கடந்தவாரம் கூட இலங்கை வந்திருந்த கனடாவின் வெளியுறவு அமைச்சர் பில்கிரஹம் இலங்கை இனப்பிரச்சனை தொடர்பாக கருத்துத் தெரிவித்தார். புலிகள் சர்வதேச சமூகத்தின் ஆதரவைப்பெற்று வருகின்றனர் அவற்றை தொடர்ந்து பேணவேண்டும். பொதுவாக வெளிநாடுகளின் பிரதிநிதிகள் இலங்கை வந்து செல்லும்போது வெளியிடும் வழமையான போதனைகளே இவை ஒருசில வார்த்தைகள் மாறினாலும் சாராம்சம் ஒன்றாகவே இருக்கும். அதாவது புலிகள் ஈழக்கோரிக்கையை கைவிடவேண்டும் ஏனைய அரசியற் கட்சிகள் போல் பாராளுமன்ற ஆசனங்களில் அமர்ந்து கைகளை உயர்த்தி பணத்தினைப்பெற்று வசதியாக வாழவேண்டும்.

தற்பொழுது பத்திரிகைகள் ஏனைய ஊடகங்கள் என எல்லோரும் பரபரப்பாக கூறப்படுகின்ற பேசப்படுகின்ற ஒரு இலங்கைத்தமிழர் முன்னாள் பொலிஸ்மாஅதிபர் ரி.ஈ.ஆனந்தராஜாவாகும்.

முன்னாள் பொலிஸ்மா அதிபர் ரி.ஈ.ஆனந்தராஜாவின் பதவி நீடிப்பானது இன்று இனவாத இருட்டுக்குள் முடங்கிக்கிடக்கின்றது.

அரசாங்கம் இவரது பதவி நீடிப்பைச் சிபரிசு செய்தும் ஜனாதிபதி மௌனம் சாதிக்கிறார். சிங்களம் தமிழ் என்ற இனவாதக்கெடுபிடிக்குள் தமிழர்களிற்கு உயர்பதவி கிடைப்பதென்பதும் கிடைத்தாலும் அதனை தக்கவைப்பதென்பதும் முடவன் கொம்புத்தேனாகிவிட்டது.

35 வருடங்கள் கடுமையாக உழைத்து இலங்கை வரலாற்றில் இரண்டாவது தமிழ் பொலிஸ்மா அதிபர் என்ற இடத்தைப் பெற்றவர் ரி.ஈ.ஆனந்தராஜா அவர்கள் தொடர்ந்தும் ஆசனத்தை அலங்கரிக்க பேரினவாதம் அவரை விடவில்லை.

இவ்வாறு இன்று இரண்டு தசாப்தங்களாக தமிழர்களிற்கு ஓரவஞ்சனை நடக்கிறது. யார் தட்டிக்கேட்பது பயம் தமது பதவி போய்விடுமென. தட்டிக்கேட்டால் - பயங்கரவாதம் இப்படியேபோனால் இன்னும்இருக்கின்ற ஒருசில உயர்பதவி தமிழர்களிற்கும் தமது பதவிகள் நீடிக்குமா எனும் அச்சம் ஏற்படத்தான் செய்கிறது.

அன்புடன்
ஆசிரியர்.

# ஆனந்தராஜா விவகாரம் ஆனந்தமாய் இல்லையே

முன்னாள் பொலிஸ்மா அதிபர் ரி.ஈ. ஆனந்தராஜாவின் பதவி நீடிப்பு இனவாத இருட்டுக்குள் முடங்கிவிட்டது. பேரினவாதம் என்ற பேய் இன்னும் நமது நாட்டையும் சுற்றுச்சுழலையும் மாசுபடுத்திக்கொண்டிருக்கிறது, என்பதற்கு இவரது பதவி நீடிப்பு மறுக்கப்பட்டது நல்ல உதாரணம்.

பேரினவாதம் உச்சாணிக்கொம்பில் உட்கார்ந்து கொண்டு தமிழினத்தின் தன்மானத்தை தலைகுப்பற வீழ்த்தியிருக்கின்றது.



அரசாங்கம் இவரது பதவி நீடிப்பை சிபாரிசு செய்து ஜனாதிபதிக்கு அனுப்பி இருந்தும் கூட ஜனாதிபதி மௌனம் சாதிப்பதன் மர்மம் என்னவென்றுதான் தமிழ் மக்களிற்குப் புரியவில்லை. இந்த நாடு சுதந்திரம் பெற்றதில் இருந்து இனவாத அரசியலே இங்கு நடந்து கொண்டிருக்கிறது. இன்று இனவாதம் உச்சக்கட்டத்தை அடைந்திருக்கின்றது.


1956இல் இருந்து இன்றுவரை இந்த நாட்டில் நடந்தேறிய வன்முறைச் சம்பவங்களின் எதிரொலியாக ஏறத்தாழ 70ஆயிரம் தமிழ் மக்கள் கொன்று குவிக்கப்பட்டிருக்கின்றனர். 6ஆயிரத்திற்கும் மேற்பட்ட பெண்கள் பாலியல் வன்முறைக்குட் படுத்தப்பட்டுள்ளனர்.

தமது சுயகௌரவத்தை காப்பாற்றிக் கொள்ளவும், தமது உரிமைகளையும் வெண்றெடுக்கவும், தமிழ் மக்கள் அரசிற்கெதிராக நடத்திக்காட்டிய அகிம்சைப் போராட்டங்கள் எல்லாம் அர்த்தமற்றுப் போனதனால் இளைஞர்கள் ஆயதம் ஏந்திப் போராட தம்மை தயாரித்துக் கொண்டு கடந்த 20வருடங்களாக போராடிவந்தனர். போராட்டத்தில் பல வெற்றிகளை ஈட்டினர். அவர்களின் வீரத்தையும் விவேகத்தையும் புரிந்துகொண்ட அரசுகள் அவர்களை பேச்சுவார்த்தை மேசைக்கு அழைத்தனர். அவையும் பிசுபிசுத்துப் போயிற்று.

சிங்கள மக்கள் தமிழர்கள் அனைவரையும் புலிகள் என எண்ணத் தலைப்பட்டனர், இராணுவத்தின் கெடுபிடிகள் அதிகரித்தன. இந்த சூழ்நிலையில் தமிழர்களிற்கு அரசாங்கத்தில் உயர் பதவிகள் கிடைப்பதென்பது அரிதாயிற்று அப்படி இருந்தும் தமது திறமையாலும், கண்ணியத்தாலும், நேர்மையாலும் ஒரே காலகட்டத்தில் இரண்டு தமிழர்கள் அரசின் மிக உயர்ந்த பதவிகளைப் பெற்றனர். ஒருவர் கமலசபேசன் இவர் சட்டமா அதிபர், மற்றவர் ரி.ஈ.ஆனந்தராஜா இவர் பொலிஸ்மா அதிபர்.

1967ம் ஆண்டு சப்இன்ஸ்பெக்டராக பொலிஸ் சேவையில்ச் சேர்ந்த ஆனந்தராஜா 37 வருடங்களிற்குப்பின் இந்த உயர்பதவியைப் பெற்றார். இந்த நாட்டின் வரலாற்றில் ஆனந்தராஜா இரண்டாவது தமிழ் பொலிஸ்மா அதிபர் 26வது பொலிஸ்மா அதிபர் மிகவும் திறமைசாலியான இவரது கட்டுப்பாட்டில் 5 சிரேஸ்ட பொலிஸ்மா அதிபர்கள் 40 பிரதிப்பொலிஸ்மா அதிபர்கள் இருந்தார்கள். 54 பொலிஸ் பிரிவுகளும் 344 பொலிஸ் நிலையங்களும் இருந்தன. கசிப்பு விற்பனை, கெரோயின் விற்பனை இவரது கட்டுப்பாட்டிற்குள் வந்தமை குறிப்பிடத்தக்கது. கடந்த ஒருவருட காலத்தில் தமக்கு கீழ் கடமையாற்றிய உயர் பொலிஸ் அதிகாரிகளின் நன்மதிப்பையும், அன்பையும் ஒருங்கே சம்பாதித்துக்கொண்ட பெருமை இவருக்கு உண்டு. இவரது பதவிநீடிப்பிற்கு அரசு சிபாரிசு செய்த காலகட்டத்தில் இவர் மீது பொய்யான புரளிகளைக் கிளப்பி சேறு பூச முற்பட்டனர் சில இனவாதக் குழுக்கள். இவரது குற்றச்சாட்டுகளிற்காக உள்துறை அமைச்சு நியமித்த விசாரணைக்குழு விசாரணையின் முடிவில் இவரிற்கு எதிரான குற்றச்சாட்டுகளிற்கு எதுவித ஆதாரங்களும் கிடையாது என ஆணித்தரமாக அறிவித்தது. இதற்குப்பின்பும் ஜனாதிபதி மௌனம் சாதித்ததை அடுத்து கண்ணியத்தோடும் பெருந்தன்மையோடும் தாம் இளைப்பாறுவதாக அறிவித்துவிட்டு ஓய்வுபெற்றார்.

இவர் மீண்டும் பொலிஸ்மா அதிபராக வரவேண்டிய அவசியம் இல்லை என்றாலும் இவரிற்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு ஒரு முற்றுப்புள்ளி தேட வேண்டும். இன்று ஆனந்தராஜாவிற்கு ஏற்பட்ட



துர்ப்பாக்கிய சம்பவம் நாளை கமல சபேசனிற்கு ஏற்படாது என்று என்ன நிட்சயம்.

இவரோடு கடமைபுரிந்த உயர் பொலிஸ் அதிகாரிகள் இவர்மீது எவ்வளவு நம்பிக்கை வைத்திருந்தார்கள் என்பதற்கு சின்ன உதாரணம் உண்டு. இவர்மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளை விசாரணைசெய்ய எந்தவொரு குழுவிற்கும் அதிகாரம் இல்லை பாராளுமன்றத்தால் தெரிவு செய்யும் குழுவிற்குமட்டுமே இவர் குறித்து விசாரணை செய்ய அதிகாரம் உண்டு என இதனை எதிர்த்து உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்ய முன்வந்துள்ளார் பிரதி பொலிஸ்மா அதிபர் லக்கிபீரிஸ்.

கசிப்பு விற்பனையாளர்களினதும் ஹெரோயின் விற்பனையாளர்களினதும் எதிர்காலமோ அல்லது அவர்களது இருண்டகாலமோ என்பது இனிவரும் பொலிஸ்மா அதிபரின் கையில்தான் தங்கியுள்ளது என சிலர் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

தாமோதர ஆசான்

## நீற்றா-கொலை வழக்கு


நமது நிருபர்

நீற்றா ஜோன்ஸ் கொலை வழக்கில் குற்றவாளிகளாகக்காணப்பட்ட நான்கு எதிரிகளிற்கும் கொழும்பு மேல்நீதி மன்றம் வழங்கிய மரணதண்டனைத் தீர்ப்பை எதிர்த்து உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த வழக்கு இரண்டாம் தடவையாக விசாரணைக்குட்படுத்தப்பட்டு தீர்ப்பிற்காக காலவரையறை இன்றி ஒத்திவைக்கப்பட்டது.

இந்தவழக்கை முதற்தடவையாக விசாரணைசெய்த ஐந்து நீதியரசர்களில் ஒருவரான டி.பி.எஸ்.குணசேகர மரணமானதை அடுத்து மீண்டும் நீதிஅரசர்கள் ஐவர் நியமிக்கப்பட்டனர். இந்த நீதிஅரசர்கள் ஐவரில் நீதிஅரசர் நிஹால் ஜெயசிங்க அவர்களே புதிதாக சேர்த்துக்கொள்ளப்பட்டவர். ஏனையோர் முன்னைய குழுவில் இடம்பெற்றவராவர்.

நீதிஅரசர்கள் அமீர்இஸ்மயில் பி.எதுரிசூரிய, சி.வி.விக்னேஸ்வரன், எஸ்.எச்.யாப்பா, நிஹால்சிங்க ஆகியோரே புதிதாக நியமிக்கப்பட்ட ஐந்து நீதியரசர்களாவார்.

முன்னைய விசாரணையின்போது தீர்ப்பிற்காக ஒத்திவைக்கப்பட்டவேளை நீதிஅரசர் டி.பி.எஸ் குணசேகர காலமானதை அடுத்து தீர்ப்பு பின்போடப்பட்டது. கடந்த திங்கட் கிழமை நடந்த விசாரணையின்போது மனுதாரர்களின் சட்டத்தரணிகள் எழுத்துமூல சமர்ப்பணங்களை நீதிமன்றத்தில் சமர்பிக்கவில்லை. எனவே ஏற்கனவே சமர்பிக்கப்பட்ட எழுத்துமூல சமர்ப்பணங்களுடன் மேலதிகமான சமர்ப்பணங்கள் டிசம்பர் மாதம் 10ம் திகதிக்கு முன் சமர்பிக்கும்படி மனுதாரர்கள், மற்றும் எதிர்தரப்பு சட்டத்தரணிகள் ஆகியோரை நீதிஅரசர்கள் கேட்டுக்கொண்டனர்.




1998ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 17ம் திகதி மோதறையில் உள்ள காக்கைதீவு என்ற இடத்தில்வைத்து நீற்றா ஜோன்ஸ் மனோகரன் என்பவரை கடத்திச் சென்று, நகைகளை கொள்ளையடித்து அவரை பாலியல் வல்லுறவிற்குட்படுத்தி கொலை செய்ததாக மூவர்மீது குற்றப் பத்திரிகை தாக்கல்செய்யப்பட்டிருந்தது.

அஜித் பெர்னான்டோ, பெசில்மென்டிஸ், பி.சந்திராபெரேரா ஆகியோரே எதிரிகளாவார் எதிரிகளிற்கு எதிரான விசாரணை கொழும்பு நீதிமன்றத்தில் ட்ரயல் அட் பார் முறையில் விசாரணை நடைபெற்று மூவரும் குற்றவாளிகளாகக்காணப்பட்டு மூவருக்கும் மரணதண்டனைத் தீர்ப்பு வழங்கப்பட்டது. இதனை எதிர்த்து மூவரும் உயர்நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்திருந்தனர்.


மனுதாரர்கள் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி கலாநிதி. ரஞ்ஜித் பெர்னாண்டோ ஆஜரானார் எதிர்மனுதாரர்கள் சார்பில் சொலிசிட்ட ஜென்றல் சி.ஆர்.டி சில்வாவுடன் சட்டத்தரணிகள் ஹரிப்பிரிய ஜயசுந்தர, வசந்தபண்டார ஆகியோர் ஆஜராகியிருந்தனர்.

மனுதாரர்கள் தமது மனுவில் குறிப்பிட்டிருப்பதாவது,

இக்கொலையில் சம்பந்தப்பட்ட ஒருவர் அரசதரப்பின் சாட்சியமாக அழைப்பதன் மூலம் அவரை வழக்கில் இருந்து விடுதலைசெய்தும் விசாரணையின் போது சாட்சியமாக அவரை அழைக்காமல் தீர்ப்பு வழங்கியமை நீதிக்குப்புறம்பானது எனக்குறிப்பிட்டுள்ளனர்.

விசாரணை டிசம்பர்மாதம் 10ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

# உலகச் செய்திகள்



விண்வெளியில் 21மணிநேர பயணத்தின் பின்னர் மொங்கோலிய பிரதேசத்தில் கடந்த வியாழன் அன்று தரை இறங்கிய சீனாவின் சென்சூப விண்கலத்தின் கதவைத்திறந்துகொண்டு சாதனை விண்வெளி வீரர் ஜாங்ளி வெற்றிப்பெருமிதத்துடன் வெளியேறியதையும் தரைஇறங்கிய விண்கலத்தின் பகுதியை விஞ்ஞானிகள் சோதனையிடுவதையும் படத்தில் காணலாம்




ஆசியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டிருக்கும் அமெரிக்க ஜனாதிபதி ஃபுஸ் வியாழனன்று அவுஸ்திரேலியா சென்றிருந்தார் அவரின் வருகைக்கு எதிர்ப்பு தெரிவித்து அவுஸ்திரேலிய தலைநகரம் சிட்னியில் 19ம் திகதி இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தினை படத்தில் காணலாம்.

## தாவூத் இப்ராஹீம் பாகிஸ்தானில் இல்லை

சர்வதேச பயங்கரவாதி என்று அமெரிக்கா அறிவித்துள்ள தாவூத் இப்ராஹீம் பாகிஸ்தானில் இல்லை என்று பாகிஸ்தான் செய்தித் துறை அமைச்சர் ஸேக் ரஸித் சனிக்கிழமை தெரிவித்தார். மும்பை தொடர் குண்டு வெடிப்பில் பிரதான குற்றவாளி தாவூத் இப்ராஹீம் இவரை ஒப்படைக்குமாறு இந்தியா பாகிஸ்தானிடம் கோரி வருகிறது தாவூத் இப்ராஹீம் பாகிஸ்தானில் இருப்பதாக அமெரிக்காவும் தெரிவித்துள்ள நிலையில் அதை பாகிஸ்தான் மறுத்துள்ளது.

## சிரியா மீதான அமெரிக்கத் தடையை மலேசியா கடுமையாக விமர்சிப்பு

மலேசியாவில் நடைபெற்ற இஸ்லாமிய நாடுகளது உச்சி மாநாட்டின் நிறைவு நாளான நேற்று சிரியா மீது வர்த்தகத் தடைகளை ஏற்படுத்துவதற்கு ஆதரவாக அமெரிக்கக் காங்கிரஸ் வாக்களித் தமையை மலேசியா விமர்சித்துள்ளது இவ்வாறு தடையை ஏற்படுத்தியது மிகவும் ஆபத்தான செயற்பாடென்றும் மலேசியா தெரிவித்துள்ளது சிரியா பயங்கர வாதத்திற்கு அனுசரணை வழங்குவதை நிறுத்தி விட்டது என்றும் வெள்ளை மாளிகை தெரிவிக்கும் வரை சிரியா மீது வர்த்தக தடைகளை ஏற்படுத்துவதற்கு ஆதரவாக அமெரிக்க ஜனாதிபதிப் பிரதி நிதிகள் சபை வாக்களித்திருந்தது. இதனை மலேசியா வெளிவிவகார அமைச்சர் சயிட் றபிட் அப்பார் கடுமையாக விமர்சித்துள்ளார் சிரியா மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்தியதற்கு சிரியா மீது தடை விதிக்கப்பட்டுள்ளது என்று அவர் தெரிவித்துள்ள்ர்ர்.

## காளையை அடக்கிய மங்கை




எருது காளைகளை காளையர்கள் தான் அடக்க முடியுமா? கன்னியராலும் முடியும் என்பதை 27 வயதான கிறிஸ்டியானா சான் செங் நிருபித்துக் காட்டியுள்ளார் 1998 இல் மாட்றெட்டில் நடந்த லாஸ்வென்டாஸ் வட்ட வடிவமான மைதானத்தில் இவர் வெற்றி பெற்று உலகின் முதல் பெண் காளைச் சண்டை வீராங்கனையானார் இவருடன் போட்டியிட்ட சக ஆண் வீரர்களின் நடவடிக்கைகள் காரணமாக இவர் இந்த விளையாட்டிலிருந்து ஒதுங்கிக் கொண்டார் காளையை அடக்கலாம். காளையரை என்ன செய்வது?

## பிலிப்பைன்சிற்கு இராணுவ உதவி அளிப்பதாக அமெரிக்க ஜனாதிபதி

தீவிர வாதிகளை எதிர்த்துப் போராடி வரும் பிலிப்பைன்ஸ் நாட்டுக்கு இராணுவ உதவிகளைச் செய்யவும் நட்புடன் இருக்கவும் அமெரிக்கா தயார் என்று ஜனாதிபதி ஜோர்ஜ் புஸ் உறுதியளித்தார். பிலிப்பைன்ஸ் நாட்டுப் பாராளுமன்றத்தில் வெள்ளிக் கிழமை அவர் உரையாற்றினார் அப்போது இந்த உறுதி மொழியை அளித்தார் பயங்கர வாதத்துக்கு எதிரான போரில் உறுதியாக ஒத்துழைப்பதற்காக பிலிப்பைன்ஸ் அதிபர் குளோரியா அராயோவைப் பாராட்டினார். அடிசய்யாஃப் ஜெமா .ஸ்லாமிய என்ற தீவிரவாத குழுக்களை அழிக்க வேண்டும் என்று புஸ் வலியுறுத்தினார் ஐந்து ஆசிய நாடுகளிலும் அவுஸ்திரேலியாவிலும் ஜோர்ஜ் புஸ் சுற்றுப்பயணம் மேற்கொண்டு வருகிறார் ஈராக்கின் புது வாழ்வுக்கு நிதி திரட்டவும் அமைதிகாப்புப் பணிக்கு துருப்புகளை அனுப்புமாறு கேட்கவும் இப்பயணத்தை அவர் மேற்கொண்டுள்ளார்.

## ஆணின் வயிற்றில் கருப்பை

இந்தியாவின் மத்தியப் பிரதேசத்தில் ஓர் ஆணின் வயிற்றில் இருந்த கருப்பையை மருத்துவர்கள் அறுவைச் சிகிச்சை மூலம் அகற்றியுள்ளனர் சுனில் சா துருவா (28) என்ற அந்த இளைஞருக்கு அடிவயிற்றில் மாதந்தோரும் வலியேற்பட்டு வந்தது சிறு வயதிலிருந்தே இந்த வலி அவருக்கு ஏற்பட்டு வந்தது என்று அவரது தந்தை பூலன் சா கூறினார் ஒரு வேளை குடலிறக்க நோயாக (ஹேர்னியா) இருக்குமோ என்ற சந்தேகத்தில் சிறந்த மாவட்ட மருத்துவமனை டாக்டர்கள் அவருக்கு திங்கட் கிழமை அறுவைச் சிகிச்சை செய்தனர் அப்போது வயிற்றில் கருப்பை இருந்ததைக் கண்டனர் அந்தக் கருப்பை பரிசோதனைக்காக நாகபுரியில் உள்ள ஆய்வகத்துக்கு அனுப்பப் பட்டுள்ளது என்று அறுவைச் சிகிச்சை செய்த டாக்டர் கே.கே.ஸ்ரீவஸ்தவா தெரிவித்தார். ஆண் பெண் இரு பாலினங்களும் இணைந்த அபூர்வ தன்மை இவருக்கு இருக்கலாம் என்று மருத்துவர்கள் கூறினார்கள், சுனில் ஸாவுக்கு இரு மகன்மார் உள்ளனர்.

## செய்திக்கதிர்

### பாத யாத்திரை

*-அன்பன் மட்டக்களப்பு-*

சிறுபான்மை மக்களுக்கு
ஏதாவது செய்ய வேண்டும் என்ற
முயற்சிகள் மேற்கொள்ளப்படும்
போதெல்லாம்
இனவாதிகளின் பாத யாத்திரைகள்
ஆரம்பமாகி விடும்
ஜே.ஆர்.ஜெயவர்த்தன மேற்கொண்ட
களனி யாத்திரை
இதன் பிள்ளையார் சுழி ஆகியது
இன்று சாத்தானும் வேதம் ஓதுகின்றது
இன ஒற்றுமை சமாதானம்
அதற்கான இடைக்கால நிர்வாகம் என்ற
முயற்சிகள் பேசப்படும போது
ஜே.வி.பி பாத யாத்திரை
மேற்கொள்கின்றது
பொய்ப்பிரசாரம் செய்து
சிங்கள மக்களை தமிழர்களுக்கு
எதராக திருப்பி விடுவதன் மூலம்
எக்காலத்திலும் இந்நாட்டில்
சமாதானம் ஏற்படாமலிருக்க
ஜே.வி.பி பாடு படுகின்றது
சிங்கள மக்களைப் போன்று
சம உரிமையுடன்
சிறுபான்மை மக்களும் வாழ வேண்டும்
என்பதை சிங்கள மக்கள் மத்தியில்
எடுத்துச் சொல்வதற்கும்
பாத யாத்திரைகள் மேற்கொள்ளப்பட
வேண்டும்
யார் இதைச் செய்வார்?
அரசாங்கமே இதைச் செய்யவேண்டும்
சமாதான விரும்பிகள்
நாட்டின் நலன் விரும்பிகள்
இதைச் செய்யவேண்டும்
அப்படியொரு அற்புதம் இந்த நாட்டில்
நடக்குமா?

# பேச்சு.... பேச்சு.... பேச்சு....! இன்றேல் போச்சு... போச்சு... போச்சு...!

ஆரணி

தமிழ் மக்கள் தொடர்பாக ஐக்கியதேசிய முன்னணி அரசாங்கத்திற்கிருக்கும் பிரச்சனை, விடுதலைப் புலிகள் மீண்டும் பேச்சுகளை பங்குபற்றுவதுடன் தீர்ந்துவிடக் கூடியதென்பதும், அதே வேளை புலிகளின் பிரச்சனையாக இருப்பது இடைக்கால நிர்வாகத்தையும் அகசுயநிர்ணய உரிமையுடன் கூடிய சமஸ்டித்தீர்வை தென்னிலங்கை அங்கீகரிக்கும்வரை தீரமுடியாத ஒன்று என்பதும் புரிந்துகொள்ளப்பட வேண்டும். மேம்போக்கில் இவ்விடயத்தைப்பார்ப்பவர்கள் தீர்வு மிகவும் சுலபமானதாக இருப்பதாக எண்ணுகிறார்கள்.



கடந்தவாரம் இலங்கை வந்திருந்த கனடாவின் வெளியுறவு அமைச்சர் பில்கிரஹம் இலங்கை இனப்பிரச்சனை தொடர்பாக கருத்துத்தெரிவித்தார். புலிகள் உடனடியாக பேச்சுக்களிற்குத் திரும்ப வேண்டும். சர்வதேச சமூகத்தின் மகத்தான ஆதரவை தவறவிடக் கூடாது. சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஜனநாயக கொள்கைகளிற்கு அமைவாக நடந்துகொள்ளும் அரசியல் அடிப்படையிலான நிர்வாகத்தைக்கொண்ட அமைப்பாகப் புலிகள் தம்மை மாற்றிக் கொள்ள உடனடி நடவடிக்கைகள் எடுக்கவேண்டும். புலிகள் மனிதஉரிமைகளையும், அரசியல் பல்லினத்தன்மையையும் சொல்லளவிலும், செயலளவிலும் மதித்து நடக்கவேண்டுமெனவும் அறிவுரை கூறியிருந்தார்.



வெளிநாடுகளின் பிரதிநிதிகள் இலங்கைவந்து செல்லும்போது வெளியிடும் வழமையான போதனைகளே இவை. நாட்டிற்கு நாடு ஓரிரு வரிகள் மாறினாலும் சாராம்சம் ஒன்றாகவே இருக்கும். அதாவது, விடுதலைப் புலிகள் ஈழக்கோரிக்கையையும், ஆயுதப் போராட்டத்தையும் கைவிட வேண்டும். அதன்பின் ஏனைய அரசியற்கட்சிகள், அமைப்புகளுடன் கைகோர்த்துக் கொண்டு பாராளுமன்றம் சென்று சுந்தரலிங்கம், பொன்னம்பலம், செல்வநாயகம், அமிர்தலிங்கம் ஆகிய தலைவர்கள் அமர்ந்திருந்த நாற்காலிகளில் உட்கார வேண்டும். இதற்கு சன்மானமாக சட்டப் புத்தகங்களில் சில புதியவரிகளை சேர்த்துக்கொள்வதற்கு தென்னிலங்கை உடன்படும். இதனை சமாதானம் கிடைத்துவிட்டதாகவும். இலங்கையின் ஐக்கியம் பேணப்பட்டதாகவும். ஊடகங்கள் விபரிக்கும். இந்த நிலையையே இனப்பிரச்சனை தீர்வாக அனேகமான அரசியல் தலைவர்கள் தமது தலைகளிற்குள் வைத்திருக்கிறார்கள். சாதகமான சூழலில் தெரிவிப்பதற்காக மௌனமாகவும் இருக்கின்றார்கள். மிகவும் பக்குவமாக மறைத்துவைக்கப்பட்டுவரும் இந்த உண்மையை அண்மையில் பொ.ஐ.முன்னணியின் கொழும்பு மாவட்ட அமைப்பாளராக அன்வர் பௌசான் வெளிப்படுத்தினார்.

விரைவில் ஆட்சிமாற்றத்தை ஏற்படுத்தி, விடுதலைப்புலிகளை பாராளுமன்ற உறுப்பினர்களாக மாற்றி நாட்டில் நிலையான சமாதானம் ஏற்பட ஜனாதிபதி நடவடிக்கை எடுத்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை என்று பத்திரிகைக்கு பேட்டியளித்துள்ளார் கற்பனையான பிரச்சனைகளிற்கு கற்பனையில் தீர்வுகாண்பது போல யதார்த்தநிலை தோற்றுவித்திருக்கும் பிரச்சனைகளை யதார்த்தநிலையில் நின்று நோக்கித்தீர்வு கணுதல் வேண்டும். இந்தவகையில், விஷச்சுழிக்குள் அகப்பட்ட நிலைக்குள் நின்று தன்னைக்காப்பாற்றும் முயற்சியில் ரணில்விக்கிரமசிங்கவின் அரசாங்கம் சுழர்வது தெரிகிறது.

**விரைவில் ஆட்சிமாற்றத்தை ஏற்படுத்தி, விடுதலைப்புலிகளை பாராளுமன்ற உறுப்பினர்களாக மாற்றி நாட்டில் நிலையான சமாதானம் ஏற்பட ஜனாதிபதி நடவடிக்கை எடுத்தாலும் ஆச்சரியப்ப டுவதற்கில்லை.**

புலிகள் சமர்ப்பிக்கும் மாற்று யோசனைகள் மீது பேச்சுகள் தொடங்கும் என்ற நிலைக்கும், இடைக்கால நிர்வாகம்வழங்கினால் மட்டுமே பேச்சுக்கள் தொடங்கும் சூழல் ஏற்படும்என்ற நிலைக்கும், அரசிற்கும்- புலிகளிற்கும் இடையே மீண்டும். பேச்சுகள் தொடங்கினாலே நிதியுதவிகள் கிடைக்கும் என்ற நிலைக்கும், நிதிஉதவிகள் கிடைப்பதைப்பொறுத்தே சம்பள உயர்வுடன்கூடிய வரவு செலவுத்திட்டம் நிறைவேறுமென்ற நிலைக்கும், இவ்வாறான ஒரு வரவு செலவுத்திட்டம் நிறைவேறத்தவறினால் அரசாங்கத்தையே டிசம்பர்மாதத்துடன் கவிழ்த்துவிடும் எதிர்கட்சிகளின் திட்டம் நிறைவேறிவிடலாம் எனும் நிலைக்குமிடையே அகப்பட்டுக் கொண்டிருக்கின்றது ஐக்கியதேசியமுன்னணி அரசாங்கம்.

தொழிற்சங்கங்கள் தத்தமது பொருளாதார கோரிக்கைகளை முன்வைத்து அடயாள வேலை நிறுத்தங்களை செய்துள்ளன. இந்த அபாய அறிவிப்பு அரசியல் பின்னணியுடன் கூடிய பொருளாதார போராட்டமாக வெடிக்கவிருக்கிறது. ஊழியர்களின் சம்பளவுயர்வு பற்றிய அறிவித்தல்களுடன் கூடிய வரவு செலவுத்திட்டம் நிறைவேற்றப் படவுள்ள டிசம்பர்மாதத்தின் நடுப்பகுதியில் இதனை வெடிக்க வைப்பதற்கான ஆயத்தங்கள் நடைபெறுகின்றன. வாழ்க்கைச் செலவுப்பிரச்சனைக்கு தகுந்த முடிவு காணப்படவேண்டிய அவசரத்தைதயும் நிர்பந்தத்தையும் இது அரசாங்கத்திற்கு ஏற்படுத்துகின்றது.

அபிவிருத்திக்கான நிதிகளும், நன்கொடைகளும் டோக்கியோ மகாநாட்டில் உறுதியளிக்கப்பட்டே உள்ளனவாயினும் அது கைவரப் பெறவில்லை. அது பேச்சுக்களின் முன்னேற்றத்தில் தங்கியுள்ளது. ஆனால் பேச்சுக்களோ 6 மாத காலமாக தடைப்பட்டுப்போயுள்ளன. பேச்சுகள் நடைபெறுமென்ற நம்பிக்கையை ஊடகங்களின் வாயிலாக இருதரப்பினரும் வெளிப்படுத்தி வருகின்றனரேஅன்றி அதுபற்றி உள்ளுர நம்பிக்கையற்ற நிலையும் இருக்கின்றது. பேச்சுக்களை மீண்டும் தொடங்குவதில் சிக்கல்களும், இழுபறிகளும் இருப்பதை தலைவர்களின் பேச்சுக்கள் உணர்துகின்றன. பேச்சுக்களிற்கான பேச்சுக்கள் நடத்தப்படுவதற்கு வரவுசெலவுத்திட்ட வாக்களிப்புக்கு முந்திய திகதிகள் ஒதுக்கப்பட்டுள்ளன முஸ்லிம்களின் தனிப்பரப்பு பிரச்சனையும் முக்கிய இழுபறியாகிவிடலாம் அரசும் விடுதலைப்புலிகளும் இன்னுமொருதடவை சந்திப்பார்கள் தானா? என்பதை உறுதிசெய்வதில் உதவிவழங்கும் நிறுவனங்கள் குறியாயிருப்பதன்காரணமாக. ஒரு சந்திப்பையாவது உடனடியாக வைத்துக் கொள்ள வேண்டும் என்பதில் அரசும் குறியாயுள்ளது தெரிகிறது மாற்று யோசனைகளை புலிகள் இன்னும் அனுப்பி வைக்கவில்லை. அவர்களைப்பொறுத்தவரையில் இடைக்கால நிர்வாக யோசனைகள் தமிழர்கள் வாழ்வும் முக்கிய திருப்புமுனையானவை. பெரும் முயற்சியின் பெயரிலும், பெருங்காலம் மாற்றுநிதி விரையத்தின்போதிலும், உலகரீதியாக அனுபவங்களைத் திரட்டியும் பெரும் நம்பிக்கையுடன் தயாரிக்கப்பட்டவை. அதனால் அவைகள் நிட்சயம் அனுப்பி வைக்கப்படவுள்ளன. ஆனால் அரசாங்கத்திற்கு பேச்சுவார்த்தைகளே தேவைப்படுகின்றன. அரசாங்கத் தரப்பிலுள்ள அவசரம் தலைவர்களின் வார்தைவழியாக வெளிவருகின்றன. புலிகள் முன்வைக்கவுள்ள திருத்தங்கள் எவ்வாறாக இருந்தாலும் பேச்சுக்களை உடனடியாக நடத்துவோம் என்று பிரதமரே தெரிவித்துள்ளார் இதற்காக அவர் விட்டுக்கொடுப்புக்களை அறிவித்திருக்கின்றார். சமர்ப்பிக்கப்படவுள்ள மாற்றுயோசனைகள், திருத்தங்கள் எவ்வாறாக இருந்தாலும் புலிகளுடன் பேசுவோமென்றும் நிலைப்பாட்டை அறிவிக்கும் பிரதமர் முஸ்லிம்களின் கோரிக்கை விடயத்தில் அவர்கள் தனித்தரப்பாக கலந்துகொள்ள சந்தர்ப்பங்கள் உள்ளன என்றும் தெரிவித்தார். ஜனாதிபதி தரப்பிலிருந்து குழப்பம் ஏற்படாமலிருப்பதை சமாளிக்கும் விதத்தில் ''2000 ஒகஸ்ட்'' பிரேரணைகளின் அடிப்படைகளில் தீர்வை முன்னெடுப்பதற்கும் உடன்பட்டுள்ளார்.



அமைச்சர் பீரிஸ் மேலும் விளக்கமாக கூறுகையில், ''புலிகள் சமர்ப்பிக்கவுள்ள திட்ட வரைபிற்கு அரசாங்கம் மாற்றுயோசனைகள் எதனையும் முன்வைத்துக்காலத்தை வீணடிக்காது,'' பதிலாக நேரடிப்பேச்சுக்களை ஒழுங்கு செய்யுமாறு நோர்வே அரசாங்கத்தை கோரும் என்றே தெரிவிக்கின்றார்.

பல தரப்பினர் மத்தியிலும் இருக்கும் அவசரம் புரிகிறது. தொழிலாளர்களுக்கு சம்பள உயர்வு வரவுசெலவுத் திட்டத்துடன் கிடைக்கவேண்டுமென்ற அவசரம். அவர்களை முக்கிய சொத்தாகக் கொண்டு அரசாங்கத்தை மாற்றிவிட வேண்டு மென்பது எதிரணியினரின் அவசரம். எதிரணியினரிடமிருந்தும், நிறைவேற்று அதிகாரத்தின் பிடியிலிருந்து காப்பாற்றி விடவேண்டுமென்பதில் அரசாங்கத்திற்கு அவசரம். சந்தர்ப்பங்கள் சரியாகட்டும். வாய்ப்பை தவறவிடக் கூடாது மாற்றுயோசனைகளை வழங்குவது புலிகளின் சாணக்கியம்.

சந்தர்ப்பங்ள்கள் யாவும் டிசம்பர் மாதத்தையே மையமாக வைத்துள்ளன. அரசதரப்பு எம்பிக்கள் சிலர் எதிர்தரப்புக்குமாறுவதுடன் டிசம்பரில் ஆட்சிக்குவந்த அ.தே.மு.அரசாங்கம் டிசம்பரிலேயே கவிழுமென்று எதிரணியின் கடும்போக்கர்கள் எச்சரித்துள்ளனர்.

இந்நிலையில் பேச்சுக்களே போதுமென்ற தரப்பும் இடைக்கால நிர்வாக சபையே வேண்டுமெனும் தரப்பும் எடுக்கவிருக்கும் தீர்மானங்கள் திசைகளை தீர்மானிப்பவைகளாக இருக்கும்.

# நியாயம் கிடைக்கவேண்டுமானால் ஈழம்தான் கிடைக்க வேண்டுமா

**அதிரடிப்படையினரினால் உயிரிழந்த அப்பாவிப் பொதுமக்கள் ஏழு பேரின் (2003-10-09) ஓராண்டு நினைவாக இக்கட்டுரை பிரசுரிக்கப்படுகிறது.**

அம்பாறை மாவட்டத்தில் ரூபஸ் குளம் திருக்கோவில் பகுதியிலிருந்து 2002.10.09 புதன் கிழமை காலை 10.00 மணிக்கு 37-9771 இலக்க உழவு இயந்திரம் மூலம் வந்து கொண்டிருந்த விடுதலைப்புலிகளின் கோமாரிக் கோட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் விஸ்வநாதன் உட்பட மூன்று பேர் காஞ்சிரங்குடா விசேட அதிரடிப்



படையினரால் தாக்கப்பட்டார்கள் அதிரடிப்படை முகாம் முன்பாக உழவு இயந்திரத்தில் வந்த புலி உறுப்பினர்களைப் படையினர் தாக்கியதற்கு எதிர்ப்புத் தெரிவித்தும் ஆயிரக்கணக்கான தமிழ் பொது மக்கள் ஒன்று கூடி முகாமுக்கு முன்னே நின்று ஆர்ப்பாட்டம் செய்தனர் அந்த ஆர்ப்பாட்டம் அன்று பிப 5.00 மணிக்கு நடை பெற்றது இந்நிகழ்வை சகித்துக் கொள்ள முடியாத விசேட அதிரடிப்படையினர் கண்மூடித்தனமான

**காஞ்சிரங்குடா அதிரடிப் படையினரின் அடாவடித்தனத்தால் உயிரிழந்த அப்பாவித் தமிழ் பொது மக்களுக்கு ஓராண்டாகியும் உண்மை அறிக்கை கிடையாதா? உதவி நிவாரணங்களும் கிடையாதா? நியாயம் கிடைக் வேண்டுமானால் ஈழம் தான் கிடைக்க வேண்டுமா???**

துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர் இதில் சசிகுமார் (20) விஜயராசா ஜெயப்பிரகாஸ் (19) அரசரெட்ணம் செல்வகுமார் (18) நல்லையா குமார குலசிங்கம் (35) கதிரமலை ரவி (16) நாகராசா சசிகுமார் (19) மனோகரன் சத்திய நாதன் (18) ஆகியோர் ஸ்தலத்திலேயே துடிதுடிக்க படு கொலை செய்யப்பட்டார்கள் இவர்களுடன் 22 க்கு



மேற்ப்படவர்கள் படுகாயங் களுக்குட்பட்டனர்

ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் கலந்துகொண்ட பொது மக்கள் கத்தி, வாள், பொல்லு அல்லது துப்பாக்கி களினைக் கொண்டு வந்திருக்கவில்லை ஆர்ப்பாட்டக்காரர்கள் அவ்வாறான ஆயுதங்களுடன் வந்திருந்தால் தம்மை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்ட வேளையில் அதிரடிப்படையினரின் தரப்பிலும் உயிர்ச் சேதங்களோ காயங்களோ ஏற்பட்டிருக்கலாம் ஆனால் அதிரடிப் படையினருக்கு காயங்களோ உயிர்ச் சேதங்களோ ஏதும் ஏற்படவில்லை ஆனால் நிராயுதபாணிகளாக வந்த அப்பாவித் தமிழ்ப் பொது மக்களே கொல்லப்பட்டனர் அவர்களே அதிகமானோர் படுகாயங்களுக்கும் ஆளாகினர் இவை யாவும் தற்பாதுகாப்புக்காக மேற்கொள்ளப்பட்ட

துப்பாக்கிப் பிரயோகம் என படைத்தரப்பினர் பின்னர் கூறினர்.

ஆர்ப்பாட்டத்தை சகித்துக் கொள்ள முடியாதாயின் விசேட அதிரடிப் படையினர் ஆர்ப்பாட்டக்காரர்களை கலைக்க வேண்டுமாயின் வானத்தை நோக்கி எச்சரிக்கை வேட்டுக்களை தீர்த்திருக்கலாம் அதற்கும் ஆர்ப்பாட்டக் காரர்கள் மசியவில்லை என்றால் கண்ணீர்ப்புகைப் பிரயோகம் செய்திருக்கலாம் அதற்கும் அவர்கள் கலைந்து செல்லாவிட்டால் இரப்பர் குண்டுகளைப் பயன் படுத்தியிருக்கலாம் ஆனால் காஞ்சிரான் குடா படையினர் வீணாக அப்பாவி பொது மக்கள் மீது துப்பாக்கி ரவைகளினாலேயே சுட்டுத் தள்ளினார்கள்

சம்பவத்தின் பின் உடன் விசாரணைகளினை நடாத்தியது போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு. நீதியானதும் உண்மையானதுமான அறிக்கை வரும் என எதிர்பார்த்த எம்மக்களுக்கு அம்பாறை மாவட்ட போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் கார்ல் சீபேக் தலைமையிலான குழுவினரால் கிடைத்த அறிக்கை இது தான் ஆர்ப்பாட்டம் செய்த பொது மக்கள் கட்டு மீறி காஞ்சிராங்குடா விசேட அதிரடிப்படை முகாமுக்குள் நுழையமுற்பட்டதனாலேயே இச்சம்பவம் நிகழக் காரணமாகியது என்றும் விசேட அதிரடிப்படையினர் தாம் கண்ணீர்ப் புகை, இறப்பர் குண்டு துப்பாக்கிப் பிரயோகம் செய்யும் நிலைமை கட்டுப்பாட்டுக்குள் வராததனாலேயே துப்பாக்கி பிரயோகம் செய்யும் நிலை ஏற்பட்டது எனக் குறிப்பிடப்பட்டிருந்தது.

போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு கொடுத்த அறிக்கை ஒருதலைப் பட்சமானது இதனை எந்த பொது மகனும் ஏற்றுக் கொள்ளமாட்டான் கண்காணிப்பு குழுவிலுள்ள புலிகளின் பிரதி நிதிகளும் கூட இவ்வறிக்கையை ஏற்றுக் கொள்ளவில்லை கண்காணிப்புக் குழுவினரது செயற்பாடு நகைப்புக் குட்பட்டது என்பதுதான் உண்மை. இதே போன்று தான் அரசாங்கத்தினால் விசேட விசாரனைக்குழு முன்னாள் விமானப் படைத் தளபதி எயார் மார்ஸல் ஹரிகுணதிலக்கா தலைமையில் நியமிக்கப்பட்டது அக்குழுவில் ஓய்வு பெற்ற நீதியரசர் ஒலிவர் வீரசேன ஆசிரியர் எஸ்.விவேகானந்தன் ஆகியோர் உள்ளடக்கப்பட்டனர் இவ்விசாரனைக்குழுவின் செயலாளர் நாயகமாக சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் சவங்கண் நியமனம் செய்யப்பட்டு விசாரணைகள் முடுக்கி விடப்பட்டு தீவிரமாக விசாரனை நடைபெற்றது ஆனால் உண்மைக்குப் புறம்பான முறையில் அறிக்கை தயாரிக்கப்படுவதாகவும் தலைமை வகிப்பவர் தனிப்பட்ட ரீதியில் விடுதலைப்புலிகளை பழிவாங்கும்





விடுதலைப்புலிகளை பழிவாங்கும் சிந்தனையில் இருந்தவர் என்றும் தெரியவந்தது ஆனால் இற்றை வரையும் அறிக்கை வெளிவரவில்லை விசாரணைக் குழு உறுப்பினர் விவேகானந்தன் தனது அறிக்கையினைப் புறம்பாக வெளியிட்டார்

மனித உரிமை ஆணைக்குழுவும் விசாரணைகளை அதன் ஆணையாளர் சரத்குரே தலைமையில் நடாத்தியது இற்றைவரைக்கும் ஆணைக்குழு விசாரணை அறிக்கையினை எது என்று கூட வெளியிடவில்லை

மேலும் அக்கரைப்பற்று நீதிவான் நீதிமன்றத்தில் மஜிஸ்திரேட் எம்.வை.எம். இஸ்ஸதீன் தலைமையில் விசாரணைகள் நடைபெற்றது அதில் மரணிக்கப்பட்ட 06 பேரின் மரணம் தொடர்பான தீர்ப்பினை அக்கரைப்பற்று நீதிவான் நீதிமன்றத்தில் வழங்கியது.

இப்படுகொலை தொடர்பாக அம்பாறை மாவட்ட பாராளுமன்ற



உறுப்பினர் அரியநாயகம் சந்திர நேருவிடம் கேட்ட போது காஞ்சிரன் குடா சம்பவத்தில் மிகவும் மனம் வருந்தக் கூடியவிடயம் யாதெனில் விசேட அதிரடிப் படையினருடைய துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி முகாமுக்கு வெளியே அரைகுறை காயங்களுடன் கிடந்த அப்பாவி பொது மக்களினை படையினர் முகாமுக்குள் இழுத்துச் சென்று அங்கு வைத்து மீண்டும் மிருகத்தனமாக நடாத்தினார்கள் அதன் பின் நடை பெற்ற அத்தனையும் உண்மைக்கும் புறம்பானதாகவே அமைந்தது கொலையும் செய்து விட்டு பொது மக்கள் மேலே பழியையும் போட்டு விட்டார்கள் விசேட அதிரடிப்படையினர்.

என்னால் முடிந்தளவில் உதவிகளினை புரிய முயற்சி எடுக்கிறேன் மிக விரைவில் கைகொடுக்கும் எனவும் நம்புகிறேன் பிரதமரின் காரியாலயத்திலிருந்து ஓர் பச்சைக் கொடி மிக அண்மையில்தான் காட்டப்பட்டது என்று நேரு எம்.பி கூறினார்.

த.வி. புலிகளின் அம்பாறை மாவட்டப் பொறுப்பாளர் சச்சி மாஸ்டருடன் கருத்தினைப்பகிர்ந்த போது பொது மக்களின் மேலே பழியை அதிரடிப் படையினர் திணித்திருக்கின்றனர் இது அவர்களின் வழமையான பாணியே.

அவர்களின் வழமையான பாணியே. ஆரம்ப காலத்திலிருந்து நீதி கேட்ட தமிழ் மக்களுக்கு இக்கதியேதான் நடந்தது அகிம்சை வழி சரிவராது என்று நம் மக்கள் பின் ஆயுதப் போராட்டம் நடாத்தினர் மீண்டும் எமது மக்களின் அகிம்சை வழியில் போராட வெளிக்கிட்டார்கள், அவர்களுக்கு மீண்டும் அதே தண்டனை தான் கிடைத்தது. இது இராணுவத்தினரது காட்டு மிராண்டித்தனமான செயல் என்பதையே நிரூபித்துக்காட்டுகிறது என்றார்.

ஆனால் அண்மைக்காலங்களில் மூதூர் ஓட்டமாவடி வாழைச்சேனை போன்ற பிரதேசங்களில் நடைபெற்ற அசம்பாவிதங்களில் பாதிக்கப்பட்டவர்களுக்கு அரசாங்கம் அமைச்சர்கள் ஊடாக நஸ்ட ஈடுகளும் நிவாரண உதவிகளும் வழங்கப்பட்டு வருவதனை நாம் அறிவோம் எமது மக்கள் வீனே துப்பாக்கி ரவைகளினாலும் இராணுவத்தினது திட்டமிட்ட சதியினாலும் பலியானோருக்கு சாதகமான அறிக்கையுமில்லை இன்னும் வெளியிடப்படவுமில்லை அரச நிவாரணங்கள் எதுவும் கிடைக்கவில்லை

தமிழீழ அரசினுடைய தேசியத் தலைவர் அதிமேதகு வேலுப்பிள்ளை பிரபாகரன் தனது போராட்டத்தினை அகிம்சை வழியிலும் ஜனநாயக ரீதியிலும் எடுத்துச் செல்ல வேண்டும் என்பதற்கிணங்க சிறிலங்கா அரசின் பிரதமர் ரணிலின் தவத்தின் பிரகாரம் சமாதான மோதல் தவிர்ப்பு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டார். அதன் பின் பல இடங்களில் தமிழ் பேசும் மக்களுக்கு எதிராக ராணுவத்தினரது துப்பாக்கிகள் நீட்டப்பட்டு தமிழனை மோதி கீழே விழவைத்தது போதாது. என்று இன்றோ படையினரின் வாகனங்களினால் தமிழனை மோதி கீழே சாய்க்கிறார்கள்.

எந்த வகையில் எப்படி தாக்கினாலும் கீழே விழுபவன் தமிழனாய் இருந்தாலும் அவனது போராட்ட உணர்வுகளினை கீழே விழ வைக்க முடியாது இந்த நிலைமைகள் தொடருமானால் நீதியும் நியாயமும் தமிழ் பேசும் மக்களுக்கு கிடைக்க வேண்டும் என்றால் ஈழம் கிடைத்தால்தான் நிறைவேறும் என்றால்



அதனையும் செய்யுமாறு தமிழ் மக்களின் பேராசை ஈழத் தேசியத் தலைவரின் பாதையினை மாற்றவும் செய்யும் என்பதனை சிறிலங்கா அரசு புரிந்துகொள்ள வேண்டும்.

ஐ.எல்.ஜலீல்
நிருபர்
(தமிழ் பணி மன்றம், வீரமுனை)

## வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி யின் 10ம் ஆண்டு நிறைவை குறிக்கும் முகமாக இடம் பெற்ற உதைபந்தாட்டப் போட்டி





வவுனியா மாவட்ட பாடசாலைகளில் உதைபந்தாட்டத்தை விருத்தி செய்ய 15 வயதுக்கு உட்பட்ட 22 பாடசாலைகள் இப் போட்டியில் பங்கு பற்றியது குறிப்பிட வேண்டும் இரண்டு நாட்கள் இடம் பெற்ற இப் போட்டியில் ஆரம்ப நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்ட நகரசபை தலைவர் திரு.செல்வராஜாவும் அவருடன் இணைந்த மன்னார் சென் சேவியர் தேசிய பாடசாலை உடற்கல்வி ஆசிரியர் திரு.ஞானராஜ் அவர்கள் கலந்து சிறப்பித்தனர் மேலும் இப்போட்டியை ஒழுங்கமைத்து பீடாதிபதியின் வேண்டுதலுக்கு ஏற்ப உடற்கல்வி விரிவுரையாளர் த.ம. தெய்நேந்திரன் அவர்கள் தலைமை ஏற்று நடாத்தினார்

அத்துடன் இறுதிப் போட்டியில் பங்கு கொண்ட வ/புதுக்குளம் மகா வித்தியாலயமும் வ/விபுலானந்தா மகாவித்தியாலயமும் மோதி வ/விபுலானந்தா கல்லூரி வெற்றி பெற்றது. இவ் இறுதி நிகழ்வின் பிரதம அதிதியாக கலந்து கொண்ட வ/செஞ்சிலுவைச் சங்க தலைவர் கிசோர் அவர்கள் கலந்து சிறப்பித்தார்.

மேலும் இந் நிகழ்வுக்கு உதவிய உடற்கல்வி விரிவுரையாளர்கள் அனைவரும் பீடாதிபதி, உப பீடாதிபதி, விரிவுரையாளர்கள் அனைவரும் ஒத்துழைப்பு வழங்கியமை குறிப்பிடத் தக்கது.

சுதாகர்

## வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியின் 10ம் ஆண்டு நிறைவை ஒட்டி இடம்பெற்ற வலைபந்தாட்ட சுற்றுப்போட்டி






வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியின் 10ம் ஆண்டு நிறைவை ஒட்டி செந்தணலின் பிரதான அனுசரனையில் வலைப்பந்து சுற்றுப் போட்டி இடம் பெற்றது.

வவுனியா மாவட்ட வலைப் பந்தாட்டத்தை ஊக்குவிக்கும் முகமாகவும் பீடாதிபதியின் நீண்ட நாள் கனவினை நிறைவேற்றவும் பீடாதி பதியின் வேண்டுகோளுக்கிணங்க உடற்கல்வி விரிவுரையாளர், ஜனாப் சுதாகரன் அவர்களால் மேற்

மேலும் இப் போட்டியின் ஆரம்ப நிகழ்வில் பிரதம அதிதியாக வவுனியா திருமதி.ஸ்ரீகாந்தரூபன் விமலேஸ்வரி (மாவட்ட இளைஞர் சேவை அதிகாரி) அவர்கள் கலந்து கொண்டார் இதற்கு வ/நெலுக்குளம் கலைமகள் மகாவித் தியாலயம் பேண்ட் வாத்தியம் வழங்கி சிறப்பித்தனர், பின்னர் இறுதி நிகழ்வில் பிரதம அதிதியாக செல்வி துரைசாமி (பிரதேச செயலாளர் செட்டிக்குளம்) அவர்கள் கலந்து கொண்டார் மேலும் இன்





கொள்ளப்பட்ட இச் சுற்றுப் போட்டியில் வவுனியா மாவட்டத்தின் 15 வயதுக்கு உட்பட்ட பாடசாலைகள் பங்கு பற்றின இச்சந்தர்ப்பத்தில் புதிதாக பல பாடசாலைகள் வலைப்பந்தாட்ட குழுக்கள் தெரிவு செய்து இதில் இணைந்து கொண்டமை வரவேற்கத்தக்கது இப் போட்டியில் இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்ற வ/சைவப்பிரகாசா மகளீர் கல்லூரியும் வ/சிங்கள பரகும் மகாவித்தியாலயமும் மோதியது. இதில் சைவப்பிரகாசா அணி கிண்ணத்தை வெற்றி கொண்டமை குறிப்பிடத்தக்கது.

நிகழ்வில் கல்வியியற் கல்லூரி பீடாதிபதி க.பேர்னாட் அவர்களும், செந்தணல் பத்திரிகை ஆசிரியர் செல்வி அன்ரனி வாணிஜெயா அவர்களும், உப பீடாதிபதிகள், விரிவுரையாளர், கல்வி சாரா ஊழியர், ஆசிரிய பயிலுனர், அகியோர் கலந்து கொண்டு நிகழ்வை சிறப்புற நடாத்தினர்

மேலும் இந் நிகழ்வை நடாத்த உதவிய உடற்கல்வி விரிவுரையாளர் C.மகேந்திரன் T.M.தெய்வேந்திரன் ஆகியோர் குறிப்பிடத் தக்கவர் மற்றும் விளம்பரதாரர், அனுசரனையாளர் போன்றோரை குறிப்பிட முடியும்.

சுதாகர்

## கொடிதின விழா



படத்தில் வவுனியா அரசாங்க அதிபர் உதவிப்பணிப்பாளர் தேசிய இளைஞர்கள் சேவைகள் மன்றம் எஸ். கார்த்திக் அவர்கள் மாகாணப்பணிப்பாளர் எம்.பேரானந்தம் அவர்கள் ஆகியோரை காணலாம்.



கொடிதினவிழாவில் அலுவலக மட்டத்தில் முதலாவது இடத்தைப்பெற்ற இப்ராஹிம் சுஹானி அவர்கள் வவுனியா அரசாங்க அதிபரினால் பரிசினை பெறுகிறார்

கடந்த 1ம் திகதி இடம் பெற்ற கொடி தின விழாவில் அகில இலங்கை ரீதியில் மூன்றாம் இடத்தை வவுனியா இளைஞர் சேவைகள் மன்றம் பெற்றுள்ளது. அத்துடன் அலுவலர்கள் மட்டத்தில் 511110ரூபாயினை பெற்றுக் கொடுத்து முதலாம் இடத்தை வவுனியா இளைஞர் சேவைகள் மன்ற உதவி இளைஞர்கள் சேவை அதிகாரியான இப்றாகிம் சுஹாணி (பட்டானிச்சூர்) அவர்கள் பெற்றுள்ளார். இவருக்கு இளைஞர் கழக சம்மேளனத்தினால் பரிசு வழங்கப்பட்டது பரிசினை வவுனியா உதவி அரசாங்க அதிபர் வழங்கிப் பாராட்டினார்

அலுவலக நிருபர்

## பசுமையான சூழல் நீண்ட ஆயுள்

இலங்கையிலும் புலம் பெயர் நாடுகளிலும் வாழும் தமிழர் முதியோர் எண்ணிக்கை அதிகரித்து வருகையில் ஆயுட்காலத்திற்கும் சூழலுக்கு மிடையிலான தொடர்பை ஜப்பானிய ஆய்வொன்று உறுதிப்படுத்தியுள்ளது ரோக்கியோவிலுள்ள பல் மருத்துவ காலலூரியின் ஆய்வின் படி பூங்காக்களுக்கும் பூங்கா போன்ற பசுமை நிறைந்த இடங்களுக்கும் அண்மையில் வாழும் முதியோர்கள் வெறும் சீமெந்துக் கட்டடத் தொகுதிகளில் வாழும் முதியோர் களைவிட நீண்ட காலம் வாழ்பவர் கல்லூரியின் ஆய்வாளர்கள் 80 வயதைத் தாண்டிய மூவாயிரத்துக்கு மேற்பட் டோரை தமது ஆய்வுக்காக ஐந்து வருட காலம் அவதானித்தனர் இந்த ஆய்வு காலப் பகுதகளில் 97 பேர் இருந்தனர் இவர்களில் பெரும்பாலானோர் ஓய்வாக நடந்து உடற்பயிற்சி பெறப் போதுமான மரங்கள் நிறைந்த வீதிகளோ பூங்காக் களோ இல்லாத சீமெந்து கட்டிடக் காடுகளுக்குள் வாழ்ந்தவர்களாவர் நீண்ட ஆயுட்காலத்திற்கு உறுதுணை புரிந்த இன்னொரு காரணி சூரிய வெளிச்சத்தை உள்விடக்கக் கூடிய விதத்தில் கட்டப்பட்ட ஜன்னல்கள்.

## கடல் வளம்

நீராகும் கடலுடுத்த நிலமங்கை என்ற தமிழ்த்தாய் வாழ்த்தில் குறிப்பிட்டது போல நாம் வாழும் பூமகளின் மானம் காக்கும் ஆடையாக இருப்பது பரந்து விரிந்த நீலக்கடலாகும் பூமியின் மொத்தப்பரப்பில் சுமார் 71 வீதம் கடல் நீரால் நிரப்பப்பட்டிருக்கிறது இக்கடலின் மேற்பரப்பிலிருந்து கீழே சுமார் 3000 அடிக்கும் கீழாக வாழும் உயிரினங்கள் ஏராளம் இந்தப் பகுதியில் வருடத்திற்கு சுமார் 4.5 மில்லியன் டன் அளவுள்ள மீன்கள் கிடைக்கும் வாய்ப்பு இருப்பதாகவும், ஆனால் இதில் தற்பொழுது சுமார் 1.7 மில்லியன் டன் அளவுள்ள மீன்களையே நாம் பிடித்து வருகின்றோம் என்பதை கடல் பொருள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணைக்குழு வின் ஒரு குறிப்பிலிருந்து தெரியவருகிறது.

பயிர்த் தொழில் எனின் நிலவளமும் நீர்வளமும் இன்றியமையாதது அடுத்து உழைப்பு வேண்டும் இம் மூன்றும் இல்லையேல் அறுவடை இல்லை இவ்வாறானதல்ல கடல்வளம். அள்ள அள்ள குறையத செல்வங்களை அறிவியல் ஆற்றல் கொண்டு ஆழ் கடலிலிருந்து ஆழ்ந் தெடுக்கலாம். நில வளத்தில் நீரின் பங்கு அதிகம் வெள்ளம் ஏற்பட்டாலும் வறட்சி ஏற்பட்டாலும் பசுமைப் புரட்சிக்கு பங்கம் ஏற்பட்டு விடும் இந்நிலை கடலுக்குக் கிடையாது ''மழை கொளக் குறையாது புனல் புகை நிறையாது'' இச்சிறப்படைய கடலில் குவிந்து கிடக்கும் வளம் தான் என்ன

அது மனிதனது வளர்ச்சிக்கு எவ் வகையில் எல்லாம் பயன் படுகின்றன என்பதை அறிய நமக்கு ஆர்வம் ஏற்படுவது இயல்பல்லவோ.

கடல் என்றால் நமது நினைவில் வருபவைகளில் முதலிடம் மீன்களுக்கே சுமார் 30.000 க்கும் அதிகமான கடல் உயிரினங்கள் அனைத்தையும் 300 க்கு அதிகமான தாவர வகைகளையுயம் கடல் தன்னகத்தே கொண்டிருக்கிறது இவற்றில் வஞ்சிரத்வாவல், கொடுவா, பாறை, தும்பிலி, வாளை, காணாம்கெழுத்தி, மத்தி, கவளை போன்ற விலை குறைந்த உள்நாட்டிலேயே விலை போகக் கூடிய மீன்களும் சுறா மற்றும் திமிங்கிலம் போன்ற ஆபத்தான மீன்களும் அடங்கும் இவையன்றி கடல்குதிரை, வான் கோழி மீன், அக்டோபஸ் போன்ற காட்சிப் பொருளாகவும் அலங்கார மீன்களாகவும் மனிதர்களால் கருதப்பட்டு வளர்க்கப்படும் மீன் வகைகளும் இந்த ஆர்ப்பரிக்கும் கடலில் வாழ்கின்றன

இவற்றிற்கெல்லாம் . முத்தாய்ப்பு வைத்தது போல் கடலிலிருந்து கிடைப்பது கடல்தங்கம், அதாவது இரால் வகைகள் இவற்றின் சிறப்பையும் விலை மதிப்பையும் வைத்து இதற்கு கடல் தங்கம் (SEA GOLD) என்று பெயரிட்டுள்ளனர் உண்மையில் இவைகள் மீன் இனத்தைச் சேர்ந்தவையல்ல முதுகெலும்பில்லாத உயிரினங்களில் உள்ள ஆக்த்ரோபோடா (SRTHRO FODA)என்ற கணுக்காலிகள் (JOINTED LEGS)என்ற வகுப்பைச் சேர்ந்த ஒரு பூச்சியினமாகும் சுமார் 12க்கு மேலாக இரால் வகைகள் நமக்கு வியாபாரத்துறையில் பங்கு பெறுகின்றன இவற்றில் வெள்ளரா, புலியெரா, வண்டெரா, போன்றவை பெரும் பங்கு வகிக்கின்றன இவற்றின் சுவையும் அதிகம், விலையும் அதிகம், இவை மட்டுமின்றி உலர்ந்த மீன்கள் நமது நேரடி உணவாகவும் உலர்ந்த மீனின் வாள்(FISH MEAL)பன்றி மற்றும் கோழித் தீவனம் தயாரிப்பதிலும் பயன்படுகின்றன மீன் தூள் உற்பத்தியில் தென் அமெரிக்கா நாடுகள் குறிப்பாக பேரு என்ற நாடு முன்னணி வகிக்கின்றது இவை போக நோர்வே, சுவீடன், போன்ற நாடுகளிலிருந்து மீன் தூள் உற்பத்தியாகின்றன.

மேலும் கடல் வெள்ளரி (SEA CUCUMBE)என்ற எக்கி னோடர்ம் வகையைச் சோந்த ஒரு கடல் வாழ் உயிரினத்தைப் பக்குவப்படுத்தி உலர்த்தி அதிலிருந்து சூப் தயாரித்துக் குடிக்கும் வழக்கம், சூப்பில் கொழுப்புச் சத்து இன்றி ஏனைய ஊட்டச்சத்துக்களும் விட்டமின்களும் தாதுப் பொருட்களும் அதிகமாக இருக்கின்றன என்று ஆராய்ச்சிக் குறிப்புக்கள் அறிவிக் கின்றன.

கடல் வழம் தொடரும்......

பாத்தும்மா,
திருகோணமலை

## மன்னாரில் மீனவர்களுக்கு 100 வீட்டுத்திட்டம்

மன்னாரில் மீனவர்களுக்கு 100 வீட்டுத் திட்டமொன்று ஆரம்பிக்கப்பட உள்ளது, வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் மீள் குடியேற்ற செயலணித் தலைவருமான ரிசாத் பதியுதீன் கடற்றொழில் சமுத்திரவளத் துறை அமைச்சர் மஹிந்த விஜயசேகரவை கடந்த செவ்வாய்க்கிழமை 14ம் திகதி சந்தித்துக் கேட்டுக் கொண்டதற்கிணங்க இந்த வீடமைப்புத் திட்டத்தை உடனடியாக ஆரம்பித்து வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தாராபுரத்தில் . அமையவுள்ள இந்த வீடமைப்புத் திட்டத்தில் உட்கட்டமைப்பு வசதிகள் யாவும் செய்து கொடுக்கப்படுமெனவும் அமைச்சர் மஹிந்த விஜயசேகர தெரிவித்துள்ளார்.

மன்னார். நிருபர்



# தமிழர்கள் வாழ்வு ஏமாற்றப்பட்ட தமிழினம்

தொடர் 06

அகில இலங்கைத் தமிழ் காங்கிரசின் தலைவர் ஜீ.ஜீ.பொன்னம்பலம் தனது கட்சியினருடன் 50 க்கு 50 என்ற தனது கோரிக்கையில் மிக உறுதியாக இருந்ததுடன் அரசாங்கக் கட்சி வரிசையிலே போய் உட்கார்ந்தார். டீ.எஸ். சேனநாயக்கா உள்ளூர் சிங்கள குடியேற்றங்களை மிக வேகமாக கொண்டு நடாத்தி தமிழர் நிலங்களைப் பிடுங்கி சிங்கள மயமாக்கும் கொள்கையைக் கொண்டிருந்தாலும் சகலமக்களுக்குமான இன மத உரிமைகளைப் பேணுகின்ற ஒரு உத்தமமான அரசியல்த் தலைவராகவே தம்மைக் காட்டிக்கொள்ள முயற்சித்தார்.புத்த சமயத்திற்கு அரசியல் அமைப்பில் முதலிடம் வழங்க வேண்டுமென்ற கோரிக்கையோடு வந்த புத்த பிக்குகளிடம் ''மூன்று மணிகளான புத்தம், தர்மம், சங்கம் என்பதோடு நான்காவதாக ஒன்றைச் சேர்க்கப்போகிறீர்களா? என்று கேலி செய்து அவர் அக் கோரிக்கையை புறந்தள்ளியதாக நம்பப்படுகிறது.

(''சிறிலங்கா ஆப்ரர் இன்டிப் பென்டன்ஸ்'' என்ற நூலின் அடிக்குறிப்பு 8 - எழுதியவர் சின்னப்பா இராசரத்தினம்) சோல்பரி அரசியல்த்திட்டத்தின் படி இலங்கைப் பாராளுமன்றத்தில் மலையகத் தமிழர்களின் உறுப்புரிமை 14 ஆக இருக்குமென எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் முதலாவது பாராளுமன்றத் தேர்தலில் 7 மலையகத் தமிழர்கள் மட்டும் உறுப்புரிமை பெற்றனர். அந்த ஏழு உறுப்பினர்கள் கூட தனக்கு எதிர்வரிசையில் இருந்தது டீ.எஸ். சேனநாயக்காவின் கண்களைக் குத்தவே செய்தது. வெறுங் கூலிகளாகச் சிங்கள மேன்மட்டத்தினரின் கண்களுக்குத் தென்பட்ட இந்தியத் தமிழர்களின் அரசியல் உறுப்புரிமை நீக்கப்பட வேண்டுமென்றும் அதன் மூலம் பாராளுமன்றத்தில் சிங்களப் பெரும்பான்மையைக் கூட்டுவதோடு தமிழர்களை வலுக்குன்றியவர்களாக மாற்ற வேண்டுமென்றும் குறிப்பாக தனது அரசுக்கு எதிரானவர்களின் வலு குறைக்கப்படவேண்டுமெனவும் டீ.எஸ். சேனநாயக்கா கணக்குப் போட்டார். அதன் விளைவாக 1948 இல் குடியுரிமைச் சட்டம் இல. 18 நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. இதனால் மலையகத் தமிழர்கள் 900.000 பேர் தமது குடியுரிமையைத் திடீரென ஒரே நாளில் இழந்தனர். இலங்கைக்கான சுதந்திரக் கோரிக்கையின் போது இலங்கைக்கு சுதந்திரம் வேண்டுமானால் அனைத்து இனத்தவரும் ஒற்றுமையாகக் கோர வேண்டும் என ஆங்கிலேயர் தட்டிக்கழித்த போது தமிழர் உரிமைகள் வழங்கப்படும் எனக் கூறி டீ.எஸ். சேனநாயக்கா அன்று தமிழர் ஒத்துழைப்பைக் கோரினார். அரசியலமைப்பு முன்வரைபின்படி 58:43 பிரதிநிதித்துவம் பேணப்பட்டால் அது சிறுபான்மையினருக்கு பெரும் பாதுகாப்பே என எண்ணியிருந்த தமிழருக்கு டீ.எஸ். சேனநாயக்காவின் குடியுரிமைச் சட்டம் பேரிடியாக அமைந்தது.

58:43 என்ற சிங்களவர்கள் தமிழர்கள் விகிதாசார எதிர்பார்ப்பு முதலாவது தேர்தலின்போது 1947ல் 67:34 ஆகத்தான் இருந்தது. மலையகத் தமிழரின் குடியுரிமைப் பறிப்பினால் அடுத்த தேர்தலின் பின் 1952ன் பின் 73:23 ஆக குறைந்தது. சுதந்திரத்திற்குப் பின் டீ.எஸ். சேனநாயக்கா திட்டமிட்டு மேற்கொண்ட இச் செய்கைதான் சோல்பரியின் 29 (2) எனும் சிறுபான்மை யினருக்கான பாதுகாப்பு அரணை உடைத்துச் சுக்குநூறாக்கியது. இதற்கெதிரான வழக்கு சோல்பரி அரசியலமைப்பு பிரிவின் 29 (2) இன் கீழான சிறுபான்மையோரின் காப்பீட்டுக்கு முரண்பட்டதென்ற வாதத்தோடு கோமறைக் கழகத்திற்கு வைக்கப்பட்டது. சுதந்திரத்தின் பின்னால் தமிழர்களுக்கு விழுந்த முதலாவது பேரிடியாக முடியுரிமைச் சட்டத்திற்குச் சார்பாகவே கோமறைக் கழகம் தீர்ப்பளித்தது. இச்சட்ட மூலம் பற்றிய விவாதம் நடைபெற்ற வேளைகளி லெல்லாம் குடியுரிமையிழப்பால் வாக்குரிமைக்கு எவ்வித பாதிப்பும் இல்லை என்ற அரசியல் வாக்குறுதிகள் டீ.எஸ்.சேனநாயக்காவினாலும் ஐக்கிய தேசிய கட்சியினாலும் கபட நோக்கத்துடன் வழங்கப்பட்டன. ஆனால் சொன்ன வேகத்திலேயே இந்த வாக்குறுதி காற்றிலே பறக்க விடப்பட்டது. 1949 இல் தொடர்ந்து நிறைவேற்றப்பட்ட இந்திய பாக்கிஸ்தானிய வதிவுரிமைச்சட்டம் இல 3 இனாலும் தேர்தல் திருத்தச் சட்டம் இல 48 இனாலும் இந்தியத் தமிழரின் வாக்குரிமை பிடுங்கப்பட்டுவிட்டது. இந்தக் கொடிய சிங்களப் பேரினவாதச் சட்டங்களால் 7 உறுப்பினர்களை நாடாளுமன்றத்திற்கு அனுப்பும் வலுவைக் கொண்டிருந்த இந்தியத் தமிழர்கள் 1952இலான 2வது நாடாளுமன்றத்தில் தமது உறுப்புரிமையை அறவே இழந்தனர். இந்தியத் தமிழர் பெரும்பான்மையினராக இருந்த தேர்தல் தொகுதிகளிற் மிகச் சிறுபான்மையினராக விளங்கிய சிங்களவா உறுப்பினராக வெற்றிக் கொடி நாட்டி 1 வது தேர்தலில் 67 ஆக இருந்த தமது உறுப்புரிமையை 2 வது தேர்தலில் 73 ஆக உயர்த்திக் கொண்டனர். ஆங்கிலேயரது ஆட்சிக்காலத்தில் தோட்டக் கூலிகளாக கொண்டு வரப்பட்ட இந்தத் தமிழர்களுக்கு இலங்கையில் எவ்வித உரிமையும் இல்லை யென்பதும் உறுதியாகும்.

சத்தியா.

ஏமாற்றம் தொடரும்....

# நோன்பின் மாண்புகள்

இஸ்லாத்தின் ஐம் பெருங் கடமைகளுள் நோன்பு நான்காவது இடத்தை வகிக்கிறது இஸ்லாத்தின் அடிப்படை வணக்க வழிபாடுகளுள் நோன்பு மிகவும் முக்கியமானது ஏனெனில் மனித வாழ்க்கையின் முழுமையான நோக்கங்களை நிறைவு செய்யும் வகையில் இது அமைந்துள்ளது மனித வாழ்க்கைக்குரிய இறைவனது வழிகாட்டலான ஆல்குர்ஆனை ரமழான் மாதத்தில் இறைவன் இறக்கி வைத்ததிலிருந்து இம் மாதத்தினதும் இக்கடமையினதும் புனிதத்துவத்தை புரிந்து கொள்ள முடியும் நோன்பு பற்றி அல் குர்ஆன் பின்வருமாறு கூறுகின்றது.

விசுவாசிகளே உங்களுக்கு முன்பு இருந்தோர் மீது விதியாக்கப்பட்டது போல நீங்கள் பயபக்தியுடையவர்களாக மாறலாம் என்பதற்காக உங்கள் மீதும் நோன்பு விதியாக்கப்ட்டுள்ளது (அல்குர்ஆன் 2: 183)

நோன்பு நோற்கின்ற ஒரு முஸ்லீம் இறைவன் கூறுகின்ற ஒரு கருத்துப்படி மூன்று முக்கியமான மாற்றங்களுக்கு உள்ளாக வேண்டும்

(1) அவன் முதலாவது வாழ்க்கையின் எல்லாக் கட்டத்திலும் அல்லாஹ்வை அஞ்சி நடக்கின்ற ஒரு நிலைக்கு மாற வேண்டும்

(2) நேர் வழியை அருளியவனின் புகழ்பாடி அவனுடைய பெருமைகளை மேலோங்கச் செய்ய வேண்டும்

(3) நன்மைகளை அருளியதற்காக இறைவனுக்கு நன்றி செலுத்த வேண்டும்.

இம் மூன்று அம்சங்களும் நோன்பின் விளைவுகளாக எடுத்துக் காட்டப் பட்டிருக்கின்றன இத்தகைய விளை வுகளை நோன்பு மனிதனிடத்திலெயே ஏற்படுத்தவில்லையாயின் அது உண்மை யிலே நோன்பாக அமையமாட்டாது உயிரற்ற உடலைப் போன்று நறுமணமற்ற மலரைப் போல அந்த நோன்பு காணப்படும் உடலின் நோன்பு மட்டும் இஸ்லாத்தின் எதிர்ப்பு அல்ல உள்ளத்தின் நோன்பையும் சேர்த்தே அதன் பெறுமதி இஸ்லாம் மதிக்கிறது இதனைத் தான் நபி (ஸல்) அவர்கள் பின்வருமாறு குறித்துக் காட்டுகிறார். '

நோன்பு பிடிப்பவர் பலர் பசியுடனும் தாகத்துடனும் இருப்பவர்களாக மட்டுமே நின்று விடுகின்றனர் விலக்கப்பட்டதை செய்து நோன்பை முறித்து மனித ஊனைத் தின்கின்றனர் புறம் பேசுவது மனித மாமிசத்தை புசிப்பதாகும் எத்தனையோ மனிதர்கள் நோன்பு நோற்கின்றார்கள் அவர்கள் தாகித்திருந் ததைத் தவிர வேறு எந்த வொரு பயனும் இல்லை

வாழ்க்கையில் ஒரு மனிதனுக்கு ஒரு ரமழான் கிடைப்பதே பாக்கியமாகும் அதன் ஒவ்வொரு நிமிடமும் அருளாகும் அல்லாஹ்வின் அருள் மழையில் நனையும் பாக்கியத்தை யார்தான் இழக்க விரும்புவான்

இவ்வாறான தொரு மாதத்தை அடைபவர்கள் நோன்பு நோற்று ''தியாமுல்லைல்'' எனப்படும் இரவு வணக்கங்களிலும் விலாவத் எனப்படும் அல்குர்ஆன் அதிகமாக ஓதுவதனாலும் திகர் இஸ்திஹ்பார் பிராத்தினை புரிதல் போன்றவற்றை புரிவதால் அர்ரிலா எனும் இறை திருப்தியும் முஹப்பத் எனும் இறை அன்பும் மனிதனுகக்கு கிடைத்து விடுகிறது

மேலும் நோன்பு காலங்களில் மனிதனது பிரார்த்தனை அதிகம் அல்லாஹ்வையும் தனது அடியான் தன்னிடம் கேட்பதை ஆவலோடு எதிர் பார்க்கின்றான் இவ்வகையில் 3 பிரார்த் தனைகள் நிராகரிக்கப் படுவதில்லை


தந்தை தன் பிள்ளைக்காக கேட்கும் பிரார்த்தனை

நோன் பாளியின் பிரார்த்தனை

பிரயாணியின் பிரார்த்தனை

ரமழான் மாதத்தில் கிடைக்கும் அதிகூடிய பாக்கியம் லைலத்துள் கத்ர் ஆகும் இந்த இரவு ஆயிரம் மாதங்களை விட சிறந்தது ஒருவனுக்கு ஒரு லைலத்துல் கத்ர் கிடைத்து விட்டால் அவனது வாழ்நாள் வளமடைந்து அதிகரித்த நன்மைகளை பெறலாம்.

ரமழான் மாதத்தில் ஒரு பர்ளை நிறை வேற்றினால் 70 பர்ளுகளுக்கான கூலியும் ஒரு சுன்னத் தான காரியத்திற்கு 1 பர்ளின் நன்மையும் கிடைக்கும் அது மட்டுமன்றி நோன்பாளி சிறப்பாக நோன்பு நோற்றால் அவனுக்காக சுவர்க்கத்தில் ஒரு வாயில் உண்டு அவ்வாயில் ''அர்ரய்யான்''



எனப்படும் அதில் நோன்பாளிகள் மட்டுமே நுளைவார்கள்

நோன்பு பொய்யிலிருந்து நீங்குவதாகும் நோன்பு நோற்ற மனிதன் பொய் புறம் என்பவற்றிலிருந்து தற்காத்துக் கொள்ள வேண்டும் அதனைப் பற்றி நபி அவர்கள் நோன்பு நேரத்தில் பொய் சொல்லுவதிலிருந்து பிழையான செயல்களில் ஈடுபடுவதிலிருந்து ஒருவன் விலகா விட்டால் அத்தகையவர்கள் உண்பதையும் குடிப்பதையும் பற்றி கவலைப் படுவதில்லை நோன்பு ஒரு கேடயம் என குறிப்பிட்டார்கள்

எல்லாப் பொய்களுக்கும் ஸகாத் உண்டு உடலின் ஸஹாத் நோன்பாகும் நோன்பு பொறுமையின் அரைவாசியாகும் நோன்பின் மூலம் பொறுமை ஏற்பட வழி பிறக்கிறது

நோன்பு திறந்தால் அதாவது இப்தார் விடயத்தில் இஸ்லாம் கருணை உணர்வை தோற்றுவிக்கிறது நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்

எவர் ஒருவர் நோன்பாளியை நோன்பு திறக்க வைத்தாரோ அவருக்கு நோன்பாளிக்கு கிடைப்பது போன்ற கூலி கிடைக்கும் என்றாலும் நோன்பாளியின் நற்கூலி எதுவும் குறைந்து விட மாட்டாது. எனவே நம்மிடமுள்ள பேரிச்சம் பழத்துண்டு அல்லது தண்ணீரையேனும் கொடுத்து நோன்பாளியை நோன்பு திறக்கச் செய்து நன்மைகளை சரிவர நிறைவேற்றி அல்லாஹ்வின் அன்பையும் திருப்தியையும் பெறுவோமாக.

ஏ.சீ.ஜெஸீம்

சூடுவெந்த புலவு

2ம் பக்கத்தொடர்....

''அண்டசராசரத்தின் அழகையும் மகிழ்சிகரமாக சூழ்நிலையையும் விட்டுச் செல்வதாகவே நான் உணர்கிறேன் கடவுளின் அழைப்பு எனக்கு கிடைத்துவிட்டது'' அழுக்கு நிறைந்த கல்கத்தாவின் சேரிகளை தன் அகன்ற மனதாலும், இரக்க உணர்வாலும் அழகுபடுத்தியவர் அன்னை. அந்த சேரிகளில் கண்ணீருடனும் வேதனை யுடனும் வாழ்ந்துகொண்டிருந்த இலட்சக்கணக்கான ஏழைகளின் வாழ்வில் மகிழ்ச்சியை நிரப்பியவர் அவர்.

இவை இரண்டையுமே தான் விட்டுச்செல்வதாகக்கூறியது எத்தகைய உண்மையென உலகம் அறிந்து கொண்டதில் வியப்பில்லை சமூக சேவைக்கென கடவுளின் அழைப்புக் கிடைத்த மறுகணமே கன்னியர் மடத்தில் இருந்து வெளியேறினார். இறைவன் படைத்த வெளியுலகம் அன்னையின் மனதில் வேதனைச்சுமையைத்தான் ஏற்றிவைத்தது காலம்பூராகவும் வேதனையில் தவித்துக்கொண்டிருக்கும் ஒரு கூட்டம், மகிழ்ச்சிக்கடலில் மிதந்துகொண்டிருக்கும் மற்றொரு கூட்டம், ஏன் இந்த முரண்பாடு என்று அன்னைக்கு விளங்கவில்லை. இந்த முரன்பாட்டை தகர்த்துவிட வேண்டு மென்ற மூர்க்கத்தனம்தான் அன்னை நெஞ்சத்தில் உருவெடுத்தது.

கல்கத்தாவின் பேராயர் மொன்சிக்னர் பேர்டினன்ட்டிஸ் முன்னிலையில் இளம்திரேசா நின்றுகொண்டிருந்தார். .எனக்குத் தெரியும் இந்தப் பெண்மணியை தேவாலயத்தில் ஒரு மெழுகுவர்த்தியை பற்றவைப்பது எப்படி என்று தெரியாது இவரால் எப்படி ஒரு சபயை உருவாக்க முடியும் இப்படிக்கேட்டார் ஆயர் அந்த வார்த்தைகள் அன்னையின் இதயத்தில் ஆழமாகப் பதிந்துவிட்டன தன்னந்தனியாளாய் அடிப்படை எதுவுமின்றி அக்னஸ் கொன்ஜா பொஜாக்ஸியு என்று தனது பெயரை மாற்றிக்கொண்டார். சேரிகளினூடே தன் தடயங்கள் பதித்தார் அதன்மூலம் உலகில் அவர்பதித்த தடயங்களின் நிழலில் கோடிக்கணக்கான உயிர்கள் குளிர்காய்கின்றன.

கத்தோலிக்கம் என்ற மதம் பரவலாக பின்பற்றப்பட்டுவந்த நாடுகளில்கூட அதன் நம்பிக்கை விமர்சனத்திற்குட்பட்ட கடினமான காலகட்டத்திலும் அன்னைதெரேசா ஒரு கட்டுப்பாடுள்ள கத்தோலிக்கப் பெண்மணியாக நிலைத்து நின்றவர். ''அன்னையின் கிறிஸ்துக்கோட்பாடு அவரது உள்ளத்தில் ஊடுருவியவண்ணமே இருந்தது'' என இந்துஸ்தான் டைம்ஸ் தனது முதல்பக்கத்தில் அன்றைக்கு அஞ்சலி செய்திருந்தது. ''20ம் நூற்றாண்டில் அசாதாரண பெண்மணி அன்னை தெரேசா'' என்று புகழாரம் சூட்டினார் பாப்பரசர் அருளப்பர் சின்னப்பர்.

ஒருவர் இறந்து அவர் மூலம் புதுமைகள் நடைபெற்றால் அவரைப்புனிதராக்க நீண்ட வருடங்கள் பிடிக்கும் ஆனால் அன்னைதெரேசா இறந்து ஆறுவருடங்களிற்குள்ளேயே புனிதர் என்ற பட்டத்தை சுவீகரித்துக்கொண்டவர்.

அன்னைதெரேசாவை நேசித்த இதயங்களின் இல்லங்களை அவரது உருவப்படம் நிட்சயம் அலங்கரிக்கும்.

நெய்தல் நங்கை

# இலங்கையின் அரசோச்சியதமிழ் மன்னர்கள்

கலாபூஷணம் முல்லைமணி

இலங்கையில் தொல்லியல், மானிடவியல் துறைகள் வளர்ச்சியடையாமல் இருந்த காலத்தில் மகாவம்சம், தீபவம்சம் போன்ற பாளி நூல்கள் கூறும் வரலாறே இலங்கையின் வரலாறு என நம்பப்பட்டது. இவற்றின் அடிப்படையில் சிங்கள மக்களின் மூதாதையர்கள் வட இந்திய ஆரியர்களின் பரம்பரையினர் எனவும், தமிழர்கள் தென்னிந்தியாவிலிருந்து படையெடுப்பாளர்களாகவும், வர்த்தகர்களாகவும் குடியேறிய சிறுபிரிவினர் எனவும், கூறப்படுகின்றது. ஆனால் அண்மைக்கால தொல்லியல் ஆய்வுகள் தமிழ், சிங்கள மக்களின் மூதாதையர்கள் தென்னிந்தியாவிலிருந்து புலம் பெயர்ந்தவர்கள் எனத் தெளிவுப்படுத்துகின்றன.

சேன, குத்தக என்னும் தமிழ்க் குதிரை வியாபாரிகளின் மக்கள் அனுராதபுரத்தில் ஆட்சி புரிந்த சூரத்தீசனை வென்று அனுராதபுரத்தைக் கைப்பற்றி இருபத்திரண்டு ஆண்டுகள் (கி.மு 177-155) நீதி தவறாது ஆட்சிபுரிந்ததாக மகாவம்சம் கூறுகின்றது. அவர்கள் தமிழகத்திலிருந்து படையெடுத்துவந்தவர்கள் எனவும், பாரத சமூகத்தைச்சோந்தவர்கள் என்றும் பேராசிரியர் சுதர்சன செனவரட்ணா கூறுகின்றார். சேன, குத்தக என்ற பெயர்கள் சங்ககாலத்தில் தமிழகத்தில் வழக்கில் இருக்கவில்லை. ஆனால் இலங்கையில் சமகாலத்தில் கி.மு 3ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டுக்களில் இப்பெயர்கள் இடம் பெறுகின்றன.

அநுராதபுரத்தில் அசோகனை வென்ற எல்லாளன் என்ற தமிழ் மன்னன் 44 ஆண்டுகள் (கி.மு 145-101) தொடர்ச்சியாக ஆட்சிபுரிந்தான். இலங்கை வரலாற்றில் மிக நீண்டகாலம் ஆட்சிபுரிந்தவன் என்ற பெருமை அவனுக்குரியது. இவன் நீதிதவறாது ஆட்சிபுரிந்ததாக மாகாவம்சம் கூறுகின்றது. இம்மன்னனும் தென்னிந்திய சோழர் உயர் குடிப் பிறந்தவன் என்று கூறுவர். ஆனால் சங்க இலக்கியங்களிலோ வரலாற்று ஆவணங்களிலோ எல்லாளன் படையெடுத்து வந்ததற்கான ஆதாரம் இல்லை. இன்னொரு நாட்டின் மீது படையெடுக்குமளவிற்கு வலிமை வாய்ந்த அரசுருவாக்கம் அங்கு ஏற்படவில்லை. எனவே வடஇலங்கையில் சிற்றரசனாக இருந்த எல்லாளன் படை திரட்டி அநுராதபுரத்தைக் கைப்பறினான் என்று கொள்வதே பொருத்தமானது.

சிங்கள மன்னர்களின் பெருமைகளைப்படைத் தோன்றிய மகாவம்சம் தவிர்க்க முடியாது தமிழ் மன்னர்களைப் பற்றியும்குறிப்பிடத்தவறவில்லை.

மகாவம்சம் துட்டகாமினியைச் சிங்கள தேசிய வீரன் எனப்பாராட்ட முயன்றதன் மூலம் கி.மு முதலாம் நூற்றாண்டளவில் தென்னிலங்கை முழுவதும் தமிழர்கள் செறிந்து வாழ்ந்த பிரதேசமாகவும் தமிழர்களால் அப்பிரதேசங்கள் ஆழப்பட்டன என்றும், மறை முகமாக நிறுவியுள்ளது. இக்காலத்தில் நாக சிற்றரசுகளும் வேறுபல தமிழ்ச்சிற்றரசுகளும் தென்னிலங்கையில் பரவலாக ஆட்சியில் இருந்தன. மகாவலி கங்கைப்பிரதேசத்தில் பரவலாக ஆட்சியில் இருந்தன. என்பதை மகாவம்சம் எடுத்துரைக்கிறது. துட்டகாமினி இந்தச் சிற்றரசுகளுடன் போர்புரிந்து வெற்றியீட்டிய பின்பே அநுராதபுரத்தில் எல்லாளனுடன் போர் தொடுக்க முடிந்தது.

தென்னிலங்கையில் கதிர்காமம், சந்தனகாமம் என்ற பிரதேசங்களை தமிழ்ச் சிற்றரசர்கள் ஆண்டுவந்தனர். கதிர்காமம், சந்தனகாமபிரதேசச் சிற்றரசர்கள் தேவநம்பியதீசன் (கி.மு 247-207) அழைப்பின் பேரில் அநுராதபுரத்தில் புனித அரசமர நாட்டு விழாவில் கலந்து கொண்டனர்.

துட்டகாமினியின் ஆட்சிக்காலத்தில் (கி.மு 104) ஏழுத்தமிழர்கள் படையுடன் மாதோட்டத்தில் வந்திறங்கினர். இவர்கள் அநுராதபுரத்தைக் கைபற்றினர். அவர்களில் ஒருவன் துட்டகாமினியின் மனைவியைக்கவர்ந்து சென்றான். இன்னெருவன் புத்தரது பிட்சா பாத்திரத்தை எடுத்துச் சென்றான். புலகத்தா, பாகியா, பணையமாற பிளையமாற, தாடிக என்றும் ஐந்து தமிழர்கள் மாறி மாறி 14வருடம் 7 மாதங்கள் அநுராதபுரத்தை ஆட்சிப்புரிந்தனர்.

சோழநகரினின் ஆட்சியை முடிவுக்குக் கொண்டுவந்த அவன் மனைவி அநுலாதேவி வடுக என்ற தமிழனை அரசனாக்கினாள். அவள் 2 மாதங்கள் (கி.மு 47) ஆட்சி செய்தான். பின் இவனைக் கொன்று விட்டு அரண்மனைப் புரோகிதனான நீலிய என்ற தமிழனை அரசன் ஆக்கினாள். அவன் 6 மாதங்கள் ஆட்சி செய்தான்.

மீதி அடுத்த இதழில்...

# இலக்கியச் சங்கமம்

## ஜேர்மனியிலும் இசைப்புலவர் பரம்பரை வாரிசு!.




காற்றுக்கில்லை ஒரு வேலி, கலைக்கு இல்லை ஒரு எல்லை. என்று கடல் கடந்தும் பரிணமிக்கும் கலைஞர்கள் கலையின் இரு கண்கள். நம் இனத்தின் கலாச்சாரத்தை கட்டிக்காக்கும் காவலர்கள். காலத்தின் ஜதிக்கு சுதிசேர்க்கும் கலைஞர்கள் அருகி வருகிறார்கள் என்ற கவலை வந்தாலும் கூட கலைக்கென்றே பிறந்தவர்களை காலம் தழைத்தோங்க வைக்கும். ஒவ்வொரு சிற்பியும் உளியின் உதவியோடு சிற்பத்தை வடிக்கிறான். அதே போல ஒவ்வொரு தாளவாத்தியமும் கலையையும், கலைஞனையும் மெருகேற்றும் கருவிகளே. இசை தடுமாறும் இதயங்களுக்கு இசை ஓர் கலங்கரை விளக்கு. படித்தவர் முதல் பாமரர் வரை பேதமின்றி புரியக்கூடிய மொழி இசை மட்டுமே. இரு விழிகளுக்கு விருந்தாக, செவிகளுக்கு இனிமையாக சென்றடையும், இசை ரணமான இதயங்களுக்கும் மருந்தாக மாறுகின்றது.

அந்த வகையில் மிருதங்கம் என்பது இசையின் அர்த்தங்களை தொட்டு நிற்கின்ற ஓர் அருமையான கலை வடிவமே. ஆவ்வாறான பெறுதற்கரிய கலைக்கு ஓர் இளம் கலைஞன் முடிசூட்டிய நிகழ்வு கடல் கடந்தும் இடம் பெற்றது என்றால் அது நம் நாட்டிற்கும் கலைக்கும் கிடைக்கப்பெற்ற அரும்பேறு என்றே சொல்லலாம்.

அண்மையில் ஜேர்மன் வூப்பாற்றல் மண்டபத்தில் லயகுமரன் திரு. சண்முகரத்தினம் பிரணவநாதன் அவர்களின் புதல்வனும் மாணவனுமாகிய செல்வன் பிரணவநாதன் பிரஷாந்த் அவர்களின் மிருதங்க அரங்கேற்றம் இடம்பெற்றது.

இதில் சிறப்பம்சம் என்னவென்றால் இந்த மிருதங்க அரங்கேற்றத்தில் செல்வன் பிரஷாந்த் அவர்களின் பெரிய தந்தை கலாசூடாமணி திரு.சண்முகராகவன் அவர்கள் பாடியதும் பெரும் சிறப்பாக அமைந்தது. அன்றைய அரங்கேற்றத்தில் சண்முகராகவன் அவர்களுடன் இணைந்து ஜேர்மனியில் வசிக்கும் திரு.சின்னராசா கண்ணன் அவர்களும் இணைந்து சிறப்பாக பாடினார். நெய்வேலி திரு. எஸ்.ராதாகிருஷ்ணன் அவர்கள் வயலின், பெங்களூர் திரு.ஆர்.என்.பிரகாஷ் அவர்கள் கடம், திரு.செல்வநாயம் அவர்கள் கஞ்சிரா, திரு.மு.சிதம்பரநாதன் அவர்கள் மோர்சிங், தபேலா ஆகிய பக்கவாத்தியக் கலைஞர்களும் இணைந்து ரசிகர்களை பெரு மகிழ்ச்சியில் ஆழ்த்தினர்.

அன்றைய அரங்கேற்றத்தில் பிரதம விருந்தினராக அகில இந்திய வானொலி மிருதங்க கலைஞர் வித்துவான் பெங்களூர் திரு.ஆர்.என். பிரகாஷ் அவர்கள் கலந்து கொண்டார்கள். சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட நம் நாட்டு கலைஞர் தவில் மேதை திரு.V.தெட்சணாமூர்த்தி அவர்களின் புதல்வர் தவில் சக்கரவர்த்தி திரு.தெ.உதயசங்கர் அவர்கள் கலந்துகொண்டார்கள். "இது வெறும் மிருதங்க அரங்கேற்றமாக மாத்திரம் இருக்கவில்லை, கூடவே கலை என்ற ஆலவிருட்சத்தின் விழுதுகளாய் ஓர் இசை பாரம்பரியத்தின் இளைய தலைமுறைகளும் சேர்ந்து "எக்காலத்திலும் அழியாமல் கலையை கண்போல் காக்க ஓர் சங்கம் அமைத்துள்ளோம்" என்று கூறாமல் கூறியது போல் இருந்தது அன்றைய அரங்கேற்ற நிகழ்வு.

இரத்தத்தில் கலந்து வருகின்ற இசைஞானம் இறைவனின் ஒரு கொடையே. அந்தவகையில் செல்வன் பிரஷாந்த் பிரணவநாதனும் இசை சாம்ராஜ்யத்தின் இளைய தளபதிகளில் ஒருவரே என உணர முடிந்தது. யாழ் மண்ணில் இசைப்புலவர் என்ற தனிப்பெருமைக்குரிய இசைமேதை திரு.என்.சண்முகரத்தினம் அவர்களின் புதல்வர்கள் கலாசூடாமணி திரு.சண்முகராகவன், லயகுமாரன் திரு.பிரணவநாதன் நம் நாட்டில் மட்டுமன்றி கடல் கடந்தும் கலைமணம் வீசும் புகழ்பூத்த கலைஞர்கள்.

ஓர் இசை விருட்சத்தின் வித்துகளாய் கிளை பரப்பிய அந்தப் புதல்வர்கள் தமக்கு பின்பும் தம் சந்ததியினரையும் இசைக்கொரு களம் அமைக்கும் கலைஞர்களாய், எக்காலத்திற்கும் கலைக்கொரு காவலர்களாய் உருவாக்கி கொடுத்திருப்பது கலை உலகிற்கு அவர்கள் செய்கின்ற கணக்கிட முடியாத ஓர் காணிக்கையே எனலாம்.

தனது மிருதங்க இசைக்கொரு தளமாய் அனைத்து பார்வையாளர்களையும் தாளம் போட வைத்த செல்வன்.பிரஷாந்த் பிரணவநாதன் அவர்களும் அவரை ஓர் கலைஞனாக பரிணமிக்க வைத்த பெற்றோருக்கும் அவரது இசைக்குடும்பத்தைச் சேர்ந்த அனைவருக்கும் கலை உலகின் சார்பாக எனது நன்றிகள் வாழ்த்துக் களுடன்.

சுஜா அனந்தன் - ஜேர்மனி

# வாரியார் சொன்ன சஸ்பென்ஸ்

வேட்டைக்குச் சென்ற அரசன் தாமதமாக களைத்துப் போய் நள்ளிரவில் அரண்மனைக்குத் திரும்புகிறான், ஆவலோடு அந்தப்புரம் சென்றான், ராணியின் அறையில் அவன் கண்ட காட்சி.


மன்னனும் ராணியும் மட்டுமே படுத்துச் சயனிக்கும் அந்த மஞ்சத்தில் ராணி தன்னை மறந்து தூங்கிக் கொண்டிருந்தாள், அவள் அருகில் பதினெட்டு வயது வாலிபனும் படுத்து உறங்குகிறான், ராணியின் கைகள் அந்த வாலிபன் மீது கிடக்க,

மன்னனுக்கு வந்ததே கோபம் உறைவாளை உருவினான் இருவரையும் கொன்றுவிட. தான் வேட்டைக்குச் சென்றுவிடராணி இன்னுமொருவனுடன் கள்ளநட்புக் கொண்டு விட்டாள் என நினைத்து விட்டான்.

ஒரு வினாடி நின்றான், நிதானித்தான், சிந்தித்தான், அந்தப்புர வாசல் மற்றும் அறையின் கதவுகள் ஜன்னல் எல்லாம் திறந்திருக்கின்றன, விளக்குகள் எங்கும் பிரகாசமாக எரியும் போது ஓங்கிய வாளை உறையிலிட்டான், இதற்குள் ராணியும் விழித்துவிட்டாள்.

மகனே இதோபார் உன் தந்தையை, என்று பக்கத்தில் படுத்திருந்த வாலிபனை தட்டி எழுப்பினாள். அந்த வாலிபனும் ஓடிவந்து மன்னரின் பாதங்களில் விழுந்தான்.

பன்னிரண்டு வருடங்களுக்கு முன்னால் காட்டில் காணாமல் போன இளவரசன் அன்று நாட்டுக்குத் திரும்பியிருந்தான், மன்னன் அவசரப் பட்டிருந்தால் என்ன ஆகியிருக்கும், அதனால் தான் எந்த காரியத்தையும் அவசரப்படாமல் நிதானமாகச் செய்யவேண்டும்.



# பூவையர் உலகம்

## அதிக மருந்துகள் ஆபத்தைத்தரும்

ஆண்களுடன் ஒப்பிடும் போது பெண்களே அதிக மருந்துகளைப் பாவிக்கின்றார்கள் சுய மருத்துவம் செய்யும் போது அதிகமாக மருந்துகளையும் குளிசைகளையும் பாவிக்கும் பெண்கள் சில முக்கிய விடயங்களை கவனித்தல் அவசியம்

கர்ப்பகாலத்தில் ஏற்படும் இயற்கையான பல உடல் உபாதைகளை உடலில் நிகழும் மாற்றங்களை ஏதோ நோய்க்கான அறிகுறிகள் என எண்ணிப் பெண்கள் பலர் கர்ப்பகாலத்தில் வைத்தியர்களை ஆலோசிக்காமல் மருந்துகளையும் குளிசைகளையும் பாவிப்பதால் அந்தப் பெண்ணை மட்டுமல்லாமல் கருவில் இருக்கும் குழந்தையையும் அது பாதிக்கிறது.

கர்ப்பத்தில் முதல் மூன்று மாதங்கள் கருவிலிருக்கும் குழந்தையின் உறுப்புக்கள் வளரும் காலம் தாய் உட்கொள்ளும் மருந்துகள் குழந்தையின் வளர்ச்சியைப் பாதிப்பதோடு மட்டுமல்லாமல் குறைப் பிரசவம் நிகழ்வதற்கோ, கருக்கலைவதற்கோ, வாய்ப்புக்கள் அதிகம்.

நான்காவது மாதம் முதல் ஆறாவது மாதம் வரை உட் கொள்ளும் மருந்துகள் குழந்தையின் முதுகெலும்பு, இடுப்பெலும்பு, மூளைவளர்ச்சி, போன்றவற்றை பாதிக்கின்றது எனவே இப்படியான நிலையில் உள்ள பெண்கள் சாதாரண காய்ச்சல் தலைவலிக்குக் கூட மருந்துகளைப் பாவிப்பதில் அவதானமாக இருத்தல் வேண்டும்.

அடுத்து தாய்ப்பாலூட்டும் காலத்தில் மிகுந்த எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும் சில வகை மருந்துகள் தாய்ப்பாலுடன் கலந்து குழந்தைக்குப் போகக் கூடும்

கர்ப்பத்தைத் தற்காலிகமாகத் தடை செய்ய கருத்தடை மாத்திரைகள் உபயோகிப்பது பெரும்பாலான பெண்களது வழக்கம். கருத்தடை மாத்திரைகள் நம்பகரமானது என்பதால் அதை நாடும் பெண்களின் எண்ணிக்கையும் அதிகம். ஆனால் மருத்துவரின் ஆலோசனையின்றியோ நீண்ட நாட்களுக்கோ இவற்றை உட்கொள்ளும் பெண்களுக்கு மார்பகப் புற்று நோய், மலட்டுத் தன்மை, உடல் எடை அதிகரித்தல் ரோம வளர்ச்சிகள் போன்றவை ஏற்படலாம் மெனோபஸ் காலகட்டத்தில் இருக்கும் பெண்களுக்கு உடலளவிலும் மனதளவிலம் பல்வேறு மாற்றங்கள் நிகழ்வது சகஜம் அவற்றையெல்லாம் ஏதோ நோய்களின் அறிகுறியாக நினைத்துக் கொண்டு மருந்து மாத்திரைகளை உட்கொள்வது மிகவும் ஆபத்தானது.

அழகாக இருக்க ஆசைப்படாத பெண்களே இருக்க மாட்டார்கள், உடலை இளைக்க சுருக்கங்கள் விழாமலிருக்க என எல்லாவற்றிற்கும் உரிய மருந்து மாத்திரைகள் வந்து விட்டன அவற்றை உட்கொள்ளும் பெண்கள் மிகப் பெரிய பின்விளைவுகளைச் சந்திக்கின்றார்கள் சந்தோசமான மனநிலை ஆகியவையே அழகின் அடிப்படை என்பதை இவர்கள் உணரவேண்டும், சாதாரண தலை வலி காய்ச்சல் போன்றவற்றுக்குக் கூட தானாகவே ஏதேனும் மருந்துக் குளிசைகளை உட்கொள்ளும் பெண்கள் பலர் எதற்கெடுத்தாலும் மருந்து உட்கொண்டு பழகி விட்டால் பிற்காலத்தில் அதுவே நிரந்தரமாகி விடும் வாய்ப்புண்டு. மருந்துகளின் செயற்திறனும் பாதிக்கப்படும் கூடிய விரைவில் இயற்கை முறையில் சிகிச்சைகளை மேற்கொள்வதே பெண்களுக்குப் பாதுகாப்பானதும் தேவையானதும் கூட...



## கண்களின் புருவங்களுடன் பெண்களின் குணங்கள்



பெண்களின் புருவங்களை வைத்து பெண்களின் குணங்களைக் கூறியுள்ளார்கள் சோதிடர்கள் நீங்கள் உங்கள் புருவங்களைப் பற்றிதெரிந்து கொள்ளப் போகிறீர்களா?.

அடர்ந்த புருவம் உள்ள பெண் - சிக்கனக்காரி.

மெல்லிய புருவம் உள்ள பெண் - வாழ்க்கையில் உற்சாகம் இழந்தவள்


கோடு வரைந்தது போல் உள்ள பெண் - பகட்டாக வாழ்வாள் இவள் உள்ளத்தில் கருணை இருக்காது

வளைந்து அலைபோல் இருப்பவள் - எதிலும் தீவிரமாக இருப்பாள்

நீண்ட புருவம் உள்ள பெண் - எதிலும் தனித்தன்மை பெற்றுத் திகழ்வாள்

குறுகிய புருவம் உள்ள பெண் - முடிவுகளை எடுப்பதில் சாமர்த்தியசாலி


மேலெழுந்த வாரியாக புருவம் உள்ள பெண் - தீர்க்க சிந்தனை உடையவள் எதையும் சாதிக்கக் கூடியவள்



## உங்களுக்கு நெஞ்சு எரிச்சலா?

* உணவை அவசரம் அவசரமாக விழுங்காதீர்கள் நிதானமாக சுவைத்து உண்ணுங்கள்.
* ஒரே நேரத்தில் நிறைய உண்பதை தவித்துக் கொஞ்சமாக பிரித்து உண்ணுங்கள்.
* உணவு உண்ட உடனேயே படுக்காதீர்கள்.
* மதுவகை, புகைத்தல், கோப்பி மற்றும் அமிலத்தன்மையை தூண்ட கூடிய உணவுகளைக் கூடுமானவரை தவிக்கவும்.
* வயிற்றை இறுக்கும்படியாக உடைகளை அணியாதீர்கள்.





## தணலின் பூவையர் கருத்தாடல் 02



பொதுவாக ஒரு குடும்பத்தை எடுத்துக்கொண்டால் அங்கு வேலைக்குச் செல்லாத வீட்டில் இருக்கும் பெண்களின் உழைப்பு கணிக்கப்படுவதில்லை அவர்களை சும்மா இருப்பதாக குறைத்து மதிக்கப்படுகிறார்கள்.

தணலின் பூவையர்களே இதுபற்றிய உங்களுடய புரட்சிக் கருத்துக்களை தணலின் கருத்தாடலுக்கு அனுப்பி வையுங்கள்



தணலின்
பூவையர் கருத்தாடல்
இல. 61, கற்குழி,
வவுனியா

# கிழக்கில் இருந்து ஒரு நகைச் சுவைச் சஞ்சிகை

**சுவைத்திரள்**

சுவை 20 மலர் 10 ஆடி, ஆவணி, புரட்டாதி 2003.

தமிழ் உலகில் இன்று ஒரு நகைச் சுவைச் சஞ்சிகை, அதுவும் ஈழத்தில் இல்லை என்பது யாவரும் அறிந்ததே. 35 வருடங்கள் யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவந்த சிரித்திரன் சஞ்சிகைக்குப் பின்பு இன்று கிழக்கில் இருந்து ஒரு மாபெரும் சிரிப்புச் சஞ்சிகை வெளிவந்து இருக்கின்றது. அதன் பெயர் சுவைத்திறள் இதன் ஆடி. ஆவணி, புரட்டாதி (2003) இதழ் எமக்குக் கிடைக்கப் பெற்றது. சிரித்திரன் பாணியில் அமைக்கப்பட்டுள்ள இந்தச் சஞ்சிகையின் அட்டையில் ஒரு போதும் பிரசுரிக்கப்படாத மாமனிதர் சிரித்திரன் சி.சிவஞான சுந்தரம் அவர்களால் கீறப்பட்ட ஒரு நகைச் சுவைக் கார்ட்டூன் இடம் பெற்றுள்ளது.

இச்சஞ்சிகையில் தமது கருத்துக்களை மாதம் மாதம் வந்து நகைச்சுவை மழை பெய்யும் பாத்திரங்களாக கதைகாவி. விஸ்கி அடிகள், மதுராஜன் போதனைகள் என்பன இடம் பெற்று உள்ளன இவற்றில் சிலவற்றைக் கீழே காணலாம்.

சுவைதிரள் தனது இம்மாத ஏட்டில் அன்று கேட்ட நகைச்சுவை என ஒரு பகுதியை ஆரம்பித்துள்ளது, இந்த ஏட்டில் இடம் பிடித்து உள்ள ஒரு நகைச்சுவை அரசியலில் ஜி.ஜி. பொன்னம்பலம்த்தின் காலத்துக்கு எம்மை அழைத்துச் சென்றுள்ளது. அந்தக் காலத்தை யோசித்துப் பார்ப்பின் இதுவும் நகைச்சுவையாகவே உள்ளது. சிரிப்பு மேடை கண்ணதாசனின் கேள்வி பதில்கள் நாட்டுக்கருடன் பதில்கள் மறக்க நினைத்தாலும் துளிர்க்கும் கவிதைகள் என்பன இவ்விதலில் இடம் பெற்றுள்ளதுடன் ஆரையம்பதி தமிழ்ச் செல்வியின் ஆசைஆசையாயிரு என்ற சிரிப்புக்கவிதையும் இடம் பெற்றுள்ளது. தமிழ் உலகின் ஆசையாசையாயிரு என்ற சிரிப்புக்கவிதையும் இடம்பெற்றுள்ளது தமிழ் உலகில் சிரிப்புச் சஞ்சிகை இல்லாத குறையைச் சுவைத்திரள் போக்கும் போல் தெரிகிறது.

நித்தி.










## நூல் விமர்சனம்

### நவீன வள்ளி திருமணம்



## தணலின் நூல்விமர்சனப்பகுதியில்

உங்கள் நூல்களும் இடம்பெற வேண்டுமாயின் உங்கள் நூல்களின் இரண்டு பிரதிகளை செந்தணலிற்கு அனுப்பி வையுங்கள்.

# கவிதைக் களம்

## புதியபாதை தேடி

கலர்க்கனவுகளுக்கு ஆசைப்பட்டு
கறுப்பு வெள்ளை நினைவுகளை
இழந்து விட்டோம்
மாற்றுத் தேசத்தவன்
பிழிந்து விட்டான் உழைப்பை
மறுப்புத் தெரிவிக்க முடியாமல்
மலையகத்துள் சிறையுண்டு விட்டோம்
ஆனால் தேசத்தை நிமிர்த்தி விட்டோம்
வேற்று தேசத்தவன் பிடியிலிருந்து
சுதந்திரம் பெற்று வேர் பிடுங்கும்
இனவாதிகளிடம்
சிக்கி வேதனைப்படுகிறோம்
மாற்றமொன்றுக்கு அரசியலை தேடினோம்
தலைமைகள் தலைமுறைக்கு
சொத்துச்சேர்த்து விட்டன
மாற்ற முயற்சித்து புதிய பாதை
தேடுகிறோம்?

எஸ்.பி.பாலமுருகன்
பதுளை

## ஓட வேண்டும்....!

ஓட வேண்டும்..!
தமிழினம் தழைப்பதை
தடுக்கும் சக்திகள்
தன்நிலை மறந்து
தலை தெறிக்க ஓட வேண்டும்!


ஜூலை கலவரத்தில்
உண்ண உணவின்றி
உடம்பில் துணியின்றி உயிருக்காய்
போராடிய
உர நெஞ்சுத் தமிழன் - இன்று
உயிரை பணயம் வைத்து
உரிமைக்காய் போராடுகிறான்!

மெல்லத் தமிழ் இனி
சாகுமென்று சொன்னவர்கள்
பேச வார்த்தையின்றி
பேயறைந்தவர் போல்
ஊமைகளாய் நிற்கிறார்கள்!

இனிஎதற்கும் அஞ்சமாட்டான்,
ஈவிரக்கம் பார்க்கமாட்டான்,
உரிமைகளை வென்றெடுத்து
ஊரைக் காக்க
உயிரையும் கொடுப்பான்!
இவனுக்கு
தமிழினம் தழைப்பதை
தடுக்கும் சக்திகள்
தன் நிலை மறந்து
தலைத்தெறிக்க ஓட வேண்டும்...!

க.நிஷாந்தன்
நானு ஓயா.


## கோரிக்கை



அமைதியான
பூமிவேண்டும்
ஆயுதம் இல்லாத
உலகம் வேண்டும்
நின்மதியாய் நாம்
வாழ
நிலையான சமாதானம்
வேண்டும்

தமிழாம்பிகை
S.ஜெகன்
நானாட்டான்

## நானும்



வார்த்தைகளால் விளையாடி
விட்டேன்
வரைந்து காட்டினேன்
வாசித்துக்காட்டினேன்
எவருக்கும் அர்த்தம்
புரியவில்லையாம்
நன்றி கடவுளுக்கு
நானும் கவிஞன்
ஆகிவிட்டேன்.

சபீலா ஜெ
சுன்னாகம்


## நினைவு

தினமும் வருகிறது இரவு
இங்கே வருவதில்லை உறவு
இரவு முழுவதும் அடைத்திருக்கும்
இங்கே திறந்தே இருக்கும்
உன் நினைவுகள்

பாக்கியராஜ்
இல 1/4 B செட்டிகுளம்
அடப்ப்ங்குளம்

## உன்னால்தான்


உன்னைப் பார்க்கக் கூடாது
பேசக் கூடாது பழகக் கூடாது
என்றெல்லாம் நினைக் கிறேன்
ஆனால் உன்னைக் கண்டால்



கண்ணோடு பேசி
காதோர கேசம் கோதி
உதட்டோரம் சிரித்து
கன்னங்களோடு
உறைந்து போக - என்
உயிர் தாவுகிதே

எனக்குப் பிடிக்காதவை எல்லாம்
உன்னால் பிடித்துப் போகிறதே
உன் கோபிய விளையாட்டுக்களைக் கூட
என்மனம் விரும்பி ரசிக்கிறதே
நீ அடிக்கடி என்னை மிரட்டும் போது
ஆனந்தம் கொள்கிறதே
நீ ஞாபகமாய் பேசும் போது
என் இதயம் துடிக்க மறக்கிறதே
இவை அரங்கம் ஏறாதவை
எனப்புரிந்தாலும் உனை
உள்ளம் அழைக்கிறது

நீ பார்க்கும் போது என் மஞ்சள்
மணக்கிறது
நீ சிரிக்கும் போது என் கொலுசு
இசைக்கிறது
நீ போசும்போது என் பூக்கள் மலர்கிறது
நீ இட்டலின்றி திலகம்
இனிக் கொள்வதில்லை - என
சோபையற்றுக் கிடக்கின்றதே -என்நுதல்.



தமிழ் அழகு
வவுனியா.

## பிரியமே

நான்
உன்னைப் பிரிந்ததை
நினைத்து ஒரு போதும்
அழுததில்லை
ஏனெனில்
உன்னைப் பிரிந்த சோகம்
என்
அழுகைக்கும் அப்பாற்பட்டது

V.வினோ
தவசிக்குளம் வவுனியா




## தமிழ்த்தினப் போட்டிகளும் தமிழ் நாடகங்களும்

ஆடுதல் பாடுதல் சித்திரம் கல்வி ஆதியினைய கலைகளில் உள்ளம் ஈடுபட்டென்று நடப்பவர் பிறர் ஈன நிலை கண்டு துள்ளுவார் - பாரதி

வருடா வருடம் தமிழ்த்தினப் போட்டிகளுக்காக மாணவர்கள் தயார் படுத்தப்படுகின்றார்கள் பல்வேறு திறன்களில் மாணவர் தம் திறமை பரீட்சிக் கப்படுகின்றது மதிப்பிடப்படுகின்றது

பா ஓதுதல், கட்டுரைப் போட்டி, கவிதை, சிறுகதை எழுதுதல், பாடல், ஆடல், வில்லுப்பாட்டு, நாடகப் போட்டிகள் என பல் தரப்பட்ட விடயங்களில் மாணவர்கள் பயிற்சி பெற்று போட்டிகளில் ஈடுபடுகின்றனர் நடை முறையில் இருக்கும் கல்விக் கலைத் திட்டங்களுக்கு அமைவாக இந்தப் போட்டிகள் நடாத்தப்பெற்று அதனூடாக மாணவர் திறன் விருத்தி பெற்று வருகின்ற போது இப் போட்டிகள் அர்த்தமுள்ளனவாக கருதப்படும். அப்படி இல்லாது வெறும் போட்டிக்காக வசதியாக அகப்படும் மாணவர்களைக் கொண்டு போட்டிக்கு தயார் செய்து பின்னர் போட்டியில் இடம் கிடைக்காத போது குறைகள் கூறி நிறைவை அழிப்பதும் பொருத்தமற்றவை.

முதலாம் தவணையில் ஆரம்பிக்கும் பாடசாலை மட்டப் போட்டிகள் கோட்ட மட்டம், வலயமட்டம், மாவட்ட மட்டம் என தெரிவுகள் இடம் பெற்று மாகாண மட்டத்தில் ஜீலை 5ம் திகதி விபுலானந்தர் நினைவு தினத்தில் கொண்டாடப்படுவது வழமை. பின்னர் தேசிய மட்டப் போட்டிகள் மூன்றாம் தவணையில் இடம் பெறுகிறது. இவ் வருடம் மாகாண மட்டப் போட்டிகள் யாழ்ப்பாணத்தில் ஜீலை மாத இறுதியில் அகில இலங்கை ரீதியில் அக்டோபர் 9ம் 10ம் திகதிகளிலும் நடைபெற்றன. தமிழ் மொழித்தினம் டிசம்பர் மாதத்திற்குள் நடைபெறும் என நம்புவோமாக.

ஒரு வகையில் வருடம் முழுவதும் இதற்கான தயார் படுத்தலில் ஆசிரியர்களும் மாணவர்களும் ஈடுபடுவதென்பது தமிழ் மொழி வளர்ச்சியில் உள்ள அக்கறையைக் காட்டுகிறது. அதே வேளை ஆசிரியர்க்கும், மாணவர்க்கும் இப்போட்டிகள் ஒரு பாரமாக இருக்கக் கூடாது பெரும் நிகழ்வுகளை ஒருங்கிணைத்து நடாத்துவதல் உள்ள சிக்கல்களை இப் பத்தி புரிந்து கொள்ளாமல் இல்லை, அதை விட தமிழ் சார்ந்த விடயங்களுக்கான நிதி ஒதுக்கீடுகளில் உள்ள சங்கடங்களையும் உலகம் அறியும். இவ்வளவு சிரமங்களுக்கு இடையிலும் இந்த தமிழ் மொழித் தினப் போட்டிகளும், விழாக்களும் ஓரளவு சிறப்பாக நடைபெறுவது பாராட்டக் கூடியது.

உண்மையில் இப்படியான அரச மட்டப் போட்டிகள் நடாத்தப்படுவதினாலேயே தமிழ் சார்ந்த கலை இலக்கியச் செயற்பாடுகள் மாணவர் மத்தியில் அறிமுகம் செய்து வைக்கப்படுகின்றன. கவிதைகளை நயத்தல், சிறுகதை, கவிதை ஆக்கம், பாடும் திறன் வளர்த்தல், பா ஓதும் முறைகளை அறிந்து கொள்ளல். இசையில் அடிப்படைப் பயிற்சி நடனம் ஆடும் திறனை விருத்தி செய்தல், நாடகம் ஒன்றை ஆக்கும் திறன், நாட்டார் கூத்துக்களை மீண்டும் மீண்டும் பழகி ஆடிக் கொள்ளும் வாய்ப்பு என்பன இப்போட்டிகளினூடாக எம் மக்கள் மத்தியில் தக்க வைக்கப்படுகின்றன. ஏனெனில் பெரும்பாலான கிராமங்களிலும் நகரங்களிலும் மொழி விருத்தி செய்யும் சங்கங்களோ, நிறுவனங்களோ கிடையாது. ஒரு சில இலக்கிய வட்டங்கள், கழகங்கள் தங்கள் அளவில் இயங்கிய போதும் மக்கள் மத்தியில் மொழிப் பயிற்சியும் இலக்கியப் பரீட்சையமும் இல்லை என்பதே யதார்த்தம்.

ஏனெனில் அப்படியான கழகங்கள் இலக்கியப் வட்டங்கள் மாநகரங்களில் பெரும் எடுப்பில் நிகழ்த்தும் இலக்கிய விழாக்கள் பகட்டான ஆடம்பர விழாக்களை விட மக்கள் இதயங்களைக் கொள்ளை கொள்வதற்கு பதிலாக மேலெழுந்த வாரியான சலசலப்புக்கும் பகட்டுத்தனத்துக்குமே வடிகாலாகி விடுகின்றன. முதுகுசொறிதல் என்பதும் முகத்துக்கு நேரே புளுகுதல் என்பதும் தவிர்க்க முடியாத காரியங்களாகி அடிப்படையான மக்கள் விழிப்புணர்வை ஏற்படுத்த தவறிவிடுகின்றன.


அதே வேளை தமிழ்த் தினப் போட்டியில் பங்கு பற்ற இலங்கையின் மூலை முடுக்கிலுள்ள கிராமத்துப் பிள்ளைகளும் சந்தர்ப்பம் பெறுகிறார்கள். ஆசிரியர்கள் ஊடாக மொழி விருத்தித் திறனை பெறுகிறார்கள். உண்மையில் ஆசிரியர்களின் சேவை பாராட்டப்பட வேண்டியதே. அதே வேளை ஆசிரியர்கள் செய்ய வேண்டிய கடமையும் பணியும் இன்னுமொன்று உள்ளது. அதாவது கலை இலக்கிய உலகில் அவ்வப்போது ஏற்படும் மாற்றங்களை உள்வாங்கும் திறனும், அவற்றுக்கேற்ப மாணவர்களைத் தயார்ப்படுத்தலும் அவர்களுக்கே உரிய பணிகளாகும்.

ஏனெனில் கடந்த இரு தசாப்த காலமாக எமது மண்ணில் நிகழ்ந்த இன ஒடுக்கு முறைப் போருக்கு எதிராக கலை இலக்கிய கர்த்தாக்களும், போராளிகளும் தம்மால் இயன்றளவு மண்ணில் கிளர்ந்த வீரியத்தோடும் உலக இலக்கியப் பரப்பில் உரிமைப் போர்க்களங்களில் கிடைக்கக் கூடிய அனுபவப் பகிர்வோடும், புதிய கலை இலக்கியப் போக்குகளை ஏற்படுத்தினர். இதன் எதிரொலியாக கவிதை ஓட்டம் புது இரத்தம் பாய்ச்சி ஒடியது. நாடக உலகு புதிய லயத்தோடும், சுருதியோடும் அரங்கேறியது மக்கள் வாழ்வைப் பிரதி பலித்தும், மெல்லிசைப் பாடல்கள் புதிய ராகங்களைப் பெற்றன. சிறுகதைகள் மண் வாசனை போர் முழக்கத்துடன் உருவாகின. நாவல்களும் புதிய வடிவுடன் தோன்றி வருகின்றன. நாட்டார் கூத்துக்களும் புது மெருகு பெற்றுள்ளன. எனவே மேற்படி உலகு கண்ட மாற்றங்கள் நிச்சயமாக எம் தமிழ் மொழித் தினப்போட்டிகளிலும் எதிரொலிக்க வேண்டும். ஒரு சில பாடசாலைகளில் அவை உள் வாங்கப்பட்டு மேடைகளில் அவற்றின் பிரதி பலிப்பை காணக்கூடியதாக உள்ளது. ஆயினும் எழுபத்தைந்து வீதமான கல்வி உலகம் இது பற்றி எவ்வித பிரக்ஞையுமே இல்லாது, பழைய போக்கிலே அரங்கில் சோம்பி தூங்கி வழிகின்ற படைப்பு களையே கொண்டு வருகின்றார்கள். குறிப்பாக நாடக உலகம் பற்றிய கருத்துக்களையே இங்கு சுட்ட

அதாவது தமிழ் மொழித் தினப்போட்டிக்கு வருகின்ற ஒன்று இரண்டு நாடகங்களைத் தவிர மற்றவை அரங்கப் பிரக்ஞை அற்று நடிப்பு அகர வரிசை அறியாது ஒப்பனையின் பொருத்தப்பாடு இன்றி எழுத்துருவின் முக்கியத்துவம் பேணாது உரையாடல் பாணியில் இசையின் பயன் பாட்டைப் பேணாது ஏனோ தானோ என்று மேடையேற்றி விட்டுப் போகிறார்கள். அண்மையில் கொழும்பில் நடைபெற்ற நாடகப் போட்டியில் மேடையேறிய நாடகங்களைப் பார்க்கும் போது அகில இலங்கை மட்டப் போட்டி நாடகங்களின் தரம் இது தானா? என்று கேட்கத் தோன்றுகிறது. பெரும்பாலான நாடக இயக்குநர்களுக்கு, ஆசிரியர்களுக்கு மேடையைப் பயன்படுத்தும் விபரம் பற்றியோ அரங்க நுட்பங்கள் பற்றியோ அடிப்படை அறிவு இல்லையோ என சந்தேகிக்க வேண்டியுள்ளது.

உண்மையில் வலயக் கல்வித் திணைக்களங்கள் வருடம் ஒரு தடவை எல்லா மாகாணங்களிலும் தமிழ் நாடகப் பட்டறை ஒன்றை ஆசிரியர்களுக்கும் நடிக்கும் மாணவர்களுக்கும் ஒழுங்கு செய்து பயிற்சிகளை வழங்க வேண்டும். அப்போது தான் அரங்கில் நாடகம் மேடையேறும். இல்லையெனில் உரையாடல் தான் நடைபெறும். எனவே அகில இலங்கை ரீதியில் தமிழாசிரியர் களுக்கு ஆர்வமுள்ளவர்க்கு சிறப்பான பயிற்சிகள் மேற்கொள்ளப்படுகின்ற போது அது கிராம மட்டங்களிலும் சுவறி நல்லதொரு அரங்கப் பண்பாடு எம் மாணவர் மத்தியில் வளர்த்தெடுக்கப்படும். இந்த பயிற்சி அவர்களுக்கு மேடையில் உரை ஆற்றவும், பாடவும், விவாதம் புரியவும், தகுந்த முறையில் மொழியைப் பேசவும், கவிதை பாடவும் உதவும் என்பது வெள்ளிடை மலை மேலும் மாணவர்கள் கலை இலக்கியப் பரீட்சயம் உள்ள பண்பட்ட ஒரு சமூகமாக விருத்தியடைவார்கள். அது ஒன்றே அவர்களை தேவையற்ற பொழுது போக்குகளில் இருந்தும் கெட்ட பழக்க வழக்கங்களில் இருந்தும் காப்பாற்றும். இதனூடாக ஒரு ஆரோக்கிமான சமூகத்தை நாம் கட்டி எழுப்பலாம்.

பேராயிரவர்



# பொன்பரப்பித்தீவு

தொடர் 04

பொன்கணேசமூர்த்தி

## சாத்தன் நிலமும் செம்பிறை நிலமும்

எல்லாம் கண்ணிமைக்கும் நேரத்திற்குள் நடந்து முடிந்து விட்டது தமிழ்வீரன் புரவி பாய்ந்து கடந்ததும் வேலுசுமணனின் வாள் திடீரெனக் குறுக்கே நீண்டதும் வெட்டுண்டு போன தலை குருதியைத் தெளித்த படி தனியாக மேலே எழுந்து ஏதோ ஒரு சாலையோர மரத்தில் சடக் கென்று மோதுண்டு மறைந்து போனதும் கண்ணிமைக்கும பொழுதுக்குள் நடந்து முடிந்து போனது

பிரமை நீங்காத விழிகளால் வேலுசுமணனைப் பார்த்தான் துட்டகாமினி பதினாறு அகவைக்குள் சகல போர்க் கலைகளையும் கற்றுத் தேர்ந்தவனும் குருதியைக்கண்டால் இயல்பாகவே குதூகலங்கொள்பவனும் தமிழர்களை ஈழத்திலிருந்து வேரடி மண்ணுமில்லாமல் ஒழிக்க வேண்டு மென்று வெறி கொண்டலை பவனுமான துட்டகாமினி பிறப்பால் தமிழ்த் தொடர்புள்ள வேலுசுமணனின் கொலை வெறியைப் பார்த்த போது குழம்பித்தான் போனான் இவன் புத்தி பேதலித்தவனாக இருக்கவேண்டும் அல்லது இந்த வெறிக்குப் பின்னால் ஏதாவது விபரீதக் காரணம் இருக்க வேண்டும் என்று தீர்மானித்துக் கொண்டான்

வேலு சுமணன் துட்டகாமினியை நோக்கி மெல்லிய நகைப்போடு திரும்பினான் உதட்டோரத்தில் தெறித்திருந்த குருதித் துளிகளை நக்கியவாறு....... துட்டகாமினி உணர்ச்சிகளை வெளிக்காட்டாமல் அவனைப்பார்த்தான்

"சுமணா உன் வேலை முடிந்து விட்டதா?"

"இல்லை இளவரசே இனித்தான் ஆரம்பமாகப் போகிறது"

"என்ன இனித்தான் ஆரம்பமா"

"ஆமாம்" அமைதியாகப் பதிலளித்த படி வாளிலே படிந்திருந்த குருதியைக் கச்சையிலே அழுந்தத் துடைத்துக் கொண்டான்

"வெட்டப்பட்ட தலையைத் தேடப் போகிறாயா?" என்று வேடிக்கையாகக் கேட்டான் துட்டகாமினி

ஆமாம் என்ற வேலு சுமணனின் பதிலால் அதிர்ந்தே போய்விட்டான் அதைப் பார்த்து வேலு சுமணன் மனதுக்குள் நகைத்துக் கொண்டான் இவனென்ன ஈழதேசத்தின் மகா மன்னனாக இருக்கவேண்டியவன் இரத்தத்தை பார்த்து இந்த மாதிரி நடுங்குகிறானே இவனால் எல்லாளனை வெற்றி கொள்ள முடியுமா ? தன்னையறியாமல் தலையை ஆட்டிக் கொண்டான்........

"சுமணா ஏன் தலையை ஆட்டுகிறாய்"

"தலை இருப்பதால் இளவரசே"

வேலுசுமணனின் இடக்கான பதிலால் துட்டகாமினிக்கு சினம் சுள்ளென்று ஏறியது அவனது வலக்கை வாளில் படிந்தது

"வேலு சுமணா தலை இருப்பதால் தானே நீ ஆட்டுகிறாய்"

"ஆமாம் இளவரசே"

"அதை இப்போது நான் தறித்துவிட்டால்.."

"அப்புறம் ஆட்டவே முடியாது இளவரசே" என்று ஒப்புக்



கொள்வதைப்போல பணிவான குரலிற் சொன்னான் பரிதாபமாக முகத்தை வைத்துக் கொண்டு துட்டகாமினிக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை இவன் கொலை வெறியனா பித்தனா என்னை நிழலாகத் தொடரும் காவற்கேடய்மா துட்ட காமினியால் ஒரு முடிவுக்கும் வரமுடியில்லை.

"இளவரசே உண்மையில் என் வேலை இனித்தான் ஆரம்பமாகிறது. இப்போது நான் தறித்த தலையைத் தேடி எடுக்கவேண்டும்"

"பிறகு?" காமினியின் விழிகள் விரிந்தன

"ஏற்கனவே ஒரு தலை சேர்த்து வைத்திருக்கின்டேன்...."

"எங்கே.....?"

"என் புரவியில் அது ஆற்றங்கரையில் எனக்காகக் காத்திருக்கின்றது இளவரசே"

துட்டகாமினி மௌனமாக நிற்க வேலு சுமணன் தொடர்ந்தான்

"இப்போது வீழ்ந்த தலை நிட்சயமாக ஒரு குதிரைப் படைத் தலைவ னுடையதாகத்தான் இருக்கும் அதற்கு விலை அதிகம்."

"எங்கே?"

"வாங்குமிடத்தில்"

துட்டகாமினிக்கு தலை சுற்றியது இந்த முட்டாள் என்ன சொல்கிறான் தலையை யார்? எங்கே? ஏன்? வாங்குகிறார்கள் இவன் புத்தி பிசகியவனேதான்

"இல்லை இளவரசே" என்றான் வேலு சுமணன்

"என்ன இல்லை"

"நான் புத்தி பிசகியவன் இல்லை"

"நான் அப்படிச் சொல்லவில்லையே"

"தங்கள் முகம் சொல்கிறது இளவரசே"

"அப்படிய" என்றான் துட்டகாமினி ஏதாவது சொல்லவேண்டுமே என்பதற்காக

"இளவரசே தலைகள் முக்கியமானவை அதிலும் குருதி காய்வதற்கு முன்னென்றால் அது அது"

"நிறுத்து முட்டாளே" என்று பொறுமையிழந்து இரைந்தான் துட்ட காமினி உதட்டை நக்கியவாறு சிரித்தான் வேலு சுமணன் இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்தபடி சிறிது நேரம் நின்றனர் எங்கோ தொலைவில் மீண்டும் நரிகளின் ஊளை ஆரம்பமாக வேலு சுமணன் அமைதியைக் கலைத்தான்

"இளவரசே இன்னும் தாமதித்தால் மதிப்பற்ற ஒரு தலையை நரிகள் விழுங்கி விடும் அதை எடுத்துக் கொண்டு கண் இமைப்பதற்குள் வந்து விடுகிறேன்" என்று சொன்னவன் துட்டகாமினியின் கட்டளைக்கு காத்திராமல் சாலைக்குட் புகுந்து விட்டான்

துட்டகாமினியும் காலத்தை வீணடிக்கவில்லை வாயைக் குவித்து ஒலியெழுப்ப எங்கிருந்தோ மந்திரத்தால் ஏவப்பட்ட அம்பைப் போல அவன் புரவி முன்னேவந்து அவன் முகத்தோடு முகத்தை உரசியது அதன் பிடரி மயிரை செல்லமாககத தடவிவிட்டு அதன் அதன் மேல பாய்ந்து ஏறிய தட்டகாமினி சாலையை நோக்கி அதைச் செலுத்தினான்.....

அருகே புதருக்குள் அசைவு தெரிந்தது புரவியை நிறுத்தினான் புதருக்குளிருந்து வேலு சுமயன் எட்டிப் பார்த்தான் அவன் கையில் குருதி இன்னமும் உஙையாமல் ஒழுகிக் கொண்டிருக்கும் தலை அவசரமாக வெளியே வரமுயன்றான் அவன்

"நில் அப்படியே" என்று உறுமினான் துட்டகாமினி.....

"வேலு சமணா நீ பித்தனா வெறுங் கொலை வெறியனா யாராவது என்மீது ஏவிவிட்ட அம்பா என் பாதுகாவலுக்கு அனுப்பப்பட்டவனா எனக்குப் புரியவில்லை ஆனால் விரைவில் புரிந்து கொள்வேன் காமினி அபயனுக்கு உன் போன்றவர்களின் காவல் தேவையில்லை என்பதை நீ புரிந்து கொள் என்னை இனிஆமல் தொடர முயற்சிக்காதே முயன்றால் தலை வாங்கி யான உனது தலையை நான் வாங்கி விடுவேன் உன்னை அனுப்பியவர்களிடம் போய்ச் சொல் காமினி அபயன் சூரைக்காற்று அதை நெருங்க முடியாதென்று."


வேலு சுமணன் ஏதோ சொல்வதற்கு வாயெடுத்தான் அதற்குள் சக்கரவட்டமிட்டுத் திரும்பிய துட்டகாமினியின் புரவி கனத்த இருளுக்குள் கரைந்து போனது குளம்பொலி மட்டும் தேய்ந்து தேய்ந்து இறுதியில் மறைந்து போனது

கற்சிலை போல நின்ற வேலு சுமணன் எதையோ நினைத்து காடதிரச் சிரித்தான பிறகு கையிலே இருந்த தலையைநோக்கி உற்றுப்பார்த்தான்.

"ஏய் தலையே உன் பெயர் என்ன நீ தளபதியா ஏதாவது சிறுபடைத்தலைவனா அல்லது வெறும் படை வீரனா ? நீ எனக்கு என்ன வாங்கித் தருவாய் வழக்கம் போலக் கையிலே ஒரு முத்தம் தானா அல்லது அல்லது"

தனக்குத் தானே பேசி உதட்டை நக்கிக் கொண்டே வேலு சுமணன் ஆற்றங் கரையை நோக்கி நடக்கத் தொடங்கினான்

வேலு சுமணனை எச்சரித்துவிட்டு குதிரையில் கிளம்பிய துட்ட காமினி வைகறைப்பொழுது வரை சளைக்காமல பயணஞ்செய்தான் யானைகளின் பிளிரல்களோ, புலிகளின் உறுமலோ, காட்டுப்பட்சிகளின் குசுகுசுப்போ



அவனது பயணத்தை சற்றும் தடை செய்யவில்லை வெள்ளி முளைக்கும் வேளையில் சாத்தனின் மகியங்கனை நாட்டு எல்லைப்புறத்துக்குட் புகுந்துவிட்ட அவன் நகரத்தின் உள்ளே போகாமல் காட்டோரத்திலேயே தரித்து நின்று அதன் வனப்பைப் பொறாமை யோடு பார்க்கத் தொடங்கினான்.

ஒரு காலத்தில் இந்த வள நகர் முழுவதும் என் முன்னோர்க்குச் சொந்தம்.. இப்போது..?

துட்டகாமினியின் கண்கள் நெருப்பைக் கக்கின... உதட்டை மடித்துக் கடித்துக் கொண்டான்... பற்கள் இறுக்க அழுத்தியதால் உதட்டில் இரத்தச் சொட்டுகள் துளிர்த்தன... துட்டகாமினிக்கு அதை உணரும் சக்தி இருக்கவில்லை.

அங்காடிகள் திறக்கப்படுவதையும் அங்கே நடனமாடும் மக்களின் முகங்கள், உடைகளில் செல்வத்தின் செழுமை எழுதப்பட்டிருப்பதையும் அழகு மயில்களாக அசைந்து நடக்கும் நகரத்துப் பெண்களையும், அவ்வப்போது புரவிகளிற் பாய்ந்துபோகும் தமிழ் வீரர்களையும் அவர்களின் கரங்களில் நீண்டு பளபளக்கும் வேல்களையும் கண்கொட்டாமல் பார்த்தபடியே நின்றான்... அடுக்கடுக்காக... அழகான வண்ணம்தீட்டபெற்ற வீடுகளின் முன்னே வண்ணப்பொடிகளால் வனிதையர் கோலம்போட, வாட்டமான உடல்வாகு கொண்ட காளையர் அவர்களோடு வம்பளப்பதும் நீர் தெளிப்பதும், வட்டமடிப்பதுமாக அன்றைய பொழுதைத் தொடங்குவதை தன்னை மீறியெழுந்த பெருமூச்சோடு துட்டகாமினி கவனித்தான்.

ஐந்து அகவையிலே கால் மடக்கிப் படுத்தேன் இன்றுவரை நீட்ட முடியவில்லை... எல்லாளன் வீரத்துக்கு முன்னே புல்லாக நிற்கும் காகவண்ணன் ரோகணத்தை விட்டு கங்கையைக் கடப்போமென்றால் காகம் போல் திட்டுகிறான் தமிழரோடு ஐக்கியமாக வாழு என்று தர்மர் பேசுகிறான்... அவன் காதலி விகாரமாதேவியோ ஒத்து ஊதுகிறாள் தம்பி தீசனோ ஒரு துரும்பைவிடக் கேவலமானவன் காற்று அடிக்கும் முன்னரோ காததூரம் பறக்கக் கூடியவன்.. அவர்களை வைத்துக் கொண்டு தமிழர்களை எப்படி வெல்லப் போகிறேன் சாத்தனின் இந்தச் சின்ன நகரமே இத்தனைச் செழிப்பென்றால் ரோகணத்துக்கும் அநுரகமவுக்கும் இடையே முளைத்துக்கிடக்கும் முப்பத்திரண்டு அரசுகளை எப்படிக் கடந்து எல்லாளனை அழிப்பது சிங்கள பௌத்தத்தை எப்படி சிறை மீட்பது

துட்டகாமினி தனக்குத் தானே பேசிக் கொண்டான் பிரமிப்பலிருந்து மீளமுடியாமல் புரவியில் அமர்ந்த படியே சங்கடத்தோடு நெளிந்தான் தலைவனது மனச்சங்கடத்தைப் புரவி புரிந்திருக்க வேண்டும் ஹீ ஹீ என்று மெல்லக் கனைத்தது அவனைத் திரும்பிப் பார்த்தது

பசிக்கிறதா?

ஹீ.....ஹீ

துட்டகாமினி புன்னகையோடு தன் புரவியின் பிடரி மயிரை கோதி விட்டான் கொஞ்சம் பொறு முதலில் நீராடுவோம் பிறகு அங்காடிக்குட் புகுந்து கொள்வோம்

ஹிக்..ஹீ..க்..ஹீ

எனக்குப் புரிகிறது தோழா நீ களைத்து விட்டாய் நானும் களைத்து விட்டேன் முதலிலே நீராட்டு பிறகு கொஞ்சம் உணவு பிறகு கொஞ்சம் ஓய்வு அதற்குப்பின் நீயும் நானும் அரைச்சாம நேரத்தில் ஆகாச சைத்தயக் கடலில் நிற்கவேண்டும் புரிகிறதா தோழா புரவியின் கழுத்தை அணைத்தபடி செல்லமாகப் பேசினான் அவனது வார்த்தைகளை விளங்கிக் கொண்டது போல அந்தக் குததிரை தனது பிடரியைச் சிலிர்த்துக் கொண்டது

வா என்று வாஞ்சையோடு புரவியை ஓடக்கரையை நோக்கிச் செலுத்தினான் வளைந்து நடனபாவம் காட்டும் பேரழிற் பாவையரைப்போல கரை நெடுகிலும் பூக்களைச்சுமந்து நிற்கும் மரங்க ளிடையே படிகம்போலத் தெளிந்த நீலநீர் ஓடை கம்பீரமாக காற்றோடு பேசிக் கலகலத்துக் கொண்டிருந்தது கீழை அடிவானை அப்போதுதான் கீறிக் கொண்படிருந்த செம்மஞ்சட் கதிர் அந்த ஓடைக்குத் தன் அன்பைத் தெரிவிக்கவோ என்னவோ வண்ணத் துளிகளை அதன் மேல் வாரியிறைத்துக் கொண்டிருந்தது துட்டகாமினியின் விழிகள் வியப்பால் விரிந்தன. அடடா என்னவொரு அழகு இன்று இந்த அழகுக்கு அதிகாரி சாத்தன் என்றாவது ஒரு நாள் தமிழர்களை முற்றாக ஒழித்து விட்டு மணிமுடி சூடிய மாமன்னனாய் ஒரு வைகறை நேரத்தில் இந்த ஓடைக்கு வரவேண்டும்.

துட்டகாமினி தீர்மானித்துக் கொண்டான் அந்த நினைவே அவனுக்கு இனிப்பாக இருந்தது பயணக் களைப்பும் கண் எரிச்சலும் எங்கேயென்று தெரியாமல் ஓடிப் போய்விட்ட புத்துணர்ச்சியோடு புரவியை நீருக்குள் இறக்கினான் அது கழுத்தளவு நீருக்குள் உல்லாசமாக நீந்தத் தொடங்குவதை திருப்பிதியோடு பார்த்துவிட்டு இரண்டு கரங்களாலும் நீரைச் சேந்தி முகத்திலே அடித்துக் கொண்டான்

ஹீ... ஹீ என்றது அவன் புரவி தொடர்ந்து யாரோ கல கல வென்று நகைக்கும் ஒலி திகைத்துப் போன துட்டகாமினி நிமிர்ந்து பார்த்தான்

புரவி நீந்திக் கொண்டிருந்த இடத்துக்குப் பக்கத்திலே கழுத்தளவு நீரில் மகத்தாமரை ஒன்று புதிதாகப பளிச்சென்று மலர்ந்தருந்தது அந்தத் தாமரை இரண்டு நீலோற்பங்களை உருட்டி அவனை விழித்துப் பார்த்தது இரண்டு செம்பிறைத்துண்டங்கள் பிரிந்து பிரிந்து மூடிக் கொண்டன

துட்டகாமினி இமைக்க மறந்து மூச்சு விட மறந்து தண்ணீருக்குள் இருந்து நகைக்கும் அந்த மலர்வனத்தைப் பார்த்துக் கொண்டிருந்தான்


வீரரே என்ற செம்பிற அதரங்கள் துட்டகாமினி எதுவும் பேசவில்லை இமை வெட்ட மறந்து ஊமையாய் நின்றான்

தங்கள் மீசை மீண்டும் கலகல வென்ற சிரிப்பு அலையோசையோடு போட்டியிட திடுக்குற்றுப்போன துட்டகாமினி தனது உதட்டைத் தடவினான்

ஒட்டு மீசையிற் பாதியைக் காணவில்லை பாதிமட்டுமே அவன் உதட்டோடு ஒட்டிக் கொண்டிருந்தது

மற்றப் பாதி தண்ணீரில் உல்லாசமாக நீந்திப் போக சரேலென்று வெளிப்பட்ட வெளிர் மஞ்சட் கை அதை நோக்கி நீண்டு எடுத்துக் கொள்ள அந்த இரண்டு செம்பிறை அதரங்கள் மீண்டும் கலீரென்றன.........

தீவு தொடரும்.......



## குறளும் பொருளும்

குறள்: ''அன்பின் வழியது உயிர்நிலை அச்சதிலாக்கு என்புதோல் போக்த்த உடம்பு''

அன்புடைமை-80

பொருள்: உள்ளத்தில் அன்பு இருக்க அந்த அன்பின் வழியே இயங்குகின்ற உடம்பே உயிர் தங்கியுள்ள உடலாகும். அன்பு இல்லாதவர்க்கு உண்டான உடம்பெல்லாம், வெறும் தோலால் போர்த்திய எலும்புக் கூடுபோன்றதாகும்.

# சிறுவர் அரங்கம்


## ஒரு குழந்தையை வையாதே பாப்பா

6ம் ஆண்டு வகுப்பறை

4ம் பாடம் நடந்து கொண்டிருந்தது ஆங்கிலப்பாடம். ரீச்சர் ஆங்கிலப் பாடம் நடத்திக் கொண்டிருந்தார், ஒவ்வொருவராக 3ம் அத்தியாயத்தில் இருந்து பாடங்களின் ஒவ்வொரு பந்திகளை வாசிக்க விட்டார். முதலில் சுமதி வாசித்தாள் அவள் எழுத்துக்கள் பிழையின்றி வாசித்தாள் இப்படி தனம் பிரியா, டிலா என்ற வரிசையில் காயத்திரியின் நேரம் வந்தது .

நடுங்கும் தன் கை கால்களை தடுக்க முயன்றும் ஏமார்ந்தவளாய் தடுக்கித் தடுக்கி வாசித்தாள் ஆனால் அவளால் வாசித்து முடிக்க முடியவில்லை ரீச்சர் அவளை இடைநிறுத்தி ஒவ்வொரு சொல்லாக சொல்லிக் கொடுத்தார் ஆனால் அதன் பின் கூட அவளால் முறையாக விளங்கிக் கொள்ள முடியவில்லை ரீச்சருக்கு ஏதோ வேலை வந்து விட நன்றாக வாசிக்கின்ற மாணவர்களான சுமதியிடமும் டிலாவிடமும் காயத்திரிக்கு வாசிக்கச் சொல்லிக் கொடுக்கும் படி கூறிவிட்டு சென்று விட்டார்

ரீச்சர் சென்றதும் சுமதி முதலாக சில மாணவர்கள் காயத்திரிக்கு பழிப்பு செய்தனர் ''சா... அவளின்ர முகறைக் கட்டையப் பாரன் நீ மூஞ்சியே கழுவுறதில்லையாடி உடுப்பும் தலையும் பினாட்டுக் களரிலை இருக்கு, உன்ர வெள்ளைச் சட்ட அதில உனக்கு இங்கிலிஸ் சொல்லித்தர வேணுமா உன்ர அம்மாவும் அப்பாவும் உனக்குச் சொல்லித் தாறதில்லையா சீ உனக்குக் கிட்ட வந்தாலே சாக்கடை மணக்குது நீ குளிக்கிறதில்லையா'' இதற்கிடையே பிரியா ரீச்சரின் பிரம்பால் அவளின் புத்தகப்பையை தூக்கித் தூக்கி விளையாடி வெளியே வீசினாள்.



காயத்திரிக்கு கண்களில் இருந்து பொல பொல என்று நீர் ஊற்றியது பாவம் அவள் என்ன செய்வாள் காயத்திரி சிதம்பரபுரம் அகதி முகாமில் இருப்பவள் அவளுக்கு மற்ற மாணவர்களைப் போல் வசதிகள் கிடையாது அப்பா எந்த நாள் பார்த்தாலும் சண்டையிட்டு பிள்ளைகளை கடுமையாகத் தாக்குவார் இரவிலே படிக்க முடியாது, படிக்கக் கூடிய மனநிலையோ, சூழலோ, அங்கு இல்லை இருக்கும். உணவையெல்லாம் கொட்டி நான்கு பிள்ளைகளுக்கு அரைவயிறோ, கால்வயிறோ கொடுத்து தூங்க வைக்கும் அம்மா இதற்கிடையில் எப்படி நல்ல உடுப்புப் போடுவது? புத்தகப்பை வாங்குவது? படிப்பது? காயத்திரியின் உள்ளத்தில் தீயாய் சுட்டது ஏங்கி ஏங்கியே அவளது பாலகப்பருவம் கருகியது மற்ற மாணவர்களைப் பார்த்து பாடசாலையில் அவர்களைப்போல் தானும் இல்லையே என்ற மனக்குமுறலிலேயே படிப்புக் கூட ஏறுவதில்லை

''டாண் டாண்'' இன்ரவல் மணி அடித்தது, மாணவர்கள் கூ..... ஆ..... எனச்சத்தம் வைத்தபடி வெளியே ஓடினார்கள் அவர்கள் புலிக் கூத்து விளையாடினார்கள் ''வட்டத்தில் எத்தனை பேர் யாரைப் புடிக்க?''

''என்னைப் புடிக்க'' என பின்னால் இருந்து காயத்திரி கூறினாள் ''ஏய் நாயே நீ ஏன் எங்களோட வந்தனீ போடி'' என கூறியபடி பிரியா ஓடிவந்து காயத்திரியைத் தள்ளி விட்டாள் கீழே விழுந்த காயத்திரிக்கு முழங்கையில் காயம் ஏற்பட்டு இரத்தம் கசிந்தது, அவள் கத்தினாள் ஆனால் யாரும் அவளுக்கு உதவவில்லை அகதி முகாமில் இருந்து அழுக்குப்படிந்தவள் என ஒதுக்கி விட்டுப் போய் விட்டனர் பாடத்திற்காகத் தமிழ் ரீச்சர் வந்தார் நடந்தவற்றை எல்லாம் வகுப்பில் கடைசி மேசையில் இருக்கும கண்ணன் கூறினான்



ரீச்சர் உடனே எல்லோரையும் அழைத்தார் காயத்திரிக்கு ஏன் இப்படிச் செய்தீர்கள் எனக் கேட்டார் அனைவரும் தலை குனிந்து நின்றனர். ரீச்சர் முதலுதவிப் பெட்டியை எடுத்து காயத்திரிக்கு மருந்து கட்டினார் பின் நீங்கள் இப்படி பாகுபாடு காட்டி ஏற்றத்தாழ்வு பார்த்து இந்த சின்ன வயசிலேயே வஞ்சகத்தை நெஞ்சில் வளர்க்கிறீர்கள் காயத்திரி யார் உங்களைப் போன்ற சிறுமி தானே யுத்தத்தால் அவள் அகதியாய்ப் போனாள். அகதி முகாமில் இருந்து கொண்டு பாடசாலைக்கு அவள் வருவதே எவ்வளவு பெரிய கடினம் படிக்க ஆவலாக பள்ளிக் கூடம் வரும்போது நீங்ள் இப்படிச் செய்தால் அவளுடைய சின்ன மனம் என்ன பாடுபடும் எனச் சற்று யோசித்துப் பாருங்கள்

நீங்கள் இனி இப்படிச் சண்டை போட்டால் நான் உங்களுக்கு இனிமேல் பாடம் படிப்பிக்க மாட்டன், எனக் கூறி வெளியேற முற்பட்டார் ஆனால் அனைத்து மாணவர்களும் ஒன்றாய்க்கூடி ரீச்சர் எங்களை மன்னித்து விடுங்கள் இனிமேல் நாங்கள் இப்படிச் செய்யமாட்டோம் காயத்திரி இனி எங்கள் நண்பி படிக்கும் போதும் விளையாடும் போதும் அவளையும் எங்களுடன் சேர்த்துக் கொள்வோம் மன்னித்து விடுங்கள் ரீச்சர் என்றனர்.

''தமிழ்ப் பாடம் நடந்தது
ஓடிவிளையாடு பாப்பா
நீ ஓய்தரிருக்கலாகாது பாப்பா
கூடி விழளையாடு பாப்பா - ஒரு
குழந்தையை வையாதே பாப்பா''

குழலி
வவுனியா



லக்மிகாந்தன்
வத்தளை

## இந்தவாரம் நான்



எனது பெயர்: ஹர்ச்சகா எனது அப்பாவின் பெயர்: ராஜேந்திரன், அம்மா கவிதா எனக்கு ஒரு தம்பி உண்டு அவனது பெயர்: ஹர்யுன் நான் யுகேஜி படிக்கிறேன் எனக்கு சித்திரம் வரைவது பிடிக்கும். எனது முகவரி கந்தப்பளை நுவரெலியா.

குட்டித்தம்பி தங்கை மாரே நீங்களும் ''இந்த வாரம் நான்'' என்ற பகுதியில் இடம் பெறவிருப்பமா? கீழ்க்காணும் முகவரிக்கு உங்கள் படத்துடன் உங்களைப் பற்றியும் உங்களுடைய ஆக்கங்களையும் அனுப்பிவையுங்கள்

இந்தவாரம் நான்
செந்தணல் சிறுவர் அரங்கம்
61, கற்குழி, வவுனியா.

## புதிர்ப் போட்டி-5

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 த | 2 ரா | 3 வ | 4 தா | 5 ணி | 6 |
| 7 கா | 8 தி | 9 | 10 ய் | 11 க | 12 பா |
| 13 த | 14 | 15 க | 16 | 17 | 18 த் |
| 19 வ | 20 | 21 ச | 22 ம் | 23 ம | 24 இ |
| 25 ன் | 26 | 27 ப் | 28 | 29 நு | 30 ர |
| 31 | 32 | 33 பு | 34 | 35 | 36 ம் |

இடமிருந்து வலம்


1) ஒரே சந்தர்ப்பத்தில் பத்து விடயங்களை அவதானிக்கக்கூடிய திறன் கொண்டவர் இவ்வாறு அழைக்கப்படுவார்
7) நாம் ஒலிகளைக் கேட்க உதவும் உறுப்பு
12) கசப்பான சுவையைக் கொண்டிருப்பினும் உடல் நலத்திற்குத் தேவைப்படும் காய் வலமிருந்து இடமாக இருக்கின்றது
21) ''இணங்கு'' என்பதன் ஒத்தகருத்துச் சொல்
30) அழகுராணி மாறிவிட்டாள்.
32) ஆப்கானிஸ்தான் நாட்டின் தலைநகரம்

மேலிருந்து கீழ்

1) ''தக்கவன்'' என்னும் சொல்லின் எதிர்க்கருத்துச் சொல்
2) அமைதியான சுபாவமுள்ளவர் இவ்வாறு அழைக்கப்படுவார்.
4) நாம் சுவையை அறிந்துகொள்ள உதவும் உறுப்புக்கு இப்படியும் ஒரு பெயர் உண்டு.
11) பழம் தலை கீழாக நிற்கின்றது
12) சமையலறைகளிலும் உண்டு.. கடைகளிலும் உண்டு நடிப்புக்கும் இதற்கும் தொடர்புண்டு
15) ஆறு சுவைகளில் ஒன்று
23) இது கெட்டுப்போனால் எமது நிம்மதியும் கெட்டுப்போய்விடும்.

புதிர்ப்போட்டி 4லில் பரிசு பெற்றவர்
ஆ.இ.ஆ.முஜாகித்
தி/கிண்ணியாமத்திய கல்லூரி

## வர்ணம் தீட்டி அனுப்புங்கள் சிறந்தவைக்கு பரிசு உண்டு-4



நீங்கள் அனுப்ப வேண்டிய இறுதித் திகதி 07/11/2003 முகவரி: **வர்ணம் தீட்டற்போட்டி** 61, கற்குழி, வவுனியா.

## வர்ணம் தீட்டும் போட்டியில் பரிசு பெற்றவர்கள்

**முதலாம் பரிசு பெற்றவர்**

M.A.M. அப்ராரி
06 வயது
ரிச்லன்ட் சர்வதேச பாடசாலை
பதுளை.

**மற்றும் ஆறுதல் பரிசுகளை பெற்றுக் கொள்ளும் சிறுவர்கள்.**

பா.யேசு பிரசாந்
வயது 10
எழுந்துனர் றோ.க.த.
கலவன் பாடசாலை மன்னார்.

மதுமிதா மணிஐயர்
வயது 16
யாழ் கனகரத்தினம் மத்திய
மகாவித்தியாலயம் யாழ்ப்பாணம்

D.B.கிறிஸ்சந்தோஸ்
வயது 9
புனித சூசையப்பர் கல்லூரி
திருகோணமலை.

**வர்ணம் தீட்டும் போட்டி**

பெயர்:..........
வயது:..........
பாடசாலை:..........

**சிறுவர் கேள்வி பதில்-05**

பெயர்:..........
வயது:..........
பாடசாலை:..........

சித்திரமும் சிறுகதையும்...

# நரக வாசல்




அன்றைய காலைப் பொழுது வழமை போல் சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருந்தது. ஆனால் நகரத்தின் எல்லையில் உள்ள ஓரிடம் மட்டும் வழமைக்கு மாறாக மிகவும் அமைதியாக இருந்தது. அந்த நகரத்திலேயே பரந்த இடத்தைக் கொண்ட அந்தக் கட்டடம் ஓர் விஞ்ஞான ஆய்வு கூடம்.

டாக்டர். ரகுராம், கிட்டத்தட்ட 22 மணிநேரமாவது ஆய்வுகளில் ஈடுபட்டிருக்கும் ஓர் விண்வெளி ஆராய்ச்சியாளர். நல்ல உயரமும், அதற்கேற்ற உடல்வாகும், கண்ணிற்கும் மூக்கிற்கும் இடையில் அகப்பட்ட காண்ணாடியுடைய 45 வயது மதிக்கத்தக்க ஓர் மனிதர்.

கடந்த சில நாட்களாக ஓய்வு ஒளிச்சலின்றி ஏதோ ஒன்றைத் தேடிக் கொண்டிருக்கின்றார். அது உலகத்திற்கு அப்பாற்பட்ட அண்ட வெளியின் ரகசியத்தை பரகசியமாக்கும் முயற்சி..! மூட நம்பிக்கையின் வெளிப்பாடான ‘‘சொர்க்கம், நரகம்’’ என்பவற்றைத் தான் அறிய முற்படுகின்றார்.

தனது ஆய்வின் முதற்படியாக விண் ஓடம் ஒன்றின் மூலம் அண்ட வெளியை நிமிடத்துக்கு பல்லாயிரம் மைல்கள்.......... இல்லை..... ஒளியாண்டுகளை கடந்து செல்கிறார். பூமியின் கண்களுக்கப்பால் தோன்றும் மாயங்களைப் பார்க்கையில் மனிதனை மிஞ்சிய ஒன்று உள்ளது. அது இறைவனோ..! என்ற எண்ணம், வினாடிகளில் மனம் தடுமாறினாலும், எல்லாம் நம் கையில் என்ற தன் கொள்கையிலிருந்து விலகவில்லை.

திடீரென ஓடம் எங்கோ விண்தட்டியது. விண்கலம் அவரது கட்டுப்பாட்டையும் மீறி சுயமாக இயங்க முற்பட்டு எங்கோ....! இப்போது மண்தட்டியது. எங்கே இருக்கிறோம் என்று தெரியாவிட்டாலும், அவரது தேடல் உந்தித்தள்ள அவரது ஆய்வு அங்கும் ஆரம்பமானது.

ஓடத்தை விட்டிறங்கி தொலைவைசற்று அலசினார். என்ன ஆச்சரியம் நூற்றாண்டுகள் பழமை வாய்ந்த கோட்டை மதில்கள் போல் உயரமான, பரந்து விரிந்த வாயில்களைக் கொண்ட சுவர்கள் அங்கே தென்பட்டன. அத்துடன் தெருவிளக்குக் கம்பங்கள் போல் ஏதோ அந்தரத்தில் தொங்கிக் கொண்டிருந்தன. அவற்றில் ஏதோ காணப்பட்டது. தொலைவில் இருந்ததால் அவ்வளவாக தென்படவில்லை அறிய ஆவலுடன் அருகே சென்றார்.

அங்கே நம்மைப் போன்ற மனிதர்களே நடமாடித் திரிந்தனர். சிலர் காவலர்கள் போலவும் சிலர் ஏவலர்கள் போலவும் காணப்பட்டனர். அத்துடன் அங்கே உள்ளவர்கள் இங்கே பூமியில் உள்ள பாசைகளையே பேசித் திரிந்தனர். அவ்வாறு வரும் பொழுது ஏதோ ஆரவாரம் அவனூடே அறிவித்தல் ஒன்று இப்போது நரகத்திற்கு எமதர்மராஜா வந்து கொண்டிருக்கிறார் என்பது.

அனைவரும் மண்டியிட்டுக் கொண்டிருக்கின்றனர் ராமின் கால்கள் அவரை அறியாமலேயே மண்டியிட்டாலும் மனமும் கண்ணும் அங்கே நடப்பவற்றை உற்று நோக்கிக் கொண்டிருந்தன. நவீனமாக இருந்த விமானம் ஒன்றில் இருந்து ஒருவன் இறங்கினான். அவனது தோற்றம் மிகவும் கம்பீரமாக இருந்தது. எல்லோரையும் ஒரு சற்று கண்ணுற்றவாறே தனது இருப்பிடம் சென்றான். மேடை ஒன்றில் விசேட நாற்காலி ஒன்று அவனுக்காய் காத்திருந்தது. அதில் அமர்ந்த அவன் கட்டளைகளை பிறப்பித்துக் கொண்டிருந்தான்.

‘‘இவர்களை அந்தக் கம்பத்தில் ஏற்றுங்கள்’’

பல கட்டளைகள் இடப்பட்ட போதும் இந்தக் கட்டளை மட்டும் டாக்டரை அவனிடம் நோக்கச் செய்தது. அப்போது தான், தான் ஆரம்பத்தில் பார்த்த அந்த விளக்குக் கம்பம் போன்றதை உற்றுப் பார்த்தார் அவைகளில் தொங்கிக் கொண்டிருப்பவை மனித உடல்கள்

அருகிலிருந்த காவலாளி ஒருவனைக் கேட்ட போது அவன் கூறினான்.

இதுவே நரகம் இறந்தவர்களுக்கு அவர்களின் பாவங்களுக்கேற்ப தண்டனை வழங்குமிடம் என்றான். அங்குள்ளவர்கள் தமது தண்டனையை எதிர் நோக்கி நடுங்கிக் கொண்டிருந்தனர். மரணத்தின் பின் உள்ள மரணம் ஒன்றின் பயம் அவர்கள் நெஞ்சுக் குழியை அடைத்தது. டாக்டர் அவற்றைக் கண்டு நடுங்கவோ கலங்கவோ இல்லை. ஏனெனில் அவர் இது போன்றவற்றை பூமியில் கண்டிருக்கிறார்.

‘‘விளக்குக் கம்பங்களில் சுடப்பட்டவர்களும், டயர் போட்டு எரிக்கப்பட்டவர்களும்.’’ என பல மரணங்களையும் தண்டனைகளையும் கண்டவர். அதனால் கலங்கவில்லை. மாறாக அவர் உள்மனம் புன்னகைத்தது. மண்ணில் உள்ளவற்றை விண்ணில் தேடும் மனிதருக்காய் அங்கிருந்து பூமி திரும்ப எண்ணித் திரும்புகையில் ஏதோ தட்டுப்பட்டு உடையும் சத்தம் கேட்டது. அப்போது தான் உணர்ந்தார் தான் நிஜத்தின் எண்ணங்களுக்குள் சென்றுவிட்டதை.

சொர்க்கமும் நரகமும் விண்ணில் இல்லை மண்ணில் தான் என்பதை மற்றவர்கள் அறியவில்லை என்ற ஆதங்கத்துடனும் தமக்கு அவற்றை உணர்த்திய அந்தப் படத்துடனும் தனது ஆய்வை நிறுத்திக் கொண்டார்.

முற்றும்.

## 2003 ஆம் ஆண்டின் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்குத்தோற்றும் மாணவர்களுக்கான வழிகாட்டிப்பரீட்சை.


தரம் 5 வினாத்தாள் I

சுட்டிலக்கம். -------------- நேரம் 45 நிமிடம்

எல்லா வினாக்களுக்கும் இத்தாளிலேயே விடை எழுதுக.

01-03 வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் நான்கு படங்கள் தரப்பட்டுள்ளன இவற்றுள் ஒன்று ஏனைய மூன்று படங்களுடனும் ஏதோ ஒரு வகையில் வேறுபட்டது அதனைத் தெரிந்து அதன் இலக்கத்தைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.

(1)



(1) (2) (3) (4) (..................)

(2)



(1) (2) (3) (4) (..................)

(3)




(1) (2) (3) (4) (..................)

04-06 வரையுள்ள வினாக்களின் சரியான விடையின் இலக்கத்தைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.?

(04) 43+28 என்பதற்கு மிகக் கிட்டிய பெறுமானம்

(1) 27+33 (2) 40+30 (3) 42+38 (4) 45+45

(5) பின்வருவனவற்றுள் எது மிக நீளமான நூலாகும்



(1)
(2)
(3)
(4)

(6) கீழே ஒவ்வொரு துண்டத்திலுமுள்ள எண்கள் எவ்வாறு தொடர்பு பட்டுள்ளனவோ அவ்வாறே ஏனைய துண்டத்திலுள்ள எண்களும் தமக்குள் தொடர்புபட்டுள்ளன இங்கு விடுபட்டுள்ள எண் யாது?




1) 8 (2) 9
3) 10 (4) 11

கீழே தரப்பட்டிருக்கும் விவரத்தை வாசித்துக் கேட்கப்படும் வினாக்களுக்குரிய சரியான விடையின் கீழ் கோடிடுக.?

அந்த நாட்டில் தோற்றமும் பொலிவும் வனப்பும் உடற்கட்டுமுள்ளவர்களில் ஒருவன் சுகுணன், எனினும் அவனைக் காட்டிலும் இனிமையான சுபாவமும் இரக்க சிந்தனையுமுடையவன் குமணன்.

(7) அந்த நாட்டில் உள்ளவர்களில் தோற்றமும் பொலிவும் மட்டுமுள்ளவன் சுகுணன்
(சரி, பிழை, கூறமுடியாது)

(9) சுகுணன் குமணனைக் காட்டிலும் இனிமையான சுபாவமுடையவன்
(சரி, பிழை, கூறமுடியாது)

(10) குமணன் நல்ல உடற்கட்டுடையவன்
(சரி, பிழை, கூறமுடியாது)

(11) இரக்கம் என்பது பிறர் துன்பம் கண்டு சந்தோசப்படும் மனநிலை
(சரி, பிழை, கூறமுடியாது)

பின்வரும் சொற்கள் ஒத்தகருத்துடையனவாயின் ‘‘ஓ’’ என்றும் வேறு கருத்துடையன வாயின் ‘‘எ‘‘ என்றும் எழுதுக?

(12) தென்கிழக்கு - வடமேற்கு (..................)
(13) அண்மை - சேய்மை (..................)
(14) சூழல் - சுற்றுப் புறம் (..................)

சரியான விடையின் கீழ் கோடிடுக?

(15) 15 பயணிகளைக் கொண்ட பேருந்தின் சில்லுகளின் எண்ணிக்கை 6 ஆகும் இதே பேருந்தில் 60 பேர் பயணம் செய்தால் பேருந்தில் இருக்கும் சில்லுகளின் எண்ணிக்கை யாது?
(1) 6 (2) 12 (3) 24 (4) 30


(16) கூட்டினாலும் பெருக்கினாலும் ஒரே விடை வரக்கூடிய எண் தொகுதி எது?
(1) 2,3,4 (2) 1,2,4 (3) 1,2,3 (4) 10,2,5

(17) ஒரு விளையாட்டுக்கார் ஒவ்வொரு 6 மணித்தியாலங்களுக்கும் 3 மின்கலங்களைப்பயன்படுத்துகின்றது மின்கலங்கள் ஒரு பக்கற்றில் 4 வீதம் விற்கப்படுகின்றன அந்தக் கார் 48 மணித்தியாலங்களுக்கு ஓடுவதற்கு எத்தனை பக்கற் மின்கலங்கள் தேவை?
(1) 6 (2) 8 (3) 18 (4) 24

(18) மாதுமையின் பாட்டி 1939 இல் பிறந்தார் 1999 இல் மாதுமையின் பாட்டியின் வயது மாதுமையின் வயதின் ஐந்து மடங்காக இருந்தது மாதுமை பிறந்தது எப்போது?
(1) 1977 (2) 1987 (3) 2002 (4) 1978


கீழ்வரும் வினாக்களில் தரப்பட்டுள்ள படத்தோடு தொடர்பு இல்லாத சொற்றொடரின் கீழ்க் கீறிடுக ?

(19)



(1) பணம் உழைத்தல்
(2) பொருட்களை நிறுத்தல்
(3) சமநிலையைப் பேணுதல்

(20)



(1) வெள்ளப் பெருக்கு ஏற்படும்
(2) நீர்ப்பற்றாக் குறை ஏற்படும்
(3) பயிர்கள் செழிப்படையும்

அ. சித்திரவேல்
கல்விமாணி

## 11ம் திகதி கனலில் இடம்பெற்ற புலமைப்பரிசில் கேள்விகளுக்கான விடைகள்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| (1) | 71 | (6) | 1 | (11) | அத்தை - மருமகன் | (16) | |
| (2) | 73 | (7) | 2 | (12) | 2 | (17) | B |
| (3) | 104 | (8) | 3 | (13) | 1 | (18) | D |
| (4) | 9 | (9) | 2 | (14) | 1 | (19) | A |
| (5) | 2 | (10) | சந்திரன் | (15) | - | (20) | C |

# கடலை நோக்கிய கன்னி

ஈழ வாணி

நெடும் அலைகள் கரையைத் தாவித் தாவி அணைத்தன கரையோர அலையைத் தள்ளி விழுத்தியபடி விலகியது எவ்வளவு ரம்மியமான காட்சி தாவும் அலைகளைத் தாண்டி இடுப்பளவு நீருக்குள் வந்ததும் மேரி மூன்றுமுறை ''மாதாவே போற்றி'' என்று பிரார்த்தித்தாள் ''மாதாவே இவ்வுலகமே எனக்கு நரகமாகி விட்டது உன் காலடியிலாவது எனக்கு அமைதியைத்தா" எனக் கண்ணீர் சொரிந்தாள்.

உலக வாழ்வை முடிக்க என எண்ணி தன்னை நோக்கி வந்த அலையோடு சங்கமிக்க நீரிற்குள் அமிழ்ந்தாள்.

அதிசயம், அமிழ்ந்த அவள் கடலோடு போகாமல் மேல் நோக்கி இழுக்கப்பட்டாள், கண்களைத் திருப்பிப் பார்த்தாள் வெள்ளை உடையில் சமாதானப் புறா போன்று சிஸ்ரர் (அருட்கன்னி) ஒருவர் நின்று அவளின் தலை முடியில் பிடித்து இழுத்துக் கொண்டிருந்தார்.

''சீ.... என்ன இந்த மனுசி என்ன நிம்மதியாச் சாகக் கூட விடாது போல" என மனதுள் திட்டித்தீர்த்தாள் தொடுகடலைக் கவலையோடு வெறித்தாள் சற்று முன் அலை பாய்ந்த கடல் கூட இப்போது அமைதியாக இருந்தது சிஸ்ரர் அவளை அன்பாய் அணைத்து ஆதரவாய் பார்த்தார் ''அநியாயமாய் இறைவன் படைத்த ஓர் உயிரை மாய்க்கப் பார்த்தாயே, ஏன் சகோதரி அப்படி என்ன உன்னையே உனக்குப் பிடிக்கவில்லையா? துன்பத்தைப் பார்த்து நீ துவண்டாயானால் அது உன்னைத் துரத்திக் கொண்டே இருக்கும் அதை நீ வெல்ல வேண்டும் கடவுள் உன்னை மன்னித்து ஆசீர்வதிப்பார் வா போகலாம்" என்று அழைத்தார். மேரி சிஸ்ரரை பிடித்துக்கதறி விட்டாள்.

''நான் யாரிடம் போவது சிஸ்ரர். யாரிடம் ஆறுதல் தேடுவது, யார் எனக்குத் துணை" என விம்மி விம்மி அழுதாள். ''அழாதே அம்மா கடவுள் உனக்கத் துணை நீ என்னுடன் வா, உனக்கு அங்கே ஆறுதல் கிடைக்கும்" என அன்பாய் அழைத்தார். அது அவளுக்குப் பாலைவனத்து பசும்சோலையாய் உள்ளம் குளிர்ந்தது சிஸ்ரரை பின் தொடர்ந்தாள்

அது தாழ்வுபாட்டு கடல் வாழ்மக்கள் மீன்பிடிக்கின்ற கடற்கரை, மீன்தலைகள் ஒருபுறம், காயப் போட்ட கருவாடுகள் ஒருபுறமாய் சிதறிக்கிடந்தன, கருவாட்டு மணம் நாசியை அடைத்தது, அங்கு வாழும் குப்பத்து மக்களின் வீடுகள் மிகவும் அமைதியாகக் காணப்பட்டன. விளக்குகளின் வெளிச்சம் மங்கி மங்கித் தெரிந்தது.

சிஸ்ரர் கூறினார் ''நான் இங்கு குப்பத்தில் வாழும் மக்களை கண்டு போக வந்திருந்தேன் நானும் இந்தத் தாழ்வுபாட்டுக் குப்பத்தில் இருந்து எடுத்து வளர்க்கப்பட்டு இப்போது அருட்கன்னியாக ஆக்கப்பட்டிருக்கிறேன் அதனால் தான் ஒவ்வொரு முறை வரும் பொழுதும் வந்து பார்ப்பேன் வந்து பார்த்து இவர்களின் குறை நிறைகளைக் கேட்பதில் மனதிற்குத் திருப்தியாகவும் சந்தோசமாகவும் இருக்கும் அப்படி வந்து விட்டு நம்மை எல்லாம் உருவாக்கிய இந்தக் கடலம்மாவையும் பார்த்து ரசிப்பதில் எனக்கு அளவில்லாத சந்தோசம், அப்படி நான் வந்த போது தான் உன்னைக் கண்டேன்" என்று சிஸ்ரர் கூறினார்.

மீன் முட்களும் சிப்பிகளும் பெருமணற்கற்களும் பாதத்தை உறுத்தியது தென்னம் தோப்பிற்குள் புகுந்து வானுயர்ந்தது அடைத்து நின்ற பனங்காட்டையும் தாண்டி, அருகில் இருந்த சூசையப்பர் கோவிலுக்குள் இருவரும் நுழைந்தனர்.

''இங்கு கடவுளை வேண்டிக் கொள்" எனக் கூறி சிஸ்ரர் பாதரின் விடுதிக்குட் சென்று ஏதோ அவருடன் கதைத்தார் பின் மேரியிடம் வந்து ''உன் வீட்டிற்கு போகிறாயா?" எனக் கேட்டார் அவள் திடுக்கிட்டு விழித்தாள் அவளுடைய கண்கள் குளமாயின ''சிஸ்ரர் அதவிட நீங்க என்ன திருப்பி கடலுக்கேயே தள்ளி விடலாம்" என்று கண்ணீர் வடித்தாள்.

''அமைதி - அம்மா அமைதியாக இரு" என மேரியின் தலையைத் தடவி அமைதிப்படுத்தினார். ''நான் ஒரு கதைக்குத் தான் உன்னிடம் அப்படிக் கேட்டேன், நான் கண்டியில் ஒரு சிறுவர் இல்லத்திற்குப் பொறுப்பாய் இருக்கிறேன் நீ என்னுடன் அங்கு வரலாம் அங்கு உனக்கு அந்த சிறுவர்களும் மலைநாட்டுக் குளிர்ச்சியும் மனதிற்கு ஒரு ஆறுதலைத் தரும். இன்று இங்கு தங்கி விட்டு காலை 6.00 மணிக்கெல்லாம் நாம் புறப்படுகிறோம், மீண்டும் கோழைத் தனமான முதுகெலும்பில்லாத முடிவைத் தேடாதே'' எனக் கூறி அவள் தங்குவதற்கான ஓர் அறையைக் காட்டினார்.

நேரம் இரவு 11.00 மணி மேரி புரண்டு புரண்டு படுத்தும் உறக்கம் அவளை அணைக்க மறுத்தது. அவளுடைய நினைவலைகள், கடல் அலையைப் போல் பொங்கிப் பொங்கி ஆர்ப்பரித்தன. மறக்கத்தான் அவள் போராடினாள், முடியவில்லை அவளால் அதன் போக்கிலேயே விட்டு விட்டாள்.

ஆம் அந்த இறந்த சுந்தர நாட்கள், சுவயான காதல், கைவிட்ட பெற்றோர், கடலை நாடிய நேரம், எல்லாம் எல்லாமே அணையை உடைத்துப் பாய்ந்தது....

மேரி ஒரு நடுத்தரக் குடும்பத்துப் பிள்ளை மேரி ஒவ்வொரு நாளும் கடலை அண்டி இருக்கும் பனங்காட்டிற்கு பனம்பழம் பொறுக்க அதிகாலையில்ச் செல்வாள் அவளுடன் அவளின் கடைசித் தம்பியும் செல்வதுண்டு, அதிகாலையில் வெளிச்சம் வருவதற்கு முன்பாகப் பொறுக்க வேண்டும். பனம்பழங்களைப் பொறுக்கி கும்பலாகக் குவித்து உரப்பையில்ப் போட்டு இருவருமாக தூக்கிச் செல்வார்கள். அவளுடைய தந்தை மீன்பிடி தொழிலை செய்பவர் அத்துடன் பனம்பழக் கழியை எடுத்து பனாட்டு செய்து பனாட்டு வியாபாரமும் செய்து வந்தார்.


கடலுக்கு சென்று மீன் பிடித்து விட்டு மீனவர்கள் அந்த வழியாகவே செல்வார்கள் அப்படி மீன் பிடித்துவிட்டு வரும் மீனவர் கூட்டத்தில் தான் மேரி அவனைக் கண்டாள் அவனுடைய பெயர் ''அலக்ஸ்" பார்க்க சிவப்பாய் வாட்ட சாட்டமாய் இருப்பான். இருவரும் பார்வைகளை மாற்றிக் கொண்டனர், பின்பு வார்த்தைகளை பரிமாறி, தம் இதயங்களையும் மாற்றிக் கொண்டனர். அந்த இரு உள்ளங்களும் ஒரு உயிராக மாறி பனங்காட்டுக் கிளிகளாக பாடிப் பறந்து திரிந்தனர். கடற்கரைகளில் தங்கள் பாதங்களை பதித்து தென்னம் தோப்புகளில் பெயர்களைப் பொறித்து பனங்காட்டில் காதலைப் பாடினர்.

கடலுக்கு சென்ற அலக்ஸ் வர சிறிது தாமதமானாலும் நெய்தல் நிலத் தலைவி போல் மேரியும் தன் தலைவனை நினைத்து இரங்கத் தொடங்கி விடுவாள். அலக்ஸ் வந்து சிரித்தால் தான் அந்த கடல் புறாவின் கண்களும் சிரிக்கும். இவ்வண்ணம் இரண்டு ஆண்டு ஓடிவிட்டது. பனங்காட்டுக் கிளிகள் காதல் கதையும் ஊருக்குள் கசிய ஆரம்பித்தது.

ஒரு நாள் அலக்ஸ்சை மீனவர் கூட்டத்தில் காணவில்லை, மேரி கலங்கினாள் நீண்ட நேரமாகியும் அவன் வரவில்லை மிகுந்த துக்கத்தோடு வீடு சென்றாள்.

அன்று மாலை. சூசையப்பர் ஆலயத்திற்குப் பூசைக்குச் சென்றிருந்தாள். மேரி பூசை முடிந்து சனம் கலைந்து சென்றும் இவள் மட்டும் தனியாக தன் தலைவனை நினைத்து வேண்டியனாள், அதிசயம் அவன் அவள் முன்னே வேர்க்க விறுவிறுக்க வேகமாக வந்தான், அவள் ''அலக்ஸ்" என அழைத்தவாறு அவன் அருகில் வந்தாள் ''அப்பா இப்பத்தான் உசிரு வந்திச்சு" என்றாள். ''ஏன் மேரி எனக்கு ஒண்ணுமில்லையே" என்ற அலக்ஸ் தான் இனிமேல் கடலுக்கு மீன் பிடிக்கப் போக மாட்டான் என்றும், தன்னுடைய பெரியம்மாவின் மகன் (அண்ணன்

பெரியம்மாவின் மகன் (அண்ணன் முறை) பஸ் ஒன்று புதிதாக எடுத்திருப்பதாகவும், தான் கிளினராக வேலை செய்யப் போவதாகவும் கூறினான். அத்தோடு தாம் முன்பு போல தினமும் பார்த்து பேசமுடியாது எனவும் கூறினான். உடனே மேரியின் தங்க முகம் கறுத்துவிட்டது. ''அப்ப இனிமேல என்ன பார்க்கவே பேசவே வரமாட்டியா?" என்றாள். ''அப்பிடி இல்லே மேரி நா திங்கள் அந்திக்கு உன்ன பார்க்க நிசமா வருவேன் மத்த நேரத்தில எனக்கு வேலையே மேரி" என்று கவலையுடன் உரைத்தான். அவனுடைய முன்னேற்றத்தில் அவளுக்கு அக்கறை இருந்தமையால் சந்தோசத்துடன் வாழ்த்துக்கள் கூறி அவனுக்கு விடை கொடுத்தாள். அவனும் அன்பான பார்வையுடன் விடை பெற்றான்.



> தன் வாழ்வு தலை கீழாக மாறப் போவதை
> அறியாமல் இருவரும் நீராடினர்

மேரியின் வீட்டில் திருமண ஏற்பாடுகள் தடல்புடலாக நடைபெற்றன, மேரியும் ஸ்டெல்லாவும் இரட்டைப் பெண்கள், ஸ்டெல்லாவே மூத்தவள் போன்ற தோற்றம், மேரி துடுதுடுப்பும் குழப்படியும் கூடிய துடிப்பான பெண். ஸ்ரெல்லாவுக்கே பதிவுத் திருமணம் செய்ய என ஏற்பாடுகள் இடம் பெற்றன, அன்றைய நாளும் வந்தது. மேரி மிகுந்த உற்சாகத்துடனும், மகிழ்ச்சியுடனும் வேலைகளில் ஈடுபட்டாள், தன் வாழ்வு தலை கீழாக மாறப் போவதை அறியாமல் இருவரும் நிராடினர், மேரிதன் தம்பிமார் இருவரையும் அடித்து விரட்டி தோயவார்த்தாள். அவர்கட்கு புதிய ஆடைகள் அணிவித்து தானும் உடுத்த தயாரானாள். அப்போது மேரியின் தாய் அங்கே வந்து, மேரியை வேறு ஒரு அறைக்கு அழைத்துச் சென்றார். அங்கே ஸ்டெல்லாவிற்கு எனக் கூறி வாங்கிய ஆடை, அணிமணிகள் வைக்கப்பட்டு இருந்தன. அவற்றை காட்டி அதை மேரியை அணியும்படி கூறினார்.

''அம்மா என்னம்மா நீ என்ன மறந்திட்டியா, நா இல்ல ஸ்ரெல்லா, இரு அவள கூப்பிர்றன்" என்று கூறி திரும்பி நடக்க முயன்றாள், மேரி என அழுத்தமாக அழைத்தாள் தாய் ''நில்லு இண்டைக்கு உனக்குத் தான் பதிவுத திருமணம் ஸ்ரெல்லாவுக்கு இல்லை" என்றார் ''அம்மா நீ என்ன என்னம்மா நீ சும்மா தானே அம்மா நா" என மேரி தடுமாறினாள் ''சும்மா வாயை மூடிட்டு எல்லாத்தையும் எடுத்து போட்டுகிட்டு பெண்ணா லட்சணமா வந்து இரு" என கூறிய தாய் திரும்பி நடந்தார் ''அம்மா நில்லு நீ சொல்லுறது உண்மையென்டா நா சொல்லுறதயும் கேள் நா இதுக்கு சம்மதிக்க மாட்டன் நா அலக்ஸ உசிருக்குசிரா நேசிக்கிறன் அவனத் தான் நான் கட்டுவேன்" என திடமாகக் கூறினாள்.

தாய் அவளின் தோள் பட்டையை பிய்யும் அளவிற்குப் பிடித்துத் திருப்பினாள் ''இதில்லடி நீ இன்னும் பேசுவே திமிரடி உனக்கு உன்ன தனியா சுத்த விட்டன் பாரு, என்னச் சொல்லனும், எல்லாம் என் தல விதி, இஞ்ச பாரு மேரி, நீயும் அந்த அலக்சும் பண்ணினதெல்லாம் எனக்கு மட்டுமில்லடி ஒன்னோட அப்பாக்கும் தெரியும் நெனச்சுக்கோ, இப்ப நீ ஒழுங்கா சொன்னத கேக்கல்ல ரெண்டு பிணம் விழும், கத்தரிக்கு வாங்கின நஞ்சு இருக்கு நினைச்சுக்கோ" என கூறினாள். மேரி தாயின் கால்களில் விழுந்து அழுதாள்.

''அம்மா அம்மா நானும் ஒன்னோட வயித்தில தானே புறந்தன் ஏம்மா நா காதலிச்சது குத்தமெண்டா நா அலக்ஸ மறந்திறன், நேசமா தா அம்மா, ஆனா எனக்கு இப்ப கலியாணம் வேணாம்மா, அம்மா நா நீ பத்து மாசம் சுமந்து பெத்த பிள்ளை எண்டா என்ன விட்டிரும்மா," என அழுதழுது கெஞ்சினாள். ''சீ சும்மா கால விடு, நீ நா பெத்த பிள்ள எண்ட படியாத்தா இப்ப இதப் பண்ணறன், ஒழுங்கா நடந்துக்க இல்ல, ரெண்டு பேருக்கும் ஒண்ணா மாலை போடுற அபாக்கிய வதியா தா நீ இருப்பா'' என கூறியவர் விறு விறு என வெளியேறி விட்டார்.

மேரி செய்வதறியாது அங்கும் இங்கும் பார்த்தாள் நெருப்பில் பட்ட புறா போல மேரியின் உள்ளம் வெந்தது, மேரி ஓடிப்போய் தன் சகோதரியாவது உதவக் கூடும் என எண்ணி அவளை கட்டிப்பிடித்து கண்ணீர் விட்டாள் ''ஸ்ரெல்லா நீயாவது புரிஞ்சுக்க" என்றாள். ஆனால் ஸ்ரெல்லாவோ வேறு புறம் தலையை திருப்பிக் கொண்டு போய் விட்டாள் மேரி கதறினாள், விம்மினாள், சிறகுகள் உடைந்து பறவை போல அவள் துடித்தாள்.

ஒரு முடிவுடன் மேரி எழுந்து மட மட வென சேலையைச் சுற்றினாள், நகைகளையும் போட்டுக் கொண்டாள், அந்த நேரமும் நெருங்கியது மேரிக்கு மாப்பிள்ளையாம், அவர் கூட வந்து விட்டார் திருமணப் பதிவாளரும் வந்து விட்டார் மேரியை அழைத்துப் போய் அந்த புதியவன் அருகில் அமர வைத்தனர். விருந்தினர் கட்கு பலகாரங்கள் பரிமாறப்பட்டன, இதோ திருமணப் பதிவாளர் தன்னுடைய வேலையை ஆரம்பித்தார்.

தொடர்ச்சி 17ம் பக்கத்தில்....

மாபெரும் பரிசுப்போட்டி

செந்தணல்

சென்தனல் SENTHANAL

மாபெரும் பரிசுப்போட்டி

# மாபெரும் பரிசுப்போட்டி

பெயர்: ____________________

வயது: ____________ பிரதேசம்: ____________

முகவரி: ____________________

எதிர்வரும் சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு செந்தணல் வாசகர்களுக்காக மாபெரும் பரிசுப் போட்டியை நடாத்துகிறது.

*வாசகர்களே நீங்களும் பரிசு பெறப்போகிறீர்களா?*

அவ்வாறாயின்
செந்தணலின் 7வது இதழில் இருந்து ஒவ்வொரு இதழையும் தவறாது படியுங்கள்.

**சித்திரமும் சிறுகதையும் (16 வயதிற்கு மேற்பட்டோர்)**
**சிறுவர் புதிர்ப்போட்டி (9 வயது முதல் 16வயது வரை)**
**வர்ணம் தீட்டும் போட்டி (6வயது முதல் 16 வயதுவரை)**

போன்றவற்றில் இருந்து கேள்விகள் கேட்கப்படும் நீங்கள் செய்யவேண்டியது பரிசுப்போட்டியுடன் இணைக்கப்பட்டுள்ள செந்தணலின் சின்னங்கள் (50) ஐம்பதினை கேள்விகட்கான விடைகளுடன் இணைத்து அனுப்ப வேண்டும். கேள்விகள் சித்திரை மாதத்தில் கேட்கப்படும்

பெறுமதிவாய்ந்த **மூன்று**

**கணினி ஒன்று**
**வயலின் ஒன்று**
**ஓர்கன் ஒன்று**

**முதல்பரிசுகள்**

**10 ஆறுதல்பரிசுகளும்**



☞ சி.சி முதல்பரிசு கணினி ஒன்று ☞ பு.போ முதல்பரிசு வயலின் ☞ வ.போ முதல்பரிசு ஓர்கன்

மூன்று பெறுமதிவாய்ந்த முதல் பரிசுகளுடன் (10) பத்து ஆறுதல்பரிசுகளும் வழங்கப்படும். உங்களுக்கும் பரிசு வேண்டுமா செந்தணல் படியுங்கள்.

சிறுகதை 16ம் பக்கத் தொடர்...

## [கடலை நோக்கிய கன்னி]

அவர் மேரியைப் பார்த்து ''உமக்கு இந்தத் திருமணத்தில் பூரண சம்மதம் தானே'' எனக் கேட்டார் மேரி தூக்கத்தில் இருந்து விழித்தவள் போல் நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டாள் தன்னை அசுவாசப்படுத்திக் கொண்டாள் மனம் ''விடாதே பிடி இது தான் உன் கயிறு'' என்றது தலையைத் திருப்பிப் பார்த்தாள் வரிசையாய் அனைவரும் (அம்மா அப்பா......) தன்னை எச்சரித்து உறுத்து விழிப்பது போல் இருந்தது. அவளுக்கு அம்மாவும் அப்பாவும் பொலிடோல் போத்தலும் மாறி மாறி அவள் கண்முன் நிழலிட்டன கண்களை இறுக மூடித் திறந்தாள் பாரதியின் புதுமைப் பெண் பாடல் அவளுடைய செவிகளில் ரீங்காரம் செய்தன திருமணப் பதிவாளர் மீண்டும் கேட்டார் ''உமக்கு இந்த திருமணத்தில் சம்மதம் தானே'' என ''எனக்கு இந்த திருமணத்தில் துளி கூட விருப்பமில்லே'' என்றாள் ''மேரி என்னம்மா'' என மீண்டும் பதிவாளர் கேட்டார் மேரி தன் கதிரையை விட்டு எழுந்தாள் எனக்கு இந்தக் கலியாணத்தில சொட்டும் விருப்பமில்லே நா ஒருத்தர மனசார விரும்புறன் அவரு பெயரு அலக்ஸ் அவரத்தான் நா கட்டிக்குவேன் தவிர நா வேற யாரையும் கட்டிக்க மாட்டன் என்றாள். மிக அழுத்த திருத்தமாக. (பாரதி இருந்திருந்தால் உள்ளம் பூரித்திருப்பான் போலும்).

எல்லோரும் எழுந்து கொண்டார்கள் பதிவாளர் அப்பாவுடன் ஏதோ கதைத்தார் அம்மாவும் அப்பாவும் குனிந்த தலை நிமிரவில்லை அந்த மாப்பிள்ளை புதியவர் சுடு தண்ணிபட்ட நாய் போல குலைத்தார் வந்த சனங்களுக்கு அவல் கிடைத்தாற் போல் வெறும் வாயால் மேரியை வைதனர் மண வீடு பிண வீடு போலானது மேரி தன்னுடைய துணிச்சலை தானே மெச்சிக் கொண்டு வரவிருக்கும் பலத்த புயலை எதிர் கொள்ள தன்னை தயார் படுத்திக் கொண்டாள்.

ஒரு மூலையில் இருந்து ஓலமிடும் அம்மாவின் குரல் மட்டும் கேட்டது சிறிது நேரத்தில் மேரியினுடைய சாமான்கள் எடுத்து வெளியே வீசப்பட்டன மேரியின் தந்தை அவளின் தலை முடியைப் பிடித்து தரதர என இழுத்துக் கொண்டு போய் அவளை வெளியே தள்ளி விட்டு வாசல் கதவை படீர் என அடித்துச் சாத்தினார். ''இனி ஆரும் அந்த ஓடு காலியை பார்க்கவோ கதைக்கவோ போனால் வீட்டில கொல விழும்'' என அப்பா கத்துவது பெரிய சத்தமாக கேட்டது அண்டை வீட்டு தலைகள் எட்டி நோக்குவது தெரிந்தது மேரிக்கு பலத்த அவமானமாய் இருந்தது ஒரு பொருட்களையும் எடுக்காமல் வீதியில் இறங்கி மட மட என நடந்தாள்.

அலக்ஸ் மேரியைக் கண்டதும் திகைத்தான் ''இவள் எங்கே இங்க வர்றாள் இவளுக்கு தா கலியாணம் எண்டு எபனேஸ் அண்ண சொன்னார் என எண்ணி ''மே......ரி மேரி நீ நீ எங்க இப்ப என தடுமாறினான் ''அலக்ஸ்........'' என கூவியபடி அவன் கரத்தைப் பற்றி அழுதாள் மேரி ஏன் என்ன மேரி சொல்லிவிட்டு அழுதாத்தா நா ஏதும் செய்ய முடியும் அழாதே மேரி இப்போ என்ன ஆச்சின்னு அழறே அழாதே மேரி என அவளை அலக்ஸ் தேற்றினான் மேரி சிறிது நேரத்தில் தனது அழுகையை நிறுத்தினாள்ஆனால் விம்மலை நிறுத்த முடியவில்லை ''அல....க்....ஸ் நா வந்திட்டன் உன்னோட...... உன்னோட நா இனிமே போக மாட்டன் உன்னை விட்டு'' என கண்களைப் பொத்திக் கொண்டு அழுதாள் ''ஏன் மேரி என்ன சொன்னே வீட்ட விட்டே வந்துட்டியா?'' எனக் கேட்டான் ''ம் கூம்'' என தலையாட்டினாள் ''என்னை வேற ஒருத்தனுக்கு முடிக்க போனாங்க நா எல்லார் முன்னாலும் உன்னத்தான் நா கட்டிக்குவேன் என்டிட்டு வந்துட்டன்'' என்றாள்.

அலக்ஸ் அதிர்ந்து போனான் இவள் இப்படிச் செய்வாள் என்று கனவிலும் நினைக்க வில்லை ஏம்மேரி நீ இப்பிடிச் செய்திருக்கவே வேணா அவசரப் பட்டிட்டியே என்ன புள்ள இப்போ பண்றது என்றான் அங்கு மௌனம் நிலவியது மீண்டும் தொடர்ந்தான் ''நீ இப்புட்டு அவசரப் பட்டிருக்கவே கூடாது புள்ள நா இப்போ என்ன புள்ள பன்றது நீ அமைதியா எடுத்து நம்ம காதல சொல்லியிருக்கலாமில்ல இப்ப நா ஒண்ணோட வீட்டபோனா என்ன அப்பாவு வெட்டிப் போட்டிருவாரு அவருக்கு நம்ம காதல் ஏக்கனவே பிடிக்கல மேல இப்பிடி ஓடிப் போயிட்டா அவ்வளவு தா'' என்றான்.

''அலக்ஸ் நீயுமா என்ன கைவிட்டிடா நா என்ன பண்ண ஒன்ன விரும்பி அவனயா கட்டிக்கிறது'' என்றாள் உணர்ச்சி பொங்க ''இப்போ நீ வீட்டுக்கு போ மேரி நம்ம ஆறுதலா யோசிப்பம் எதுக்கும் விடிஞ்சுட்டா தெளிவா இருப்பா அம்மா அப்பாவ மீறி என்னால ஒண்ணும் செய்ய முடியாதுள்ளது'' என்றான்.

''ஏய் என்னய்யா சொன்னே உன்னால என்ன கட்டிக்க முடியாதுன்னா ஏன்யா என்ன காதலிச்சா உன்ன நம்பித்தானேய்யா என்ன இருபத்தோரு வருசமா உயிரா வழத்த அம்மா அப்பாவக் கூட உதறிப்போட்டு வந்தே ஏய்யா என்ன நீ உம்மையாவே நேசிச்சியா இல்ல அது கூட ஒனக்கு பொய் வெளயாட்டா ஓ.... சீர் செனத்தி ஒண்ணும் வராதே எண்ணு பார்க்கிறியா? ஏ அலக்ஸ் நாம ஒருத்தருக்கு ஒருத்தர் உசிர் வேறு ஒண்ணுமே வேணா எண்டு தானே முன்ன சொன்னாய்.

''ஸ் ஏன் மேரி கத்தறே இப்ப என்ன உன்ன கட்ட மாட்டே எண்டா சொன்ன புள்ள இப்ப இந்த நேரத்தில முடியாது எண்டு தானே நா சென்னன். இப்பத்தா கொஞ்ச உழைக்கிறே தங்கச்சிய முடிக்கணும் அதுக்கு சீர் சேக்கணும். உனக்கு விளங்க மாட்டே எங்குதே புள்ள இப்ப நம்ம முடிச்சுகிட்டா என் மனக் கோட்டை எல்லா மண்கோட்டையாயிரும் புள்ள'' என்றான் அலக்ஸ்

''அலக்ஸ் என்ன விளங்கிக்கே நா இனி எங்கே போவன் எல்லார் முன்னிலும் கலியாணம் வேணாம் என்டு அம்மா அப்பாவ அவமானப்படவச்சு நீதா எனக்கென்னு ஊரறிய பறைசாற்றி இதெல்லாம் எதனால எண்ணு யோசிச்சியா எல்லாம் உனக்காக தானே அலக்ஸ்'' என்றாள் கண்கள் பொழிய ''மேரி ஒன்ன நா மாட்டன் என்டா சென்ன இப்ப வீட்டுக்குப் போ புள்ள உன்னத்தா நா கட்டிக்குவே நம்புள்ள'' என்றான்.

தலையை சிலிர்த்துக் கொண்டாள் கண்களில் பொறி பறந்தது ''இப்ப என்ன உன்னோட அழைச்சுப் போக முடியுமா முடியாதா?'' என்றாள் ''என்ன மேரி திரும்ப திரும்ப சொன்னாலும் புரியமாட்டேன் என்றியேள்ள'' என்றான் அலக்ஸ் ''ம் புரிஞ்சுகிட்டன் என்ன மட்டுமில்லே உலகத்தையே நல்லாப் புரிஞ்சுகிட்டேன்'' என்றவள் விரக்தியுடன் விரைந்தாள்

காதலித்தவனை நம்பி வந்த அந்த மங்கை கைவிடப்பட்டவளாக பெற்றோரை உதறி உயிராய் நினைத்தவனும் தன்னை முடியாதென சிந்தித்தாள் கண்களிலிருந்து நீர் வழிந்தது. வீடும் இல்ல புகப்போன வீடும் புரியாமல் அவளை மறுத்து கடைசியாய் மண்ணின் மடியில் தன்னை மரணிக்க எண்ணி தமக்கு காதல் மலர்த்திய அந்தக் கடல் மாதாவின் மடியிலேயே கடைசி மூச்சையும் காணிக்கையாக்க அவள் மலர் பாதங்கள் நடந்தன புதையப் புதைய மணல் மேட்டில் போய் நீரில் காலை நனைத்தாள்

''மேரி மேரி ...மே...ரீ.....'' உரத்து சத்தமிட்டு எழுப்பினார் சிஸ்ரர் திடுக்கிட்டு எழுந்தாள் மேரி நேரம் 5.50 என்ன மேரி நல்லாத் தூங்கினியா என்றார் சிஸ்ரர் சரி சரி ஆயத்தமாகு 6.00 மணிக் கெல்லாம் போக வேணும் என்று கூறி விலகினார். ஆண்டவன் சித்தத்தை நினைத்து வியந்தாள் மேரி. சூரியன் தன் கதிர்களை சிறிது சிறிதாக நீட்டி பூமியை புதுப்பித்தான் ஆம் அன்றைய நாளில் மேரியும் புது மனுசியாய் புதுப்பிக்கப்பட்டாள் புதிய கதிர்களை போல் ஒளிவீசப்போகும் தன் புதிய வாழ்க்கைக்குள் நுழைய மேரி ஆயத்தமானாள்.

முற்றும்

# விளையாட்டுத்தகவல்கள்

# விளையாட்டில் 20ம் நூற்றாண்டு

நாடுகளிடைய பகைமை உணர்வுகள் தலை தூக்கியிருக்கும் வேளையில் விளையாட்டு தறை மேலும் சமாதானம் நட்புறவு சிறந்த புரிந்துணர்வு என்பவற்றை தோற்றுவிக்க முடியும் என்பதை ஒலிம்பிக் அமைப்பின் ஞானத் தந்தையான பாரேன் கூபேட்டின் உலகுக்கு உணர்த்தியதன் பிரகாரம் இன்று பல நாடுகளில் அரசியல் மற்றும் சமயங்களுக்கு அடுத்தபடியாக முக்கிய இடத்தை விளையாட்டுத் துறை பிடித்துள்ளது.

ஒலிம்பிக் கால்ப் பந்தாட்டம், கிரிக்கட், றகர், குத்துச்சண்டை, கோல்ப், பாட்மிட்டன் என பல்வேறுபட்ட விளையாட்டு நிகழ்ச்சிகளை சர்வதேச மட்டத்தில் இன்று பிரபல்யம் பெற்று விளங்குகிறது. இலங்கையில் கூட ஒரு கால கட்டத்தில் கிரிக்கட் ஆர்வம் குறிப்பிட்ட சில பிரதேசங்களில் மட்டுமே பிரபல்யம் பெற்றிருந்தது அத்துடன் வசதி படைத்தவர்கள் அத்துறையில் அதிக அக்கறையுடன் ஈடுபட்டு வந்தனர்

ஆனால் 1996 இலங்கை உலக சாம்பியனாகிய பின்னர் இலங்கையின் மூலை முடுக் கெல்லாம் கிரிக்கட் என்றால் என்ன என்று அறியாதவர்கள் கூட வானொலி அல்லது தொலைக்காட்சி மூலம் கிரிக்கட் போட்டிகளை ரசிக்கும் அளவுக்கு அது இங்கு பிரபல்யம் பெற்றுவிட்டது.

அவ் வரிசையில் கடந்த 100 வருடங்களில் விளையாட்டரங்குகளில் நடந்தேறிய முக்கிய நிகழ்வுகள்

1900) ஏற்பாட்டுக் குளுக்களிடையே மூண்ட கருத்து வேறுபாடுகளின் காரணமாக பாரிஸ் ஒலிம்பிக் போட்டிகள் குழப்ப நிலைக்கு ஆளானது அத்துடன் மழலைப் பருவத்திலிருந்த ஒலிம்பிக் அமைப்பும் ஊன்று கோலை ஏந்த



வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு தள்ளப்பட்டது. நல்ல வேளை பாரேன் கூடுபட்டின் ஒலிம்பிக் மழலையை செல்வச் செழிப்போடு வளர்த்துவிட்டதால் இன்று இவ்வமைப்பு விருட்சமாக விரிந்துள்ளது.

1902) இங்கிலாந்துக்கும் ஸ்கொட்லாந்துக்கும் இடையே நடைபெற்ற சர்வதேச கால்பந்தாட்டப் போட்டியின்போது பலகையினால் அமைக்கப்பட்டிருந்த அரங்கம் சரிந்ததில் 25 பார்வையாளர்கள் கொல்லப்பட்டனர்.

1910 உலக அதிபார குத்துச்சண்டை சாம்பியன் பட்டத்தை முதல் தடவையாக கறுப்பினத்தவரான ஜெக் ஜோன்ஸன் தனதாக்கிக் கொண்டார்

1924) முதலாவது பணிக்கால ஒலிம்பிக் போட்டிகள் சாமொயிக்ஸ் (பிரான்ஸ்) நகரில் அரங்கேறியது 100 மீற்றர் சாதாரண நீச்சல் 60 செக்கன்களுக்குள் நீந்திக் கடந்த பெருமையை ஜோனி வைஸ்மலர் பெற்றுக் கொண்டார்.

1949) ஆண்களுக்கான குழு நிலை பாட்மின்டன் போட்டிகளுக்கான அறிமுகப்படுத்தப்பட்ட தோமஸ் கிண்ணப் போட்டிகளில் மலாயா முதலாவது சம்பியனானது. இத்தாலியின் அதிசிறந்த கால்பந்தாட்ட சம்பியனாக விளங்கிய டொரினோ சம்பியனானது இத்தாலியின் அதி சிறந்த கால்பந்தாட்ட சம்பியனாக விளங்கிய டொரினா கழக வீரர்கள் பயணம் செய்த விமானம் விபத்துக் குள்ளாகியதால் கழகத்தின் 17 வீரர்களும் கொல்லப்பட்டனர்.

1955) மோட்டார் பந்தைய போட்டியின்போது இடம் பெற்ற மிக மோசமான விபத்தில் 82 பேர் கொல்லப்பட்டனர். இச்சம்பவம் லேமான்ஸ் என்ற நகரில் இடம்பெற்றது.

1958) இங்கிலாந்தின் அதி பிரபல்யமான கால்பந்தாட்ட கழகமாக விளங்கிய 1956-1957 களில் ஆங்கில



சம்பியனான மண்செல்டர் யுனைட்டெட் கழக வீரர்களை ஏற்றிச் சென்ற விமானம் மூனிச் விமான நிலையத்தில் விபத்துக் குள்ளானதில் 8 வீரர்கள் உட்பட25 பேர் கொல்லப்பட்டதுடன் கழகம் பாதிப்புக்குள்ளானது.

1954) முஹம்மட் அலி என பின்னர் பெயர் மாற்றம் பெற்ற கஸியெஸ்கியே உலக அதிபாரக் குத்துச் சண்டைபோட்டியில் சொனி விஸ்டனை தோற்கடித்து சம்பியன் பட்டத்தை சூடினார். அக்காலத்தில் இவ்விருவரும் குத்துச்சண்டைக் கோதாவில் இறங்குகிறார்கள் என்றால் முழு உலகமுமே முடிவு என்ன என்பதை எதிர்பார்த்திருக்கும் அந்த அளவுக்கு இவ்விருவரும் பிரசித்தி பெற்றவர்கள்

1971) முஹமட் அலியுடனான 15 சுற்று குத்துச்சண்டையில் ஜோ பழமேஸர் வெற்றிப்பெற்றார். இங்கிலாந்துக்கும் அவுஸ்ரோலியாவுக்கும் இடையே முதலாவது சர்வதேச முதலாவது ஒரு நாள் போட்டி விளையாடப்பட்டது.

1972) மூனிச் ஒலிம்பிக்போட்டியின் போது இரண்டு இஸ்ரோலிய விளையாட்டு வீரர்களை பச்சையாக கொன்ற பாலஸ்தீனிய கொரில்லாக்கள் மேலும் 9பேரை பணயக் கைதிகளாக்கினர். பின்னர் கொரில்லாக்களுக்கும் ஜெர்மன் பொலிஸாருக்கும் இடையே ஏற்பட்ட மோதலின் விளைவாக கொரில்லாக்கள் எஞ்சிய பணயக் கைதிகளையும் சுட்டுக் கொன்றனர்.

1974) ஸாங் ரேயில் நடைபெற்ற குத்துச்சண்டை போட்டியில் சம்பியன் ஜோர்ஜ் போர்மனை முகமட் அலி வெற்றி கொண்டு மீண்டும் சம்பியனானார்.

1975) முதலாவது உலகக் கிண்ண கிரிக்கட் போட்டிகளில் மேற்கிந்திய தீவு சம்பியன் ஆனது இறுதிப்போட்டியில் அவுஸ்ரேலியாவை 17 ஓட்டங்களால் மேற்கிந்தியதீவு பிறேஜரை முஹம்மட் அலி வெற்றிக் கொண்டார்.

1985 புறூசெல்ஸ் ஹைசெல் விளையாட்டரங்கில் நடைபெற்ற லீவர் பூல் ஜீவன்டஸ் அணிகளுக்கு இடையிலான ஐரோப்பிய கிண்ண கால்பந்தாட்டப் போட்டிக்கு முன்னதாக இடம் பெற்ற கலவரத்தில் 39 பேர் கொல்லப்பட்டனர்.

1991) கறுப்பின மக்களை அடக்கி ஆள முற்பட்டதன் காரணமாக பல தரப்பட்ட தடைகளுக்கு மற்றும் சர்வதேச கிரிகட் போட்டிகளுக்கு பற்று பங்கு பற்ற அனுமதி வழங்கப்பட்டது.

1992) பாலியல்வல்லுறவில் ஈடுபட்டமைக்காக மைக் டைக்ஸனுக்கு சிறை தண்டனை விதிக்கப்பட்டது பாகிஸ்தான் உலக கிரிக்கட் சம்பியனானது.

1993) ஸ்டெஃவி கிரஃவின் விசிரி என சந்தேகிக்கப்பட்ட ஒருவர் மொனிக்கா செல்ஸை கத்தியால் குத்தி பலத்த காயம் ஏற்படுத்தினார்.

1994) பனிச்சறுக்கல் போட்டியில் தனது ஏதிரணியான நான்ஸி கெரிகனுடை கால்களை முறிக்க சதித்திட்டம் தீட்டல் என்ற குற்றச்சாட்டுக்காக டோனியா ஹார்டிங் என்பவர் அப்போட்டியில் பங்கு பற்றுவதிலிருந்து தடை செய்யப்பட்டது. மோர்ட்டார் கார் பந்தயத்தின் போது விபத்துக்குள்ளாகி கோமா நிலையிலிருந்து மீளாமலே இறந்து போனார்.

1996) கிரிக்கட் உலகையே உலுக்கும் வகையில் இலங்கை உலகசம்பியனானது பாகிஸ்தான் லாகூர் விளையாட்டரங்கில் அவுஸ்ரோலியாவை 7 விக்கட்டுக்களால் படு தோல்வி அடையச் செய்ததன் மூலமே இலங்கை உலக கிண்ணத்தை வென்றெடுத்தது.

1997) இந்தியாவுக்கு எதிராக பிரேமதாஸ விளையாட்டரங்கில் நடைபெற்ற முதலாவது டெஸ்ட் போட்டியில் சனத் ஜயசூர்யாவும், ரொசான் மஹநாமாவும் இணைந்து இரண்டாவது விக்கட்டில் 576 ஓட்டங்கள் பகிர்ந்தன் மூலம் டெஸ்ட் கிரிக்கட் வரலாற்றில் புதிய இனையாட்ட உலக சாதணையை நிலைநாட்டினர். அதே போட்டியில் பெறப்பட்ட மொத்த எண்ணிக்கையான 952க்கு 6 விக்கட்களானது டெஸ்ட் மட்டத்தில் அதிகபட்ச மொத்த எண்ணிக்கை சாதணையாகவும் பதியப்பட்டுள்ளது.




## பதில்கள்

? - காதலில் தோல்வியுற்றால் ஆண்கள் தாடி வைப்பார்கள் - பெண்கள் என்ன செய்ய வேண்டும்?

ஜெயா
குருமன்காடு

பதில் - அவசியமே இல்லை பெண்களை காதல் தோற்கடிப்பதில்லை

? இலட்சியவாதிகள் ஆசைப்படக் கூடாதா திரிசூல்யாரே?

திவ்யா
மட்டக்களப்பு

பதில் - ஆசைப்படலாம் கொண்ட லட்சியத்தில்

? எப்போதும் தூய்மையாக இருக்க ஒரு வழி கூறுவீரா

பசுபதிவாணன்
திருகோணமலை

பதில் - ஐயய்யோ - இவ்வளவு நாளும் அழுக்காயே இருந்தீங்களா? நல்லா சவுக்காரம் போட்டுக் குளிங்க (மாரிகாலம் நீர் நிறையக் கிடைக்கும்)

? திருமணத்தின் போது அம்மி மிதிக்கிறார்களே சற்று விளக்கமாகக் கூறுங்கள்

அமிர்தா
அமிர்தகழி
மட்டக்களப்பு

பதில் - அடிமேல் அடியடித்தால் தானாம் அம்மி நகரும் (சற்று பருமனாக இருந்தால் கூட துணிவாக காலைத் தூக்கி வையுங்கள் அமிர்தா)

? சேது போன்ற ஒருவர் என்கணவனாக வேண்டும் என நீண்ட நாள் ஆசை

மஞ்சரி
வெள்ளவத்தை

பதில் - மஞ்சரி நீங்கள் அபிதாவாக வேண்டுமே

? மிகவும் வேகமானது துப்பாக்கியா அம்பா

மயூரி
மருதானை

பதில் - பெண்ணின் விழி வீச்சு

# மனிஷாவின் ஆசை





# திக்திக்கும் திரை




சதா

தனது நடிப்புத்திறமை முழுவதையும் காட்டி தேசிய விருதைப் பெற்றுவிடுவதற்காக பாலிவூட்டில் போராடி வருகிறாராம் மனிஷா கொய்ராலா. இன்னும் மூன்று வருடங்களிற்குள் ஆழமான கருத்துள்ள படத்தை இயக்கி விட முடிவு செய்திருக்கிறாராம்.

## ஆலமரத்தின் விழுதும் உறுதியானது.

இன்றைய தேதியில் தமிழ்படத்தயாரிப்பாளர்களின் நம்பிக்கை நட்சத்திரமாக பிரகாசித்து வரும் சிம்பு கோவில் திரைப்படத்தை அடுத்து இந்தியன் தியேட்டஸ் சார்பாக கிருஷ்ண காந்த் தயாரிப்பில் எஸ்.எஸ்.ஸ்டான்லி இயக்கும் ''மன்மதன்'' படத்தில் நடிக்கவுள்ளாராம். இது பொங்கல் விருந்தாக மலரவிருக்கிறது. இன்றைய தேதியில் இளைய நட்சத்திரப்பட்டியலில் சம்பளம் வியாபாரம் இரண்டிலுமே முன்னணியில் இருக்கிறார் சிம்பு . அப்பா T.R.ப்போல இவரும் தன்னம்பிக்கை நாயகனாக தன்னை நிலைநிறுத்தி விடுகிறார்.

## தமிழ் சினிமாவின் டெண்டுல்கர்





தேவதையைக் கண்டேன்



தனுஷ் - ஸ்ரீதேவி

அன்று எந்தவித ''Redmark''ம் இல்லாமல் ''பரட்டையாக'' ஆரம்பித்த ரஜனிதான் பின்னாளில் சூப்பர் ஸ்டாராக பிரகாசித்தார். அதே போல இப்போது சாதாரண இளைஞனாக அறிமுகமாகி இருக்கும் தனுஷ் ஆரம்பத்திலே வெற்றிகளை குவித்து வருகிறார். இந்திய அணியின் நம்பிக்கை நட்சத்திரமான டெண்டுல்கர் ரண்களை விளாசி சென்சுரிகளை குவிப்பதைப் போன்றே சினிமாரசிகர்கள் தனுஷை சினிமாவின் டெண்டுல்காராக விசிலடித்து ரசிக்கிறார்கள் தமிழ் சினிமாவில் புரட்சிகரமான மாற்றங்கள் நிகழும் என்பதை தனுஷின் வெற்றி நிதர்சன மாக்கியுள்ளது.

## விக்ரம் சூர்யா மோதல்

விக்ரம், சூர்யா என இரண்டு கதாபாத்திரங்களை இணைத்து ''பிதாமகன்'' கதை நகர்கிறது. லைலா மாணவியாக வருகிறார். சூர்யா லைலாவைக் காதலிக்கிறார். அது விக்கிரமிற்கு பிடிக்காது. இந்தப் படத்திலே இரண்டுபேரும் மிரட்டலான கரக்டரில் வருகிறார்கள். விக்ரம் ரொம்ப சீரியஸ். ஆனால் சூர்யா ஜாலியான ஆள் நன்றாக நகைச்சுவை பண்ணுபவர் இவர்களிற்கிடையே காரசாரமான மோதல் வருகிறது. அந்த மோதல் எப்படி முடிவடைகிறது என்பது தான் சஸ்பென்ஸ்.

படம்: காதல்டாட்காம்



பிரசன்னா - ராதிகாசௌத்திரி

படம்: உன்னைச் சரணடைந்தேன்



வெங்கட்பிரபு- மீராவாசுதேவன் - சரண்





## எல்லாமே ட்ராமாதான்

பிரகாஷ்ராஜ் ''நாம்'' படத்தை தொடர்ந்து ''எல்லாமே ட்ராமா தான்'' என்ற படத்தை தயாரிக்கிறார். லட்சியத்திற்காக போராடிக் கொண்டிருக்கும் இளைஞனிற்கும் முற்போக்கு எண்ணங்கள் கொண்ட இளம் பெண்ணுக்கும் ஏற்படும் நட்பு கலந்த உறவை வித்தியாசமான கோணத்தில் சொல்லும் இப்படத்திற்கு ரமேஷ் விநாயகம் இசையமைக்கிறார். நாயகனாக Five Star படத்தின் ஹீரோ பிரசன்னாவும் நாயகியாக கேரளத்து வரவு நவ்யா நாயரும் இணைகிறார்கள்.



மீனா

எங்களைப் புண்படுத்துவது தப்புதானே...









# போர்க்கப்பல்களின் தளபதி



# சட்டத்தின் பிடியில்

அவுஸ்திரேலியா சமூகசேவகர் க்ரஹாம் ஸ்டெயின்ஸ் மற்றும் அவரது மகன்களை கோரமாகப் படுகொலை செய்ததற்காக தாராசிங்கும் மற்றும் 12 பேரும் குற்றவாளிகள் என இந்திய மத்திய புலனாய்வுத்துறை சிறப்பு நீதிபதி மகேந்திரனாத் பட்நாயக் போனவாரம் தீர்ப்பளித்தார். கொலைக்குற்றத்தை உறுதிசெய்த நீதிமன்றம் தண்டனை என்னவென்று சொல்லவில்லை. அதை செப்ரெம்பர் 22ம் திகதிக்கு ஒத்திவைத்துள்ளது. நம்பிக்கையுடன் இருக்கும் அரச தரப்பு தாராசிங்கிற்கு ஆயுள்தண்டனை கிடைக்குமா அல்லது மரணதண்டனை கிடைக்குமா என்று விவாதித்துக்கொண்டிருக்கின்றது.



200 கிலோமீற்றர் சுற்றளவில் செல்லும் கப்பல்களை தாக்கிஅழிக்கக்கூடிய கிளப்ரக ஏவுகணைகள் உட்பட பலவிதமான ஏவுகணைகளைக்கொண்டிருக்கும் INS தல்வார் ஒரு சாதாரண போர்க்கப்பல் அல்ல. உலகில் உள்ள மத்தியரகப்போர்க்கப்பல்களிலேயே மிக அதிக ஆயுதபலம் கொண்ட கப்பல் ஏவுகணைகளை வழிமறித்துத் தாக்கும் அதிவேக ரொக்கெட், கப்பலின் வெளிப்புறத்தில் இருந்து சுடக்கூடிய நீர்மூழ்கி ஏவுகணைகளைக் கொண்டிருக்கிறது தல்வார். போர்கப்பல்களின் தளபதி என்று வர்ணிக்கப்படும் தல்வார்வகைப் போர்க்கப்பல்கள் தரை இலக்குகள் மீதான தாக்குதல்களிற்கே பிரதானமாகப் பயன்படும். கண்காணிப்புக்கருவிகளின் கண்ணில் மண்ணைத்தூவி விட்டு ஏவுகணைகளையும் ஏமாற்றிவிட்டு இரகசியமாய் இலக்கைத் தாக்கக்கூடிய தொழில்நுட்பம் கொண்ட மூன்று போர்க்கப்பல்கள் இந்தியக்கப்பல்படையில் சேரவிருக்கின்றன. இதில் முதல்கப்பல்தான் தல்வார்.

# சித்திரமும் சிறுகதையும்



**நீங்களும் எழுதலாம்**


இப்படத்திற்குப் பொருத்தமான குட்டிக்கதையினை எழுதி அனுப்புங்கள் சிறந்த கதை பிரசுரிக்கப்படுவதுடன் பரிசும் வழங்கப்படும். அத்துடன் நீங்களும் சித்திரம் வரைந்து அனுப்பலாம்.

அனுப்ப வேண்டிய முகவரி: **"சித்திரமும் சிறுகதையும்"**

**செந்தணல்**

இல. 61, கற்குழி, வவுனியா.

# ஃபிரான்ஸிஸ் கொப்போலா



சினிமா வரலாற்றில் (காட்ஃபாதர்) God Father என்ற திரைப்படத்திற்கு நல்ல வரவேற்பும் அங்கீகாரமும் இருந்தது எல்லோரும் அறிவோம்.

அந்தப்படத்தை இயக்கிய பிரபல ஹாலிவுட் இயக்குநர் பிரான்சிஸ் கொப்போலா தற்போது சிறுகதைகளுக்காக ஒரு இன்டர்நெட் பத்திரிகைதொடங்கி வெற்றிகரமாக நடத்திக்கொண்டிருக்கிறார்.
திரைக்கதையைப்படிப்பது என்னைப்போன்ற திரைப்பட இயக்குநர்களுக்கு அலுப்பைத் தருகிற விஷயம்.

திரைக்கதையைப்படிப்பது அடுத்தடுத்து வருவதை இயந்திர கதியில் சித்தரிக்கும். திரைக்கதையைவிட ஒரு நல்ல சிறுகதை படிப்பது மன நிறைவையும் உற்சாகத்தையும் தருகிறது என்கிறார் கொப்போலா. 'சைக்கோ' போன்ற புகழ் பெற்ற படங்கள் சிறுகதையிலிருந்து தான் உருவாகியது என்பதையும் இந்த இயக்குநர் சுட்டிக்காட்டுகிறார்.
உலகில் எல்லா நாடுகளிலிருந்தும் ஏழாயிரத்துக்கும் மேற்பட்ட அறிமுக எழுத்தாளர்கள் உற்சாகமாக பங்கு பெறும் இந்த மின் இதழில் பிரசுரமாகும் ஒவ்வொரு கதையும்,அது பற்றிய விமர்சனமும் முப்பது நாள் இன்டர்நெட்டில் இருக்கும்.

இதில் வெகுவாகப்பாராட்டப்பட்டவை கொப்போலா அச்சடித்து வெளியிடும் இலக்கியப்பத்திரிகையிலும் வெளியிடப்படும். வருடா வருடம் சிறந்த சிறுகதைகளின் தொகுப்பும் கொண்டு வருகிறார்.
நாங்கள் இந்த தகவல் பக்கத்தில் போடும் ஒரே ஒரு கதையாவது நல்ல திரைப்படமானால் எனக்கு மகிழ்ச்சி என்கிற கொப்போலா தற்போது சிறுகதைகளோடு குறுநாவல்களையும் வரவேற்கின்றார். இலக்கியத்தை நேசிக்கும்
இயக்குனர்கள் இங்கேயும் இருக்கிறார்கள் என்பது தெரியும். அதில் யார் கொப்போலா என்றுதான் தெரியவில்லை






இப்பத்திரிகை இல 61, கற்குழி, வவுனியாவில் அமைந்துள்ள சூரியன் வெளியீட்டகத்தினர்காக இல. 315, ஜம்பட்டாவீதி, கொழும்பு 13ல் அமைந்துள்ள ஈ குவாலிட்டி கிரபிக்ஸில் அச்சிட்டு 25-10-2003 அன்று வெளியிடப்பட்டது.